விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆனி 23 வெள்ளிக்கிழமை (07.07.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 200

## புதிய அரசியலமைப்பு தேவையில்லை

# மகா நாயக்கர்கள் முடிவை சுதந்திரக்கட்சி மீறாது!

## அமைச்சர் மகிந்த சமரசிங்க அறிவிப்பு



(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு தேவையில்லை என்று மகா நாயக்க தேரர்களின் தீர்மானத்துக்கு முரணாகவும் இராணுவத்தினரைப் பாதிக்கும் வகையிலும் நல்லாட்சி அரசாங்கம் எந்தவொரு முடிவையும் எடுக்காது என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அறிவித்துள்ளது. (23-ம் பக்.)

மாணவர் உயிரிழப்பு

### 5 பொலிஸாரின் பிணை நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்னர் உயிரிழ 24

ஊழல் விசாரணை

### ரூ. 3 இலட்சம் செலவாகியது

(யாழ்ப்பாணம்)

வட மாகாண அமைச்சர்களின் ஊழல் விசாரணைகளுக்கான செலவு ரூபாய் 3 இலட்சத்து 21 ஆயி 23

### வடக்கு சபை மீளாய்வு அமர்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் மூன்றரை ஆண்டு கால செயற்பாடுகள் தொடர்பில் மீளாய்வு செய்வதற்கான அமர்வு எதிர்வரும் 21-ம் திகதி நடை 23

### ஐ.நா அதிகாரி இலங். விஜயம்

(கொழும்பு)

மனித உரிமைகள் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையிடலாளர் பென் எம 23

### மகா சங்கத்தினர் ஜனாதிபதியுடன் நேற்று சந்திப்பு

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பின் மாதிரி சட்டமூலத்தை தயாரிப்பதாயின் அது தொடர்பாக மகா சங்கத்தி 23

### ஜனாதிபதிக்கு உரிமையில்லை

(கொழும்பு)

மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை மீறி அரசியலமைப்புத் திருத்தங்களை மேற்கொள்ள ஜனாதிபதிக்கு உரிமையில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய 23

காணாமல் போனோர் சட்டமூலத்தால்

## மகிந்த, கோத்தா, முப்படையினரின் உயிர்களுக்கு பேராபத்து ஏற்படும்

### கூட்டு எதிரணி அச்சம்

(கொழும்பு)

வலிந்து காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையை அங்கீகரிப்பதன் ஊடாக போரை முடிவுக்கு கொண்டுவந்த முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் முப்படையினரின் உயிர்களுக்கு பேராபத்து ஏற்படும் என கூட்டு எதிரணி அச்சம் வெளியிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன இந்தத் தகவலை நேற்று தெரிவித் 24

### சபையில் சயந்தன் கேலி!

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினரான கேசவன் சயந்தன், வந்ததற்கு ஒரு பாட்டாவது 23

மக்கள் கருத்து
உங்கள் கருத்துக்களை வலம்புரியில் பதிவு செய்யுங்கள்
வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிராகச் செயற்படும் உறுப்பினர்கள் பற்றி உங்கள் கருத்துக்கள் என்ன?
வைபர் செயலி : 076 636 3378
தொலைபேசி : 021 567 1530
மின்னஞ்சல் : valampurii@yahoo.com

முதல்வரின் விசாரணைக்குழு வேண்டாம்

## தெரிவுக்குழுவை கோரி பரஞ்சோதி பிரேரணை

(யாழ்ப்பாணம்)

வட மாகாண அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள தெரிவுக்குழு அமைக்கப்பட வேண்டும் என கோரும் பிரேரணை அடுத்த அமர்வுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரேரணை தொடர்பில் விவாதிப்பதோ? தீர்மானம் மேற்கொள்வதோ? தேவையற்றது என்ற முதலமைச்சரின் முடிவையும் மீறி இப்பிரேரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வட மாகாண சபையின் 98-வது அமர்வு நேற்று நடைபெற்றது. இதன்போது உறுப்பினர் பரஞ்சோதியினால் கொண்டுவரப்பட்ட குறித்த பிரேரணையை அனுமதிப்பதா இல்லையா என்ற விடயம் சபையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

வட மாகாண மீன்பிடி அமைச்சர் மற்றும் சுகாதார 23

### ஹயஸ் மோதி ஒருவர் பலி

(குருமன்காடு)

வவுனியா கனகராயன்குளம் ஏ9 வீதியில் ஹயஸ் வாகனத்தில் மோதுண்டு மரக்கறி கொண்டு சென்ற குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்து 23

## வட மாகாண முதல்வருடன் தமிழிசை நேற்று சந்திப்பு



23

### தேர்தலை தவிர்ப்பின் போராட்டம்



(கொழும்பு)

மூன்று மாகாண சபைகளின் பதவிக் காலம் 24

### பொருத்து வீடு; சபை விவாதம்

(கொழும்பு)

அரசியல் இலாபங்களை ஒதுக்கிவிட்டு மக்களுக்காக மட்டும் பேசுங்கள் என இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க 23

மாற்று சக்தி மின்நிலையத்தில்

## 2 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு

(கொழும்பு)

மாற்று சக்தி மின் நிலையத்தில் வடக்கில் உள்ள 2ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி வள அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார். 24

## ஏகாதிபத்திய ஆட்சிக்கு இடமில்லை - ஜனாதிபதி

(கல்கமுவ)

2015 ஜனவரி மாதம் 08 ஆம் திகதி இந்த நாட்டிலிருந்து ஏகாதிபத்திய ஆட்சிக்கு தான் முடிவுகட்டியதாகத் தெரிவித்துள்ள ஜனாதிபதி, அத்தகைய ஆட்சிக்கு இந்த நாட்டில் மீண்டும் இடம் கிடையாது எனத் தெரிவித்துள்ளார்.

முகமூடியைப் போட்டுக்கொண்டு மக்களுக்கு அழகானதொரு உலகைக்காட்டி மீண்டும் அதிகாரத்திற்கு வருவதற்கு சிலர் மேற்கொண்டுவரும் சதித்திட்டங்கள் குறித்து இன்று நாட்டு மக்கள் தெளிவுடன் இருப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நேற்று முற்பகல் கேகாலை கல்கமுவ பிரதேசத்தில் இடம்பெற்ற ஒரு நிகழ்வில் 24

## மகாநாயக்கர்களுக்கு தெளிவுபடுத்துங்கள்!

### ஜே.வி.பி வலியுறுத்து

(கொழும்பு)

சரியான தெளிவுபடுத்தல்கள் இல்லாமையாலேயே மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்டவர்கள் புதிய அரசியல் யாப்பு உருவாக்க பணிகளை எதிர்ப்பதற்கு காரணமாக அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி), புதிய அரசியலமைப்பு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதிரை மரக் கடத்தல் முறியடிப்பு; இருவர் கைது

(மல்லாவி)

மன்னார் மடுக் காட்டுப் பகுதியில் இரு வெவ்வேறு விதமான சட்டவிரோத நடவடிக்கையின் போது, அனுமதியின்றி முதிரை மரங்களை வெட்டி அதனை தீராந்திகளாகவும் மரக் குற்றிகளுமாக்கி வாகனங்களில் கடத்திய போது அவை கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மடுப் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

கடந்த செவ்வாய்க்கிழமை மடுப் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து மடுப் பொலிஸார் இரு வேறு இடங்களில் திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்ட போதே சட்டவிரோதமான முறையில் கடத்தப்பட்ட மர தீராந்திகள் மற்றும் மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தின் போது, கைதான ஒரு சந்தேக நபரிடம் இருந்து சுமார் 05 இலட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை மரக்குற்றிகளும் மற்றைய சந்தேக நபரிடம் இருந்து ஓர் இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் பெறுமதியிலான முதிரை மர தீராந்திகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் மடுப் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக மடுப் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-15)

# பௌர்ணமி விழா

(கரவெட்டி)

கரவெட்டி கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத்தின் பௌர்ணமி விழா நாளை சனிக்கிழமை மாலை 6.45 மணிக்கு நிலையத் தலைவர் சி.ஜி.திருமாலழகன் தலைமையில் ஜெயச்சந்திரன் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை ஆசிரியர் தர்மராசா தவராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இதில் சிறப்பு நிகழ்வாக பல்குரல் வித்தகர் ஆறுமுகம் சண்முகநாதனின் பல்சுவை கதம்ப நிகழ்ச்சி நடைபெறும். (செ)


**விற்பனையாளர் தேவை**

O/L, A/L படித்த ஆண்கள்,
புடைவை வியாபாரம் பழகுநர் தேவை.
நேரில் வரவும்.

**சிவகணேசன் ரெக்ஸ்**
41, பெரியகடை, யாழ்ப்பாணம். (9715)


# ஜனாதிபதிக்கு அச்சுறுத்தல்

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சிக்கு வந்தால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அவரது குடும்பத்தினரின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது. ஜனாதிபதி வெளிப்படையாக இதனை தெரிவித்துள்ளார்.

எனவே அரசாங்கம் என்ற வகையில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினரும் அமைச்சருமான மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வாராந்த செய்தியாளர் சந்திப்பு நேற்று கட்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (செ-11)


**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 12 . 03 . 1954



மறைவு 19 . 06 . 2016

அமரர்
**முத்துச்சாமி பாலசுப்பிரமணியம்**
(மீசை ராசன்)

இல்லச் சோலையில் நிழல் தந்த ஆலமரமே
விழுதுகள் நாம் அந்தரத்தில் தவித்திட
அவசரமாக விண்ணுலகம் சென்றதேனோ!
பாசவலையில் எம்மை பிணைத்து
பார் போற்ற வாழவைத்த தெய்வமே
துன்பம் வரும்போதெல்லாம் – அப்பாவின்
நினைவு மட்டுமே ஆறுதல் தருகின்றது
உரத்த குரலோசைக்கு சொந்தமான அப்பா
எம்மை விட்டு சென்று இன்று ஓராண்டானதோ!
அப்பாவின் ஆத்மா அமைதி பெற
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

எங்கள் அப்பாவின் ஓராண்டு நிகழ்வான இன்று (திதி : 07.07.2017) வெள்ளிக்கிழமை இடம்பெறும் நிகழ்வில் உறவுகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நிரு களஞ்சியம்,
டச்சு வீதி,
சித்தன்கேணி

(C-8981)

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்



**நீங்காத நினைவுகளில்**

**11ஆம் ஆண்டு** **1ஆம் ஆண்டு**



எமக்கு உயிர் ஈந்து, உருவளித்து, உடல்தந்து,
உலகிலே உத்தமராய் நாம் வாழ வேண்டு
மென்று இலட்சியத்தோடு வளர்த்தெடுத்து
இல் வாழ்வும் காட்டி ஆளாக்கிய தாய்
தந்தையே! எந்தத் திசையிலும் உங்கள்
முகமே எமக்கு தோன்றுகின்றது. எம்மை
அரவணைத்திட நீங்கள் மீண்டும்
வரவேண்டும். அம்மா உந்தன் மடிசாய்ந்
திட நூறு ஜென்மம் போதாது, நித்தம்
நித்தம் உந்தன் அன்பை பெற்றுவிட
மீண்டும் ஒரு ஜென்மம்
எமக்கு வேண்டும் அம்மா



**திரு.தாமோதரம்பிள்ளை குமாரரையா**

**திருமதி குமாரரையா செல்வநாயகியம்மா**

(முன்னாள் பிரபல வர்த்தகர் – தண்ணீரூற்று)

எதிர்வரும் 09/7/2017 ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் எமது தாய் தந்தையின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தண்ணீரூற்று, முள்ளியவளை.
0773757448

(C-8980)

இங்ஙனம்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதத்தை தூண்டி நாட்டின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்க சிலர் முயற்சித்து வருகின்றனர்

## பிரதமர் ரணில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இனவாதத்தை தூண்டி நாட்டின் ஸ்திரத்தன்மையை சீர்குலைப்பதற்கு சிலர் முயற்சிப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இலங்கையில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் சமாதானமாக வாழக்கூடிய ஓர் சூழ்நிலையை நாம் உருவாக்கியுள்ளோம் என பிரதமர் நேற்று முன்தினம் பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

சில ஊடகங்களும் இனவாதத்தை தூண்டும் வகையில் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ள பிரதமர் இனவாத, மதவாத கருத்துக்களை தூண்டும் வகையில் சில ஊடகங்கள் செய்தி அறிக்கையிடுவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்,

அனைத்து பொலிஸ் பிரிவிலும் பகலிலும் இரவிலும் வீதி ரோந்துகளை மேற்கொள்வதன் மூலமும் மக்களை தெளிவுபடுத்துவதன் மூலமும் நிலைமைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம் என அவர் தெரிவித்தார்.

இஸ்லாமிய பள்ளிவாசல்கள் மற்றும் பௌத்த விகாரைகளுக்கு ஏதேனும் சேதம் விளைவிக்கப்பட்டால் அதற்கு நிவாரணங்களை வழங்குவது தமது கொள்கையாகும் என குறிப்பிட்டுள்ள பிரதமர் இவ்வாறு குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களை பாதுகாக்க எவரும் முயற்சிக்கக் கூடாது எனவும் தெரிவித்தார். (இ-7)

குடற்புண்ணிற்கு (அல்சர்) நிரந்தரசிகிச்சை

Special Treatment for Gastric Ulcer

சடுதியாக அல்லது நாட்பட்ட நிலையில் ஏற்பட்ட இரைப்பை, சிறுகுடல் விரணங்கள் (Acute or Chronic Gastric & Peptic Ulcer),வயிற்றுவலி, வயிற்றில்எரிவு, சமிபாட்டுவேளைவலி, அடிக்கடி பசியுணர்வு, நெஞ்செரிப்பு, புளித்தஏப்பம், வாயில் மணம், காலையில் பித்தவாந்தி அல்லது வாந்தியுணர்வு, உணவில் வெறுப்பு அல்லது பசியின்மை, தொடர் விக்கல், கல்லீரலில் அதிகொழுப்பு, ஈரல் வீக்கம் (Fatty & Enlarged Liver), மற்றும் மலச்சிக்கல் அல்லது அடிக்கடி மலம்கழிக்கும் உணர்வு (Irritable Bowel Syndrom), உடற்பலவீனம், அமைதியின்மை, களைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவ ஆலோசனைகளுடன் கூடிய சிகிச்சை களால் நிரந்தர குணம்பெறலாம்.

ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251

# காணாமற்போனோர் குறித்த சட்டமூலம் விலக்கிக் கொள்ளப்படவில்லை-அரசு

(கொழும்பு)

**வடக்கு-கிழக்கில் பலவந்தமான முறையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பாதுகாப்பிற்கான சர்வதேச ஒப்பந்தம் குறித்த சட்டமூலப் பிரேரணை விலக்கிக் கொள்ளப்படவில்லை என சபைமுதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல விளக்கமளித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், காணாமற்போனவர்கள் தொடர்பான விசேட சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாவிட்டாலும் சபை ஒழுங்குப் பத்திரத்தில் இடம்பெற்றுள்ளது. எனவே பிரேரணை விலக்கிக் கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களை ஏற்க முடியாது.

இது தொடர்பாக ஊடகங்கள் தவறான செய்திகளைப் பரப்பி வருகின்றன எனவும் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

காணாமற் போனவர்கள் தொடர்பான சட்டமூலம் விலக்கிக் கொள்ளப்பட்டதாக தேசிய பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்த நிலையில் அமைச்சர் கிரியெல்ல மேற்கண்டவாறு விளக்கமளித்துள்ளார்.(இ-7)

## கவனயீர்ப்பு தொடர்கிறது



காணாமல் போனோரின் உறவினர்களால் யாழ்.மருதங்கேணி பிரதேச செயலகம் முன்பாக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று 114 ஆவது நாளாக மேற்கொள்ளப்பட்டது. (இ-60)

## சட்டத்தரணிகள் பணிப்பகிஷ்கரிப்பு

நுவரெலியா மாவட்ட நீதிமன்ற சட்டத்தரணிகள் நேற்று பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நுவரெலிய மாவட்ட நீதிமன்றில் கனிஷ்ட சட்டத்தரணி ஒருவர் நேற்று நீதிபதியாக கடமையாற்றுகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே குறித்த பணிப்பகிஷ்கரிப்பு இடம்பெற்றுள்ளதாக நுவரெலியா மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பீ.இராஜதுரை தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட நீதிமன்றில் சிரேஷ்ட சட்டத்தரணிகள் பலர் இருக்கின்ற நிலையில் நேற்று பதில் நீதவானாக கனிஷ்ட சட்டத்தரணியொருவர் கடமையாற்றுகின்றமையானது பொருத்தமற்றது.

இவ்வாறான செயற்பாடுகளினால் சட்டத்துறையின் கௌரவம் பாதிப்படைகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஜனாதிபதியும் பிரதமரும் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை

### ரஞ்சன் ராமநாயக்க குற்றச்சாட்டு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனவரி மாதம் 8ஆம் திகதி அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்பதனால் அந்தக் கட்சியின் கள்வர்களும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் என்பதனால் அந்தக் கட்சியின் கள்வர்களும் காப்பாற்றப்படுகின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகத்தின் சம்பளக் கொடுப்பனவு குறித்த பாராளுமன்ற விவாதத்தில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கள்வர்கள் கட்சி நிற பேதங்கள் இன்றி தண்டிக்கப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ள அவர் அரசாங்கம் 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ம் திகதி கள்வர் களை பிடிப்பதாக வாக்குறுதி அளித்திருந்தாலும் அதனை உரிய முறையில் நிறை வேற்றத் தவறியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த உரையை ஆற்றியதன் பின்னர் இரண்டு கட்சிகளினதும் தலைவர்கள் தம்முடன் கோபிக்க கூடும் என்றபோதிலும் உண்மைகள் கசப்பானவை என்றாலும் அவற்றை வெளிப்படுத்த வேண்டியது அவசியமானது எனவும் ரஞ்சன் ராமநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.(இ-7)

# உமா ஓயா பிரச்சினையை தீர்க்க விமானத்தில் உதவி

## அமைச்சர் அமரவீர தகவல்

உமா ஓயா பிரச்சினையை தீர்ப்பதற்காக தேவையான உபகரணங்கள் விமானத்தின் மூலம் கொண்டு வரப்படவுள்ளதாக கடற்றொழில் நீரியல்வள அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

உமா ஓயா பிரச்சினையை தீர்ப்பதற்கான ஆய்வுகளுக்கு சில விசேட உபகரணங்கள் தேவைப்படுகின்றன.

குறித்த உபகரணங்களை விமானத்தின் மூலம் கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், உமா ஓயா பிரச்சினையை ஜனாதிபதியின் விசேட கவனத்துடன் தீர்ப்பதற்கு அரசாங்கம் திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (இ-7)

## ரூ.15 இலட்சம் பெறுமதியான கஞ்சா மீட்பு

கொழும்பு, பேலியகொட பகுதியூடாக, ஆட்டோவொன்றில் கடத்தப்பட்ட 15 இலட்சம் ரூபாய் பெறுமதியிலான 11 கிலோகிராம் நிறையுடைய கேரள கஞ்சாவைக் கைப்பற்றியுள்ள பேலியகொட பொலிஸார், சந்தேக நபர்கள் இருவரையும் நேற்றுக் கைது செய்துள்ளனர். (இ-7)

# சட்டம் ஒழுங்கு நிலைமை சீர்குலைந்திருப்பதற்கு பிரதமர் ரணிலே பொறுப்பு

### ஜனாதிபதி ஆணைக்குழு முன்னாள் செயலர் புகார்

(கொழும்பு)

நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைமை சீர்குலைந்திருப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே பொறுப்பு சொல்ல வேண்டுமென பாரிய மோசடிகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னாள் செயலாளர் லெசில் டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது சட்டம் ஒழுங்கு நிலைமை சீர்குலைந்துள்ளதாக குற்றம் சுமத்தியுள்ள அவர் இந்த நிலைமைக்கு தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவே பொறுப்பு சொல்ல வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அரசாங்கம் ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதனையே முதன்மை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது என சுட்டிக்காட்டிய அவர், 19ஆம் திருத்தச் சட்டம் கூட தற்போதைய அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்யும் நோக்கிலேயே உருவாக்கப்பட்டது என தெரிவித்தார்.

தேசிய அரசாங்கம் அல்லாத நிலையில் பாரியளவில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய கணக்காய்வு சட்டம் இது வரையில் நிறைவேற்றப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்த ஜனாதிபதி முன்வரத் தவறினால் அவரும் மக்களை ஏமாற்றியதாகவே கருதப்பட நேரிடும் என அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிக்வெல, குணதிலகவின் கன்னிச் சதங்களின் மூலம் சிம்பாப்வேயை 8 விக்கெட்டால் வென்றது இலங்கை




சிம்பாப்வே நிர்ணயித்த 311 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை எளிதாக இலங்கை அணி எட்டிப் பிடித்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான 3-வது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி அம்பாந்தோட்டையில் நேற்று நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. அதன்படி சிம்பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கியது. சிம்பாப்வே அணியில் தொடக்க வீரராக களமிறங்கிய சாலமன் மிர் 13 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மற்றொரு தொடக்க ஆட்டக்காரரான மஷகட்சா 98 பந்துகளில் 111 ஓட்டங்கள் விளாசினார். அவரை தவிர முசகண்டா 48 ஓட்டங்களும், சீன் வில்லியம்ஸ் 43 ஓட்டங்களும் எடுத்தனர். சிம்பாப்வே அணி 50 ஓவர் முடிவில் 8 விக்கெட இழப்பிற்கு 310 ஓட்டங்கள் குவித்தது.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் ஹசங்க, குணரட்ன ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களும் மலிங்க, பிரதீப், சணடகன் ஆகயோர் தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர்.

பின்னர் 311 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை அணி களம் இறங்கியது. தொடக்க வீரர்களாக டிக்வெல, குணதிலக ஆகியோர் களம் இறங்கினார்கள். இருவரும் தொடக்க முதலே அதிரடியாக விளையாடினார்கள். இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு அபாரமாக விளையாடி 37 ஓவரில் 229 ஓட்டங்கள் குவித்தது. இருவரும் தமது கன்னிச் சதத்தை அடித்தனர் டிக்வெல 102 ஓட்டங்களும், குணதிலக 116 ஓட்டங்களும் சேர்த்து ஆட்டமிழந்தனர்.






3-வது விக்கெட்டுக்கு மெண்டிஸ உடன் உப்புல் தரங்க ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி 47.2 ஓவரில் 312 ஓட்டங்கள் எடுத்து அணியை வெற்றி பெற வைத்தனர். மெண்டிஸ 25 பந்தில் 28 ஓட்டங்களும், தரங்க 32 பந்தில் 44 ஓட்டங்களும் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்து வீச்சில் சிம்பாப்வே அணி சார்பில் வில்லியம்ஸ், வெல்லர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்


இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் இலங்கை 2-1 என முன்னிலையில் உள்ளது.

இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக இலங்கையணியின் குணதிலக தெரிவு செய்யப்பட்டார்

4-வது போட்டி அம்பாந் தோட்டையில் 8ஆம் திகதி நடக்கவுள்ளது.

# சகீர்கானின் அறிவுரைதான் எனது சிறந்த பந்து வீச்சுக்கு காரணம்

## உமேஷ் யாதவ் கருத்து



சகீர்கானின் அறிவுரைதான் எனது சிறப்பான பந்து வீச்சுக்கு காரணம் என்று இந்திய வேகப் பந்து வீச்சாளர் உமேஷ் யாதவ் கூறியுள்ளார்.

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் உமேஷ் யாதவ். 29 வயதாகும் இவர் அவுஸ்திரேலியாவிற்கு எதிரான டெஸ்ட் தொடரில் அபாரமான பந்து வீச்சை வெளிப்படுத்தினார். அதன்பின் ஐ.பி.எல். தொடர், சம்பியன்ஸ் தொடரிலும் சிறப்பாக பந்து வீசினார்.

தற்போது நடைபெற்று வரும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான தொடரிலும் சிறப்பான வகையில் பந்து வீசி வருகிறார்.

நான் சிறப்பான வகையில் பந்து வீசுவதற்கு சகீர்கானின் அறிவுரை தான்காரணம் என்று உமேஷ்யாதவ் கூறியுள்ளார்.

இதுகுறித்து உமேஷ் யாதவ் கூறுகையில், தவறுகளில் இருந்து நான் தொடர்ச்சியாக பாடம் கற்றுக் கொண்டு வருகிறேன். இளைஞர்களாக உள்ளவர்கள் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. ஆனால், சகீர்கான் ஒரு விஷயம் சொன்னார், அது என்னவெனில், ஜூனியராக இருக்கும் போதும், இந்திய அணிக்கு புதிய வீரர்களாக அறிமுகமாகும்போதும், உங்களுடைய தவறுகளில் இருந்து வேகமாக பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். அப்படி செய்தால் உங்களுக்கு சிறந்ததாக இருக்கும் என்பது தான். அதை நான் முயற்சி செய்து நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறேன்.

நான் செய்த தவறுகளை உட்கார்ந்து ஆராய்வேன். அடுத்த போட்டியில் அதை சரிசெய்து நடைமுறைப் படுத்துவேன். அதனால் நேர்மறை முடிவும் கிடைக்கலாம். எதிர்மறையான முடிவும் கிடைக்கலாம். நேர்மறையான முடிவின் மீது அதிக கவனம் செலுத்த முயற்சிப்பேன். வலுவான மற்றும் பலவீனமானவற்றின் புள்ளிகளை குறித்து வைப்பேன். இதுதான் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு முக்கியத்துவம் என்றார்.

# அணித் தலைவராக அறிமுகமான முதல் டெஸ்ட் போட்டியிலேயே சதம் அடித்து அசத்தி ஜோ ரூட் சாதனை




அணித் தலைவராக அறிமுகமான போட்டியில் சதம் அடித்து இங்கிலாந்து அணித் தலைவர் ஜோ ரூட் சாதனை படைத்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரராக வலம் வருபவர் ஜோ ரூட். இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவராக இருந்த குக் ராஜினாமா செய்ததன் காரணமாக ஜோ ரூட் அணித் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் தலைமையில் இங்கிலாந்து அணி முதல் போட்டியில் நேற்று லார்ட்ஸ் மைதானத்தில் தென்னாபிரிக்காவிற்கு எதிரான முதல் டெஸ்டில் விளையாடி வருகிறது.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அதன்படி குக், ஜென்னிங்ஸ் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். குக் 3 ஓட்டங்களிலும், ஜென்னிங்ஸ் 8 ஓட்டங்களிலும், அதன்பின் வந்த பேலன்ஸ் 20 ஓட்டங்களிலும், பேர்ஸ்டோவ் 10 ஓட்டங்களிலும் வெளியேறினார்கள்.

இதனால் இங்கிலாந்து அணி 76 ஓட்டங்கள் எடுப்பதற்குள் நான்கு விக்கெட்டுக்களை இழந்தது. 5-வது விக்கெட்டுக்கு ஜோ ரூட் உடன் பென் ஸ்ரோக்ஸ் ஜோடி சேர்ந்தார்.

இந்த ஜோடி அணியை சரிவில் இருந்து மீட்டது. இருவரும் அரைச் சதம் அடித்து தொடர்ந்து விளையாடினார்கள். பென் ஸ்ரோக்ஸ் 108 பந்தில் 8 பவுண்டரி, 1 சிக்சருடன் 56 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார். இந்த ஜோடி 5-வ்து விக்கெட்டுக்கு 114 ஓட்டங்கள் குவித்தது.

அடுத்து ஜோ ரூட் உடன் மொயீன அலி ஜோடி சேர்ந்தார். ஜோ ரூட் 150 பந்துகளை சந்தித்து சதம் அடித்தார். இதன் மூலம் அணித் தலைவராக அறிமுகமான போட்டியிலேயே ஜோ ரூட் சதம் அடித்து அசத்தியுள்ளார்.

தற்போதைய சிறந்த வீரர்களான விராட் ஹோலி, அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்மித் ஆகியோரும் அணித் தலைவராக அறிமுகமான போட்டியிலேயே சதம் அடித்துள்ளனர்.

# சம்பியன்ஸ் டிராபி தோல்விக்குப்பின் பாகிஸ்தானை கண்டு இந்தியா பயப்படுகிறது - ஷகாரியார் கான்



சம்பியன்ஸ் டிராபியில் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் இந்தியா தோல்வியடைந்த பின், எங்களுடன் விளையாடப் பயப்படுகிறது என ஷகாரியார் கான் தெரிவித்துள்ளார்.

இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நேரடி கிரிக்கெட் தொடர் நடைபெற இருநாட்டு கிரிக்கெட் சபைகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது. எல்லையில் நடைபெறும் பதற்றத்தால் மத்திய அரசின் அனுமதி இல்லாமல் பாகிஸ்தானுடன் நேரடி போட்டி கிடையாது என்று பி.சி.சி.ஐ திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

ஆனால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷகாரியார் கான எப்படியாவது தொடரை நடத்திவிட வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வமாக உள்ளார்.

பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட அவருக்கு தோல்வியே கிடைத்துள்ளது. தற்போது இந்தியாவை வம்பிற்கு இழுக்கும் விதமாக, சம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடருக்குப்பின், பாகிஸ்தான் உடன் இந்தியா விளையாட பயப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

மேலும், ஷகாரியார் கான் இது குறித்து கூறுகையில், சம்பியன்ஸ் டிராபி தொடரில் நாங்கள் வெற்றி பெற்ற பின், இந்தியா இருநாட்டு தொடரில் எங்களுடன் விளையாட வேண்டும் என்ற சவால் விடுகிறோம். அவர்கள் எங்களுடன் விளையாடவில்லை. எங்களுடைய அணியை பார்த்து பயப்படுகிறார்கள். ஐசிசி போட்டியில் மட்டும் விளையாடுவோம். மற்றைய போட்டிகளில் விளையாடமாட்டோம் என்று கூறுகிறார்கள் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியல் சாசனம் தொடர்பில் ஜனாதிபதி தலையீடு செய்யக்கூடாது


## எல்லே குணவன்ச தேரர் எதிர்ப்பு

(கொழும்பு)

புதிய அரசியல் சாசனம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலையீடு செய்யக் கூடாது என எல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார். புதிய அரசியல் சாசனமொன்றை கொண்டு வருவதனால் நாட்டுக்குள் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும் எனவும் அவர் தெரிவித்தார்.

தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாநாடு ஒன்றில் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். 'மாற்றம் சுகமா' என்ற தொனிப் பொருளில் இந்த மாநாடு நடத்தப்பட்டுள்ளது.

மிகவும் குறுகிய காலத்தில் வெறுக்கப்பட்ட அரசாங்கம் இதுவேயாகும் என குறிப்பிட்டுள்ள அவர் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு புதிய அரசியல் சாசனம் வழியமைக்காது என அவர் தெரிவித்துள்ளார். (இ-7)



## அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 6893 கோடி ரூபா செலவிடப்படவில்லை

(கொழும்பு)

51 அமைச்சுக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 6893 கோடி ரூபா பணம் செலவிடப்படவில்லை என நாடாளுமன்றிற்கு வழங்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் ஆகிய மாதங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியே பயன்படுத்தப்படவில்லை.

அத்துடன், பாதுகாப்பு அமைச்சுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலும் 1010 கோடி ரூபா செலவிடவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், சுகாதார அமைச்சு 663 கோடி ரூபாவினையும் கல்வி அமைச்சு 752 கோடி ரூபாவினையும் உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு 420 கோடி ரூபாவினையும் மேல் மாகாண மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு 439 கோடி ரூபாவினையும் செலவிடவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சட்டம் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு 201கோடி ரூபாவினையும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு 360 கோடி ரூபாவினையும் நிதி அமைச்சு 32 கோடி ரூபாவினையும் செலவிடவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## கட்டார் தூதுவர்-பௌஸி சந்திப்பு

இலங்கைக்கான கட்டார் தூதுவர் ராஷித் ஷபீஃ அல் மர்ரி மற்றும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி ஆகியோருக்கிடையில் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.



நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்த சந்திப்பின் போது இரு நாடுகளுக்கிடையிலுமான, இருதரப்பு உறவுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக கட்டார் தூதரகம் தெரிவித்துள்ளது. (இ-7)


## மரண அறிவித்தல்



பிறப்பு: 03.11.1941
இறப்பு: 05.07.2017

### ஜோசப் அகஸ்ரின்
### (பொன்னுத்துரை)

இளவாலை நல்லாயன் வீதியைப் பிறப்பிடமாகவும் அம்மன் வீதி, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசப் அகஸ்ரின் (பொன்னுத்துரை) 05.07.2017 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோசப் றோசலின் தம்பதியரின் அன்பு மகனும் மேரிதிரேசாவின் அன்புக் கணவரும் மரிஸ்ரெலா (லண்டன்), றெறன்ஸ்(இத்தாலி), யூலியற் (இத்தாலி), ஜெனிற்றா (சுவிஸ்), சுகித்திரா (இலங்கை), சுரேஸ்(லண்டன்), ரின்சா(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்லத்துரை, சின்னத்துரை, அருமைத்துரை, வேவி, ராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் றொஜானி, றொணி, ஜெனா(சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும் மெல்றோஸ் (சுவிஸ்), லங்கராஜா, சோபிகா, லோகேஸ்வரன், செல்வக்குமார், சுவற்மன்(பொறியியல் உதவியாளர், முல்லைத்தீவு), அஸ்வினி, வாமதாஸ், நிக்சன் ஆகியோரின் அன்பு மாமனும் அபிநயா, சானுஷா, சானுகா, சோனியா, செரேனா, துஷாந், சேனுஜன், சுபித்தா, திஷான், டில்சான், சஜித், ஆருஸ், றோய், சுஜானி, டெனிஸ், ஜெரிக், சியாறா, சுடின் ஹர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் றோஸ்மலர், திருச்செல்வம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று 07.07.2017 வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப.10.00 மணியளவில் புனித கதிரைமாதா தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

அம்மன் வீதி,
பண்டத்தரிப்பு

(9707)

தகவல்:குடும்பத்தினர்.
சுவற்மன்(மருமகன்)-0777559769


## இராசி பலன்

07.07.2017
(ஆனி 23, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
திரயோதசி காலை 6.37 மணிவரை
கேட்டை பிற்பகல் 1.02 மணிவரை
சுபநேரம் 5.58 - 7.28 மணிவரை
இராகுகாலம் 10.28-11.52 மணிவரை
உலக கூட்டுறவாளர் தினம்

| | | | |
|---|---|---|---|
| | | சுக் | சூரி செவ் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் கார்த்திகை,ரோகினி மதியம் 1.16இற்கு தனுசு-சந் | | புதன் |
| | | | ராகு |
| | சனி சந் | | குரு |

வளவன்

**மேடம்** கடவுளை வழிபட்டு காரியம் சாதிக்க வேண்டிய நாள், அச்சுறுத்தல்கள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்** முக்கிய காரியங்களை காலைப் பொழுதே செய்து முடிப்பது நல்லது, அல்லல்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்** கல்யாணக் கனவுகள் நனவாகலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**கடகம்** உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பகையொன்று நட்பாகலாம், பழைய கடன்களை வசூலிக்க நடவடிக்கை எடுப்பீர்கள்.

**சிம்மம்** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிள்ளைகள் வழியில் பெருமைகள் வந்து சேரலாம்.

**கன்னி** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கடன்சுமை குறையும் நாள், வாகன பழுதுச் செலவுகள் குறையும், எடுத்த காரியத்தில் முன்னேற்றமுண்டு.

**துலாம்** நீண்ட நாளைய விருப்பமொன்று கைகூடும் நாள், இளைய சகோதரர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், வருங் கால ... முயற்சி ... தனை மிகுதியான நாள்.

**தனுசு** எதிர்பாராத காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு சிக்கனத்தை கடைப்பிடிக்க முற்படுவீர்கள், வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

**மகரம்** திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பம் ஏற்படலாம் தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மரியாதை உயர்வடையும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




• இலக்கிய கலாநிதி ஏழாலை மு.கந்தையா அவர்களின் 100 ஆவது ஆண்டு அகவை நிறைவு நாள் விழா அண்மையில் சைவ சன்மார்க்க வித்தியாலயத்தில் சித்தாந்தரத்தினம் வே.கனகசபாபதி தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து சிறப்பித்த விருந்தினர்கள்,முதன்மை விருந்தினர் மேனாள் துணைவேந்தர், பேராசிரியர் என்.சண்முகலிங்கன் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவருக்கு பரிசில் வழங்குவதனையும் மாணவர் நடன நிகழ்வு ஒன்றினையும் படங்களில் காணலாம்.

# அதிபர்கள், ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவை 30 கோடி ரூபா

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு ஆளுநரிடம் முறையீடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு வழங்கப்படவேண்டிய 30 கோடி ரூபாய் நிதியை மத்திய அரசாங்கத்திடம் விடுவிக்கக்கோரி வடக்கு மாகாண ஆளுநரிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரன் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில்,

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள் ,ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவையான ரூபா 30 கோடி (300 மில்லியன்) நிதியை மத்திய அரசாங்கம் இதுவரை வழங்கவில்லை. எந்தெந்த அதிபர்கள், ஆசிரியர்களுக்கு எவ்வளவு நிலுவைகள் வழங்கப்படவேண்டும் என்ற விபரத்தை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு பரிந்துரை செய்துள்ளது.

ஆனால் இதுவரை மத்திய அரசிடம் இருந்து நிதி கிடைக்கப்பெறாததால் மத்திய அரசிடம் நிதியை வழங்கக்கோரி வடக்கு மாகாண ஆளுநரிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

30கோடி நிதி என்பது சாதாரண தொகை அல்ல. ஒவ்வொரு அதிபரும் ஆசிரியரும் தமது கடமைகளைச் செய்தபின்னர் வழங்கப்படவேண்டிய சம்பள நிலுவை கள் இதுவரை வழங்கப்படாததால் பலர் மிகுந்த அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. பலர் கடன்சுமைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆகையால் வடக்கு மாகாண ஆளுநர் மத்திய அரசிடம் இருந்து 30கோடி நிதியை விரைவாக விடுவித்துத் தரவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளோம். இதுவரை காலமும் எமது குழந்தைகளின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு பொறுத்திருந்த நாம் இனி மேலும் பொறுக்கமுடியாத அளவுக்கு சுமைகளைச் சுமக்கின்றோம். எமக்கான நிலுவைகள் விரைவில் வழங்கப்படவேண்டும். இல்லையேல் கற்பித்தல் பணிகளைப் புறக்கணிக்கப்போவதாக ஆளுநரிடம் சங்கம் எடுத்துரைத்துள்ளது. (இ-3)

# புலமைப் பரீட்சை கருத்தமர்வு

(கருகம்பனை)

கருகம்பனை தமிழ் மன்ற சனசமூக நிலையமும் இந்து இளைஞர் கழகமும் இணைந்து நடத்தும் தரம் 5 புலமைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கருத்தரங்கு நாளை 8 ஆம் திகதி சனிக்கிழமை புனித ஹென்றியரசர் கல்லூரியிலும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியிலும் காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை பிரபல விரிவுரை ஆசிரியரால் நடத்தப்படவுள்ளது. (8)




# பொலிஸாரைக் கண்டதும் தப்பியோடிய நபர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைப்பு

(யாழ்ப்பாணம்)

பொலிஸாரைக்கண்டதும் ஓடிய நபரை இளவாலை பொலிஸார் துரத்திப் பிடித்து கைது செய்துள்ளனர்.

கடந்த 3 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு இளவாலைப் பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கடந்த 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பற்றிமா மாதா ஆலயத்திருவிழாவுக்கு சென்று வீடு திரும்பும் போது இருவர் கைகலப்பில் ஈடுபட்டதை தொடர்ந்து விலக்கச் சென்ற நபரும் தாக்குதலுக்குள்ளாகி இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவத்தில் இருவரையும் தாக்கிய சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டு வந்த சென்மேரிஸ் பகுதியைச் சேர்ந்த நபரையே இளவாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை மல்லாகம் நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்திய போது சந்தேக நபரை எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் உத்தரவிட்டுள்ளதாக இளவாலை பதில் கடமை அதிகாரி ஆ. ஆனந்தராசா தெரிவித்துள்ளார். (இ-10-104)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அரியாலை பிரப் பங்குளம் மகாநதி அம்மன் ஆலய (நாச்சிமார் கோவில்) மஹோற்சவம் எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 25.07.2017 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழா, மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழமாவும் இடம் பெறவுள்ளன. (இ-3)

# 2015/2016 கல்வி ஆண்டில் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்களிற்கான சான்றிதழ் பெறல்

வடமாகாண மும்மொழிக் கற்கை நிலையத்தில் 2015 கல்வி ஆண்டில் சிங்கள மற்றும் ஆங்கில கற்கை நெறியினைத் தொடர்ந்து அடிப்படை மற்றும் டிப்ளோமா கற்கை நெறியினை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த 10.06.2017 அன்று நடைபெற்றது. அன்றைய தினம் சான்றிதழ்களினைப் பெற்றுக் கொள்ளத் தவறிய மாணவர்கள் மும்மொழிக்கற்கை நிலையம், இராமநாதன் வீதி, யா/ கலட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை, கலட்டி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கி வரும் எமது அலுவலகத்தில் தங்கள் சான்றிதழ்களினை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள். மேலதிக விபரங்களுக்கு 021 223 1344 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் என வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார். (இ)

# 'கலைஞானச்சுடர்' விருதுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்ப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவையினால் வழங்கப்படும் "கலைஞானச் சுடர்" விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இசை, நடனம், கவிதை, எழுத்துறை, ஊடகத்துறை, நாடகம், இசைநாடகம், நாட்டுக் கூத்து, கிராமியநடனம், தாளக் காவடி, ஓவியம், சிற்பம்போன்ற கலை இலக்கிய துறையில் நீண்டகாலம் சேவையாற்றிய 60 வயதுக்கு மேற்பட்ட நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் கலைஞர்கள் விண்ணப்பிக்க முடியும். முழுப்பெயர், விலாசம், கிராம அலுவலர் பிரிவு, பிறந்த திகதி கலைச் சேவை விபரம், தொ.பே. இல ஆகியன முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டும். விண்ணப்பங்களை 10.07.2017 இற்கு முன்பாக நல்லூர்ப் பிரதேச செயலக கலாசார பிரிவில் சமர்ப்பிக்கும்படி பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ

# சொற்கணை போர் யாழில்

மொறட்டுவ பல்கல்லைக்கழகம் நடத்தும் மூதறிஞர் சொக்கன் ஞாபகார்த்த கேடயத்திற்கான அகில இலங்கை ரீதியிலான மாபெரும் விவாதச் சமர் (சொற்கணை) நாளை 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறும். (இ-8)

# கராச்சில் திடீர் தீவிபத்து! மோ. சைக்கிள்கள் சேதம்

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி பண்டத்தரிப்பு பகுதியில் தனியாருக்கு சொந்தமான மோட்டார் சைக்கிள் பழுது பார்க்கும் கடையில் (கராச்சில்) ஏற்பட்ட தீ விபத்தில் பழுது பார்ப்பதற்காக நின்ற மூன்று மோட்டார் சைக்கிள்கள் முற்றாகவும் 10 இற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக இளவாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் கடந்த 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம் பெற்றுள்ளது. கடையின் உரிமையாளர் சம்பவத் தினத்தன்று இரவு வேளை வேலை முடிந்து கடையைப் பூட்டிவிட்டு வீடு சென்றுள் ளார். மறுநாள் காலை கடை உரிமையாளர் கடையைத் திறந்து பார்த்த போது மோட்டார் சைக்கிள்கள் சேதமடைந்திருந்தன.

இதுதொடர்பில் இளவாலை பொலிஸாருக்கு தகவல் வழங்கிய நிலையில் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் மின் ஒழுக்கினால் ஏற்பட்ட தீவிபத்தா அல்லது விசமிகளால் ஏற்படுத்தப்பட்ட தீவிபத்தா? என்ற கோணத்தில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-10-104)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம் நீராவியடி கடையிற்சுவாமி ஆலய ஸ்ரீ வாலாம்பிகை சமேத வைத்தியநாதன் ஆலயத்தின் அலங்கார உற்சவம் எதிர்வரும் 16.07.2017 ஞாயிற்றுக் கிழமை இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் 15.07.2017 சனிக்கிழமை கும்பாபிஷேக தின (1008) சகஸ்ர சங்காபிஷேகம் இடம் பெறவுள்ளது. (இ-7)

# இராஜகோபுர பஞ்சகுண்டபக்ஷ பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்.வடமேற்கு பிரப்பம்பதி ஸ்ரீ வைரவப் பெருமான் , ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய நூதன இராஜ கோபுர பஞ்சகுண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.10 மணி முதல் இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் 15.07.2017 சனிக்கிழமை காலை 6 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம் பெறவுள்ளது. (இ-3)

# ஒக்டோபர் புரட்சியும் பெண் விடுதலையும் ஆய்வரங்கு யாழில்

(யாழ்ப்பாணம்)

புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் மகத்தான ஒக்டோபர் சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக நடத்தப்படும் ஆய்வரங்குத் தொடரின் 7ஆவது ஆய்வரங்கு "ஒக்டோபர் புரட்சியும் பெண் விடுதலையும்" என்ற தலைப்பில் நாளை 8 ஆம் திகதி (போயா தினம்) சனிக்கிழமை பி.ப 4 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

தோழர் க. வாஹினி தலைமையில் இடம்பெறவுள்ள இவ் ஆய்வரங்கில் ஆய்வுரையினைத் தோழர் எஸ். மோகனதர்ஷினி வழங்கவுள்ளார்.

பெண்கள் பற்றிய மாக்சியப் பார்வை, பெண்களின் அமைப்பாக்கம், அடையாள அரசியலும் பெண் விடுதலையும் ஆகிய விடயங்கள் தொடர்பாக ஆராய்கின்றதான இவ் ஆய்வுரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம் பெறும்.

ஆர்வமுள்ள அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகாத்மாக்களின் மொழியைப் பேரினவாதிகள் புரிந்து கொள்ளாததாலேயே கிட்டுகள் வேறு மொழியில் பேசத் தொடங்கினர்

## மாகாணசபை உறுப்பினர் ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



மகாத்மா காந்தி அகிம்சை மொழியில் பேசினார். அதனை இந்தியாவை ஆண்ட பிரித்தானியர்கள் புரிந்து கொண்டார்கள். அவரைப் பின்பற்றி ஈழத்துக் காந்தி செல்வ நாயகமும் சிங்கள ஆட்சியாளர்களுடன் அகிம்சை மொழியிலேயே பேசினார். ஆனால், மகாத்மாக்களின் மொழியைச் சிங்களப் பேரினவாதிகள் புரிந்து கொள்ளவில்லை. புரிந்த கொள்ள மறுத்தார்கள். இதனால்தான் ஆயுதப் போராட்டம் கருக் கொண்டது. கிட்டுகள் தோன்றி வேறு மொ்ழியில் பேசத் தொடங்கினார்கள். என்று வடமாகாணசபை உறுப்பினர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

சாவற்கட்டு மகாத்மா மைதானத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற மகாத்மா முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிட்டு முன்பள்ளி என்ற பெயரே இராணுவத்தின் நெருக்குதல் காரணமாக மகாத்மா முன்பள்ளி என்று பெயர் மாற்றப்பட்டிருக்கிறது. மகாத்மா காந்தியின் இலக்கும் கிட்டுவின் இலக்கும் ஒன்றுதான். அவரவர் தேசங்களின் விடுதலையே அவர்களின் இலட்சியங்களாக இருந்தன. ஆனால், இரண்டு பேரும் தங்கள் இலட்சியங்களை அடைவதற்காக ஆட்சியாளர்களுடன் பேசிய மொழி வெவ்வேறானது.

ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்பு, அவ்வாறான போராட்டம் ஒன்று இங்கு நடைபெற்றதற்கான அடையாளங்கள் எதுவும் எஞ்சிவிடக் கூடாது என்பதில் அரசாங்கம் கண்ணுங் கருத்துமாக இருக்கிறது. அதனால்தான் கிட்டு முன்பள்ளி மகாத்மா முன்பள்ளியாகப் பெயர் மாற்றப்பட்டது. ஈழம் என்ற சொல்லைக்கூட அரசாங்கம் ஏற்றுகொள்ளத் தயாராக இல்லை. ஈழம் விடுதலைப்புலிகளின் கண்டு பிடிப்பல்ல. அது இலங்கையின் பண்டைய பெயர். அண்மையில் கிளிநொச்சியில் திருவள்ளுவர் சிலையொன்றின் பீடத்தில் இருந்த ஈழம் என்ற சொல் இராணுவத்தினரின் கெடுபிடிகள் காரணமாக அகற்றப்பட்டிருக்கிறது. இவற்றை நாங்கள் யாராவது சுட்டிக் காட்டினால், அரசியல் அரங்கில் இருந்து எங்களை அகற்றவும் எம்மவர் சிலரின் துணையோடு அரசாங்கம் முயற்சிக்கின்றது.

தமிழ் மக்களிடையே ஆயுதப் போராட்டம் முளைவிட்டதற்கான காரணங்கள் இன்னமும் அப்படியே உள்ளன. அரசாங்கம் இடதுகையில் தூக்கிய கத்தியைத் தனது முதுகுக்குப் பின்னால் மறைத்து வைத்துக்கொண்டே இனிசமாதானம்என்று சொல்லி வலது கையால் எங்களுடன் கைகுலுக்கப் பார்க்கிறது. இதுபற்றிய விழிப்புணர்வு எங்களுக்கு இல்லாவிடில் நாம் தொடர்ந்தும்ஏமாற்றப்படுவோம். ஆயுதங்களை நாம் மீளவும் தூக்க வேண்டாம். ஆனால், ஆயுதப் போராட்டம் நடைபெற்றதற்கான காரணங்களை, ஆயுதப் போராட்டத்தின் அளப்பரிய தியாகங்களை யாரும் மறந்துவிடக் கூடாது. எமது இளைய தலைமுறையினரிடம் இவை எடுத்துச் சொல்லப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (இ-3)

# ஊடகங்களைக் கட்டுப்படுத்த புதிய சட்டம் விரைவில் அறிமுகம்

(கொழும்பு)

ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் புதிய சட்டமொன்றை அறிமுகம் செய்ய உள்ளதாக ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

செய்தி மூலங்களை அறிவிக்க வேண்டும் என்ற வகையில் சட்டமொன்றை அரசாங்கம் அறிமுகம் செய்ய திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் உண்மை நிலையை வெளிப்படுத்தும் ஊடகங்களை ஒடுக்கும் நோக்கில் இவ்வாறு புதிய சட்டம் அறிமுகம் செய்யப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தகவல்களை மூடி மறைத்து அரசாங்கத்தின் நன்மதிப்பினை தக்க வைத்துக் கொள்வதில் அரசாங்கம் ஆர்வம் காட்டி வருவதாகவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டமை ஜனநாயக விரோத செயற்பாடு எனவும் அவர் குற்றம் சாட்டினார். (இ-7)

# இராமலிங்கம் சுவாமிகளின் குருபூசை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ சிவகுருநாத குருபீட மகாதேவா சுவாமிகள் ஆச்சிரம ஸ்ரீமத் இராமலிங்கம் சுவாமிகளின் வருடக் குருபூசை (ஆனித் திருவோணம்) எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இல.18, குமாரசாமி வீதி, கந்தர்மடத்தில் அமைந்துள்ள சிவகுருநாத பீடத்தில் இடம்பெறவுள்ளது. (இ-3)

# இரத்ததான முகாம்

ஸ்ரீ சிவகுருநாத குருபீட மகா தேவ சுவாமிகள் ஆச்சிரம ஸ்ரீமத் சோமஸ்கந்தவேள் சுவாமிகளின் பதினோராவது குருபூசையை முன்னிட்டு நடத்தப்படும் இரத்ததான முகாம் எதிர்வரும் 16 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை இல.18, குமாரசாமி வீதி, கந்தர்மடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சிவகுருநாத பீடத்தில் இடம்பெறவுள்ளது. (இ-3)

# கணனி கற்கை நிலையத்தின் வருடாந்த விருது வழங்கல்

DMI கணனிகற்கைநிலையத்தின் வருடாந்த விருது வழங்கும் விழா நாளை சனிக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் காலை, மாலை இரு அமர்வுகளாக இடம்பெறும். முதலாம் அமர்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக் கழக பேராசிரியர் ம.சின்னத்தம்பி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். 2 ஆம் அமர்வில் பிரதம விருந்தினராக கொமர்ஷல் வங்கியின் வடமாகாண முன்னாள் பிராந்திய முகாமையாளர் ஸ்ரீ ராஜீவன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (இ-3)

# பொங்கல் விழா

மண்டைதீவு பூமாவடி பூம்புகார் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறும். இதனை முன்னிட்டு இன்று வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு விசேட அபிஷேகம் இடம்பெற்று பிற்பகல் 3 மணிக்கு ஊர்வலமும் முத்தரிசி தண்டலும் இடம்பெறும்.(3)

# கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபையின் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பின்வரும் கற்கைநெறிகள் முற்றிலும் இலவசமாக 10.07.2017 இல் ஆரம்பிக்கவுள்ளன. இக்கற்கை நெறிகளாவன: காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்), மரவேலை தொழில்நுட்பவியலாளர், மின்னிணைப்பாளர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர், அறை ஊழியர், அலுமினியம் பொருத்துநர், ஆட்டோ திருத்துநர், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், நீர்க்குழாய் பொருத்துநர். இக்கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

இக் கற்கைநெறிகளை கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 4 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல. 12 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் (021 222 7949) அல்லது வலந்தலைச் சந்தியில் உள்ள காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 10.07.2017 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ். உதவிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ)

\+ + + + + + + + + + + + + +

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையின் பண்டத்தரிப்பு மற்றும் சுன்னாகம் தொழிற்பயிற்சி நிலையங்களில் பின்வரும் கற்கைநெறிகள் முற்றிலும் இலவசமாக 10.07.2017 இல் ஆரம்பிக்கவுள்ளன. இக்கற்கை நெறிகளாவன: மின்னிணைப்பாளர், அலுமினியம் பொருத்துநர் ஆகும். இக்கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

இக் கற்கைநெறிகளை கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம்,4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல. 12 கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் (021 222 7949) அல்லது பிரான்பற்றிலுள்ள பண்டத்தரிப்பு தொழிற்பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 10.07.2017 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# பந்துல மனுத்தாக்கல்



அபிவிருத்தி லொத்தர், தேசிய லொத்தர் சபை ஆகியவற்றை வெளிவிவகார அமைச்சின் கீழ் கொண்டு வரும் வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யுமாறு கோரி ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன, உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமைகள் மனுவொன்றை நேற்றுத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. (இ-7)

# முன்பள்ளி மாணவர்களின் கல்விக் கண்காட்சி நாளை

மதுரம் கல்வி நிறுவனம், மதுரம் கிட்ஸ் முன்பள்ளி ஆகியவற்றின் 15 ஆவது ஆண்டை முன்னிட்டு நடத்தும் முன்பள்ளி மாணவர்களின் கல்விக் கண்காட்சியும் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் வர்த்தக சந்தையும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு மதுரம் கல்வி நிறுவன மண்டபத்தில் இடம்பெறும். (இ-3)

# வணிகமாணி கற்கைநெறி தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்படும் வணிகமாணி (வெளிவாரி) அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்ட நிலையில் அக் கற்கைநெறி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை 08.07.2017 சனிக்கிழமை பின்வரும் இடங்களில் நடத்தப்படவுள்ளது. ஆகையால் க.பொ.த. உயர்தரப் பரீட்சை 2015 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முற்பட்ட காலப்பகுதியில் வணிகப்பிரிவில் சித்தியடைந்தவர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். இதற்கமைய கிளிநொச்சி M.Tech கலைவர்த்தக கல்லூரியில் காலை 8.45 மணிக்கும் எடிசன் கல்லூரியில் காலை 9.30 மணிக்கும் முள்ளியவளை சத்தியா கல்வி நிலையத்தில் முற்பகல் 11 மணிக்கும் முல்லைத்தீவு நெய்தல் கல்வி நிலையத்தில் நண்பகல் 12 மணிக்கும் புதுக்குடியிருப்பு பொருளியல் கல்லூரியில் பிற்பகல் 1.30 மணிக்கும் என யாழ்.பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலைய பணிப்பாளர் அறிவித்துள்ளார். (2)

# திருவிழா திருப்பலி நாளை


(யாழ்ப்பாணம்)

யாழ். மணியன் தோட்டம் தூய செபஸ்தியார் ஆலய திருவிழா கடந்த 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருச்செபமாலையுடன் ஆரம்பமானது. இந் நிலையில் நாளைக் காலை 6.30 மணிக்கு திருவிழா திருப்பலி இடம்பெறும். (இ-10-106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமது இன்னுயிர்களைத் தாயக விடுதலைக்கு தற்கொடையாக்கியவர்கள் நினைவுகூரப்பட்டனர்





தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் கரும்புலிகள் தினம் நேற்று முன்தினம் கிளிநொச்சி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அலுவலகத்தில் மிகவும் உணர்வெழுச்சியாக கடைப்பிடிக்கப்பட்டது.

தமிழர்களின் விடுதலைக்காக நேரம் குறித்துத் தம்மையே தற்கொடையாக்கிய கரும்புலிகள் தின நிகழ்வு ஜுலை 5 ஆம் திகதி கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் கிளிநொச்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலுவலகமான அறிவகத்தில் மிகவும் உணர்வெழுச்சியாக நடைபெற்றுள்ளது.

தமிழ் மக்களின் விடிவுக்காக நேரம் குறித்துத் தம்மையே தற்கொடையாக்கிய க்ரும்புலிகள் தின நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 3 மணிக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனது ஒழுங்கமைப்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகமான அறிவகத்தில் மிகவும் உணர்வெழுச்சி பூர்வமாக நடைபெற்றுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்ற கரும்புலிகள் தின நிகழ்வுகளில் ஆனையிறவு வெற்றிச் சமரின் போது தமிழ் மக்களின் விடுதலைக்காக தமது இன்னுயிரை ஈகம் செய்த கரும்புலி மாவீரன் மேஜர் நந்தனின் சகோதரன் கலந்து கொண்டு ஈகச்சுடரினை ஏற்றி மலர் மாலையை அணிவித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து இந் நிகழ்வில் கலந்துகொண்டிருந்த மாவீரர்களின் தந்தையர்கள், சகோதரர்கள், ஏனைய உறவினர்கள் மற்றும் தமிழ்த் தேசிய உணர்வாளர்களர் மலர் தூவி அக வணக்கம் செலுத்தினர்.

இதன்போது கரும்புலி மாவீரர்களை நினைவுகூர்ந்து அவர்கள் தமிழ் மக்களின் விடுதலைக்காக தம் இன்னுயிர்களை உவந்தளித்து ஆகுதியாக்கிய வரலாறுகள் உள்ளடங்கிய நினைவுப் பகிர்வுகளும் மிகவும் உணர்வெழுச்சியாக இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (2)

## பொதுக்கூட்டம்

முல்லைத்தீவு அபிவிருத்தி ஒன்றியத்தின் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மணற்குடியிருப்பு கிராம பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக முல்லைத்தீவு அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் அந்தோனி குரூஸ் அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் முல்லைத்தீவு அபிவிருத்தி தொடர்பாகவும், முல்லைத்தீவுநகரப்பகுதியை அண் மித்ததாக அமைக்கப்படவுள்ள பொது விளையாட்டு மைதானம், யாழ்.பல்கலைக் கழகத்தின் நீரியல்வளபீடம் போன்றவை அமைக்கப்படுவதிலுள்ள தடைகள் பற்றி ஆராய்தல், முல்லைத்தீவு வைத்திய சாலை தரம் உயர்த்துதல், முல்லைத்தீவு மாவட்ட மத்திய பேருந்து நிலையத்தில் காணப்படுகின்ற குறைபாடுகள், முல்லைத்தீவு நீதிமன்றத்திற்கு அண்மையாக புதிதாக அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா பல வருடங்களாகியும் திறந்து வைக்கப்படாமை உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளன. எனவே பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள்,சமூக ஆர்வலர்கள் ஆகியோரை தவறாது கலந்து கொண்டு கருத்துக்களை முன்வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)

## கழிவுநீர் செல்லும் மதகின் கீழ் மனித மண்டையோடு

# தடயப்பொருட்கள் கிடைக்காத நிலையில் —அகழ்வுப் பணிகள் கைவிடப்பட்டன—

(மல்லாவி)

தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள கைத்தொழில் பேட்டைக்கு அருகில் இருக்கும் கழிவுநீர் செல்லும் மதகின் கீழ் மனித மண்டை ஓடு ஒன்று மீட்கப்பட்டதையடுத்து மனித எச்சங்கள் இருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் மன்னார் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ் ராஜா முன்னிலையில் அகழ்வுப் பணிகள் நடைபெற்றுள்ளன.

இந்த அகழ்வுப் பணிகள் நேற்று முன்தினம் புதன் கிழமை நன்பகல் வேளை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மனித மண்டை ஓடு காணப்படுவதாக பொதுமக்கள் மன்னார் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் மன்னார் பொலிஸார் கடந்த 3 ஆம் திகதி திங்கட்கிழமை சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டுள்ளதோடு மன்னார் நீதிமன்றின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளனர்.

இதனையடுத்து, மன்னார் மாவட்ட நீதிமன்றத்தின் நீதவானின் உத்தரவிற்கு அமைவாக விசேட சட்ட வைத்திய அதிகாரி டபிள்யூ. ஆர்.ஏ.எஸ்.ராஜபக்ஷ மற்றும் மன்னார் சட்ட வைத்திய அதிகாரி எம்.யூ.எம்.சப்வான் ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் புதன் கிழமை பிற்பகல் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இருப்பினும் இந்த நடவடிக்கைகளின் போது வேறு




எவ்வித தடயப் பொருட்களும் கிடைக்காத நிலையில் அகழ்வுப் பணிகள் கைவிடப் பட்டுள்ளன.

மேலும் மீட்கப்பட்ட மனித மண்டையோட்டை மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸாரும் மற்றும் விசேட தடயவியல் பொலிஸாரும் மேற்கொண்டு,வருகின்றனர்.

இதேவேளை, மனித மண்டையோடு மீட்கப்பட்ட இடத்தில் இருந்து மன்னார் நோக்கிய வீதியில் சுமார் 100 மீற்றர் தொலைவில் மன்னார் பொது மயானம் அமைந்துள்ள நிலையிலேயே இந்த மண்டையோடு மீட்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-15)






வவுனியா மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் ஏற்பாட்டில் கடந்த 4 ஆம் திகதி வவுனியா கிடாச்சூரி கருவேப்பங்குளம் பாடசாலை மாணவர்களுக்கு லண்டன் சரஸ்வதி நல நிதியத்தின் உதவியுடன் 13 பாதணிகள், காலுறைகள் என்பன மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்ட போது...
(படங்கள்:-ஓமந்தை செய்தியாளர்)

# பாரவூர்தி-ஹயஸ் ரக வாகனம் மோதுண்ட விபத்தில் 13 பேர் வைத்தியசாலையில்



மாங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள மாங்குளம் நகரப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பார ஊர்தியுடன் கண்டியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பயணித்த சுற்றுலாப் பயணிகளின் ஹயஸ் ரக வாகனம் மோதிக் கொண்ட விபத்துச் சம்பவத்தில் 13 பேர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப் பட்டு மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக 9 பேர் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை இரவு 12.10 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா பகுதியில் இருந்து மாட்டு எருவை ஏற்றி யாழ்ப்பாணம் நோக்கி ஏ- 9 வீதி ஊடாக பயணித்த பார ஊர்தி மாங்குளம் நகரப் பகுதியில் தரித்து நின்ற வேளை கண்டியில் சுற்றுலா பயணத்தை முடித்துக் கொண்டு ஏ-9 வீதி ஊடாக யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த ஹயஸ்ரகவாகனம் மோதிக் கொண்ட கோர விபத்துச் சம்பவத்தில் சிறுவர்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட 13 பேர் தெய்வாதீனமாக உயிரிழப்புக்கள் எதுவுமின்றி படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் கயஸ் வாகனம் பலத்த சேதமடைந்துள்ளதுடன் அதில் பயணித்தவர்களில் அநேகமானவர்களுக்கு கால், கை உடைவுகள் ஏற்பட்ட நிலையில் பலத்த காயம் அடைந்துள்ளனர்.

விபத்து தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு விரைந்து மாங்குளம் பொலிஸாரும் மாங்குளம் நகரப் பகுதியில் தரித்து நின்ற ஆட்டோவின் சாரதிகள், வர்த்தகர்கள் ஆகியோர் இணைந்து படுகாயமடைந்த நிலையில் உயிருக்கு போராடியவர்களை மீட்டு மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவத்தின் போது, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திலீபன் - மதுசாந் (வயது-03), வட்டக்கச்சி, கிளிநொச்சியைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை - ஜானுசா (வயது - 25), கிளிநொச்சியைச் சேர்ந்த, காத்தலிங்கம்-கிருஷ்ணகுமார் (வயது-39),கிளிநொச்சியைச் சேர்ந்த,நீக்கிலஸ்-யாழினி (வயது - 24), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களான.எஸ். தினேசன் (வயது -22), திலீபன்-மாதுரி (வயது-04), திலீபன்-சுபாசினி (வயது-19), கிருஷ்ணகுமார்-நிக்சன் (வயது-22),திருமுறிகண்டி கிளிநொச்சியைச்சேர்ந்த கதிரவேல்-செந்தூரன் (வயது-32), இளவாலை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அன்ரனி - வினோத் (வயது-30), வேலணை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, உதயகுமார் - தாரூபன் (வயது-23), அரியாலை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுகுமார்-கஜீபன் (வயது - 20), மானிப்பாய் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த,சண்முகம் - மயிலாசினி (வயது-03) ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் பின்னர் இவர்களில் 9 பேர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகப்பெரிய மாற்று சக்தி மின்நிலைய வேலைத்திட்டம் நேற்று அங்குரார்ப்பணம்

## பூநகரியில் மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் ஆரம்பித்து வைத்தார்





(மல்லாவி)

இலங்கையின் மிகப் பெரிய மாற்று சக்தி மின் நிலையத்திற்கான வேலைத் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் குறித்த நிகழ்வு கிளிநொச்சி பூநகரி மண்ணித்தலை பிரதேசத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதேச செயலாளர், மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் உயரதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர்,

இலங்கையில் மிகப் பெரிய மாற்று சக்தி மின் உற்பத்தி நிலையமாக குறித்த திட்டம் அமைய உள்ளதாக தெரிவித்தார். குறித்த திட்டத்தின் மூலம் 2 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளதாக தெரிவித்த அவர்,

குறித்த வேலை வாய்ப்புக்கள் வடக்கில் உள்ளவர்களுக்கே வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதேவேளை மின்கட்டணத்தை முடிந்தால் அதிகரிக்காமல் பாருங்கள் என பலர் சவால் விட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், குறித்த திட்டங்கள் நிறைவு பெற்றதும் இயலுமானவரை கட்டணத்தினை குறைக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

குறித்த திட்டத்தின் மூலம் அதிகளவான மின் உற்பத்தி கிடைக்கும் எனவும் 24 மணிநேரமும் 365 நாட்களும் காற்று, சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தியை பெற்றுக்கொள்ளக்கூடிய பிரதேசமாக இது காணப்படுவதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டிருந்தார்.

தொடர்ந்து அமைக்கப்படவுள்ள பிரதேசத்தினை பார்வையிட்ட அமைச்சர் ஊடகங்களின் கேள்விக்கு பதிலளித்தார்.

குறித்த திட்டம் எத்தனை பரப்பில் இடம்பெறவுள்ளது என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

குறித்த திட்டம் முக்கியம் பெற்றதாகவும் மிகப் பெரிய திட்டமாக இது அமையும் எனவும் கூறினார்.

குறித்த திட்டம் அமையப் பெறவுள்ள பிரதேசம் அரசுக்கு சொந்தமானதா?என வினவியபோது,

குறித்த காணி அரசுக்கு சொந்தமானது எனவும் அவர் தெரிவித்தார்.

(2-15-312)




# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை கண்டறிய அலுவலகம் தேவையில்லை

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டறியும் குடும்பங்களின் சங்கத் தலைவி தெரிவிப்பு





காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டறியும் அலுவலகம் தேவையில்லை என வவுனியா மாவட்ட போராட்டக்குழுத் தலைவி தெரிவித்துள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டு வரும் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நேற்று முன்தினத்துடன் 132 ஆவது நாளை எட்டியுள்ள நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தின் தலைவி காசிப்பிள்ளை ஜெயவனிதா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

அரசாங்கத்திடம் எங்கள் பிள்ளைகள் தொடர்பான ஆதாரங்களைக் கொடுத்தும் கடந்த 132 நாட்களாக தொடர்ச்சியாக இரவு- பகல் என்று பாராமல் பிள்ளைகளை தொலைத்த தாய்மார்களின் பங்களிப்புடன் நாங்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் நிலையில்2015 ஆம்ஆண்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டறியும் அலுவலகம் அமைக்கப்படவுள்ளதாக அறிவித்த சர்வதேசம் இலங்கை அனுமதி அளிக்கவில்லை என்று காரணம் கூறி இன்று வரை தட்டிக்கழித்து வந்துள்ளது.

இம் மாதத்திற்கு பிறகு காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டறியும் அலுவலகம் அமைத்து இனி எத்தனை வருடங்களுக்கு பிறகு எமது பிள்ளைகளை விடுதலை செய்யப்போகிறார்கள் என கேள்வி எழுப்பினார்.

அத்துடன் பல போராட்டங்கள் ஊடாகவும் உறுதியான ஆதாரங்கள் ஊடாகவும் எங்கள் பிள்ளைகள் உயிருடன் இருக்கிறார்கள் என்று அரசாங்கத்திற்கு தெரிவித்துள்ளோம். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டத்தை மழுங்கடிக்கவே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகம் அமைப்பது தொடர்பான செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில் எத்தனை அலுவலகங்களை அமைத்தாலும் எத்தனை வருடங்கள் ஆனாலும்போராட்டம் கைவிடப்பட முடியாது. எங்கள் பிள்ளைகள் தொடர்பான சரியான தீர்வு வழங்கப்படும் வரை போராட்டம் தொடரும் என தெரிவித்தார்.

வவுனியாவில் தொடர்ச்சியாக சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தாய்மார்களை சந்தித்து கலந்துரையாடிய ஐக்கியதேசியக் கட்சியின் வவுனியா மாவட்ட முன்னாள் வேட்பாளர் எ.எஸ். எம்.தாயுன் கருத்து தெரிவிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைக்காமல் இருப்பது கவலையளிப்பதுடன் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களிலும் உள்ள மக்களே அதிகமாக காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் யுத்தத்தில் இறந்தவர்கள் போக மற்றவர்கள் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டு புனர்வாழ்வு அளிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் அவர்களை வடக்கு, கிழக்கு பகுதிகளில் வைத்து புனர்வாழ்வு அளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் யுத்தத்தின் காரணமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து பிடிக்கப்பட்டவர்கள், விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு உதவி செய்து கைது செய்யப்பட்டவர்கள், சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தாலும் அவர்களுடைய மாகாணத்தில் புனர்வாழ்வளிப்பதன் ஊடாக அவர்களின் உறவுகள் பார்வையிட வசதியாக இருக்கும் என தெரிவித்தார். (2-250)

## அரசாங்க அதிபரின் உத்தரவிற்கமைய காணி துப்புரவு செய்யும் பணி நிறுத்தம்

(பூநகரி)

கிளிநொச்சிமாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாக ஏ-9 வீதிக்கு அருகாமையிலுள்ள வெற்றுக் காணியை புலம் பெயர் வாழ் நபர் ஒருவர் அடாத்தாக தனதாக்கிக் கொள்ள முயன்ற வேளை இதனைக் கண்டித்து கடந்த மே மாதம் 29 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளையினால் கொண்டுவரப்பட்ட பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அதனையும் மீறி மீண்டும் அக் காணியை அபகரிக்கும் நோக்குடன் அந்நபர் காணித் திருத்த வேலைகளை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்தி சபை நிர்வாகிகள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரை நேற்று முன்தினம் புதன்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலக அலுவலகத்தில் சந்தித்து இச் செயற்பாட்டை நிறுத்துவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டு தருமாறு கேட்டுக் கொண்டனர்.

இதற்கமைய அரச அதிபர் இவர்களின் கோரிக்கைக்கு அமைய உடனடியாக பிரஸ்தாப நபரை அக் காணியில் இருந்து வெளியேறுமாறும் அக்காணியினுள் எதுவித வேலைகளிலும் ஈடுபடவேண்டாம் எனவும் உத்தரவிட்டார். (2-84)

## பல்லவராயன்கட்டு பன்றிவெட்டி வீதியானது அளவீடு செய்யப்பட்டும் செப்பனிடப்படவில்லை

### விவசாயிகள், பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(பூநகரி)

50வருட காலமாக எந்த விதமான திருத்த வேலைகளும் செய்யப்படாமல் கவனிப்பாரின்றி காணப்படும் பழைமை வாய்ந்த பல்லவராயன்கட்டு பன்றிவெட்டி வீதியை செப்பனிட்டுத் தருமாறு அப்பகுதியில் வாழுகின்ற 150இற்கு மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

முக்கியமான கரியாலை நாகபடுவான் குடியேற்றத் திட்டமும் அதனுடன் இணைந்த 500இற்கு மேற்பட்ட ஏக்கர் நெல்வயல்களும் இவ்வீதியின் இரு மருங்கிலும் காணப்படுவதால் நெல்வயல்களுக்கு தேவையான உள்ளீடுகளைக் கொண்டு செல்வதிலும் விளைந்து அறுவடை செய்த நெல்மூடைகளைக் கொண்டு வந்துசேர்ப்பதிலும் பல்வேறு இன்னல்களை அனுபவிப்பதாகவும் அப்பகுதி கமக்கார அமைப்பினர் குறை கூறுகின்றனர்.

பல மாதங்களுக்கு முன்பாக கிளிநொச்சி மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் குறித்த வீதி அளவீடு செய்யப்பட்டும் இது வரை எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லையென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆதலால் குறித்த வீதியை மாரி காலத்திற்கு முன்னதாக செப்பனிட்டுத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பாதிக்கப்பட்ட விவசாயிகள், பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பியர் கம்பனிகளுக்கு வக்காளத்து வாங்கும் அமைச்சர் மங்கள எமக்குத் தேவையில்லை

## மதுசாரத்துக்கு எதிரான தமிழ் இளைஞர் அணி கடும் எதிர்ப்பு

மக்களுக்கு சாராயம், பியர் பாவனையை பழக்கும் பியர் கம்பனிகளுக்கு வக்காளத்து வாங்கும் நிதி அமைச்சர் மங்கள சமரவீர எமக்குத் தேவையில்லை என மதுசாரத்துக்கு எதிரான தமிழ் இளைஞர் அணி கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக அந்த அணியினர்விடுத்துள்ள அறிக்கையில், கடந்த 22.06.2017 பாராளுமன்றத்தில் மதுவரிக் கட்டளைச்சட்டம் பரிந்துரைகள் தொடர்பாக இடம்பெற்ற விவாதத்தில் நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்த கருத்துக்கள் இதுவரை காலம் மக்கள் போராடி அடைந்த மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தடுப்பு தொடர்பான காத்திரமான அடைவுகளை திசை திருப்புவதாக அமைகின்றது.

மதுசார கம்பனிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள மதுசார உற்பத்தி வரியான 100 மில்லியன் ரூபாய்களை 01 மில்லியன் ரூபாய்களாக குறைப்பதற்கும் பியர் மற்றும் வைன் போன்றவற்றின் விலை அதிகம் எனவும் அவற்றின் விலையைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். இதன்மூலம் சாராயம், கசிப்பு மற்றும் சட்ட விரோத போதைப்பொருள் பாவனையை குறைக்கலாம் என நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் பூரணை நாட்கள், விசேட விடுமுறை நாட்களில் சாராய விற்பனை நிலையங்களது மூடுதலானது சட்ட விரோத மதுசாரப்பாவனை அதிகரிப்பதாகவும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளுக்கு அவ்வாறான தினங்களில் மதுசார விற்பனை செய்ய முடியாததால் அவர்கள் மீண்டும் எமது நாட்டுக்கு வருகை தருவதைத் தவிர்த்து வருவதாகவும் அதனால் நத்தார் மற்றும் பூரணை போன்ற பண்டிகைத் தினங்களில் சாராய விற்பனை நிலையங்களை திறக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேற்படி கருத்துக்களை உற்று நோக்கினால் சாராயம், பியர் கம்பனிகளுக்கு வக்காளத்து வாங்குவது தெட்டத் தெளிவாக விளங்குகின்றது.

இவற்றுக்கான பதிலை எந்தவொரு பாமர மக்களும் வழங்கமுடியும் என்பதில் ஐயம் இல்லை. கடந்த காலங்களில் பதவி வகித்த சில நிதி அமைச்சர்களும் இவ்வாறான சாத்தியமற்ற பிழையான விஞ்ஞானபூர்வமற்ற கருத்துக்களை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

இவர்களின் பின்னணியில் மதுசாரக் கம்பனிகள் இருப்பதையும் எம்மால் ஊகிக்க முடியும்.

நிதியமைச்சரின் முழுமையான கருத்துக்கள் யாவும் சாராயம், பியர் கம்பனிகளுக்கு சார்பாகவும் அவற்றின் இலாபத்தை பெரிதளவில் அதிகரிப்பதற்கும் மாறாக மக்கள் மத்தியில் இவற்றின் பாவனையை அதிகரித்து மேலும் நாட்டு மக்களை பாதாளத்திற்கு இழுத்துச் செல்லும் நடவடிக்கையாகவே அமையும்.

சாராயம், பியர் போன்றன அத்தியாவசியப் பொருட்களாகவும் அல்லது இவை சாதாரண விற்பனைப் பொருளாகவும் கருதப்படுவதில்லை. என்பதே உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிலைப்பாடாகும்.

ஆகவேவரியைநூறுமடங்குகளால்குறைக்கும்யோசனை அரசாங்கத்தையும் நாட்டு மக்களையும் திசை திருப்புவதாகவே அமைகின்றது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆய்வுகளுக்கு அமைவாக எமது நாட்டு மக்களின் பொருளாதாரத்தில் இவற்றின் பாவனை பெருந்தாக்கத்தை ஏற்படுத்துவது தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதாவது மதுசாரத்தில் கிடைக்கப்பெறும்வரிவருமானத்தை விட 3 மடங்கு பணத் தொகையை வருடாந்தம் அரசாங்கம் இவற்றின் பாவனையால் நோய்வாய்ப்பட்டவர்களின் சிகிச்சைக்காக செலவிடுகின்றது. அது மக்களின் அபிவிருத்திக்குசெலவிடவேண்டிய பணமாகும். ஆகவே அரசாங்கத்துக்கு ஏற்படும் நட்டத்தைஈடுசெய்வதாயின்மேலும் வரியை மூன்று மடங்கு அதிகரிக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் சாராயப் பாவனையால் வருடாந்தம் 20000 பேர் வரையில் இறக்கின்றனர்.

அதாவது ஒரு இலட்சம் பிள்ளைகளின் தந்தைமார் தங்களை தொழிற்திறன் அதிகமாகவுள்ள வயதில் அதாவது குறைந்த வயதிலேயே இறக்கின்றனர். இதனால் நாட்டிற்கும் அவர்தம் குடும்பத்திற்கும் ஏற்படும் பொருளாதார இழப்புக்கள் கணக்கிட முடி யாது.

அதுபோலவே இவற்றுக்கான வரியை உயர்த்துவதன் மூலம் பாவனையைக் கட்டுப்படுத்தலாம் என்பதை உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது. பியர் விலையைக் குறைப்பதன் மூலம் கசிப்பு மற்றும் சட்ட விரோதசாராயப்பாவனையை குறைக்கலாம் என்பது வெறும் மூட நம்பிக்கையேயாகும். எமக்கு கடந்த காலங்களில் அவ்வாறு மேற்கொண்ட வேலைகளில் பாவனை அதிகரித்திருப்பதை புள்ளிவிபரங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம். ஆகவே எந்தவொரு மதுசாரத்தின் விலையைக் குறைப்பதனால் இவற்றின் பாவனையால் ஏற்படும் பாதிப்புக்களை தடுக்க இயலாது. விலைக்குறைப்பு ஏற்படும் போது பாவனை அதிகரிக்கும் என்பதே புள்ளிவிபரங்கள் வாயிலாக பெறப்பட்ட நிதர்சனமான உண்மை.

ஆகவே எமது மக்களையும் அவர்களின் அபிவிருத்தியையும் கருத்திற்கொண்டு செயற்படுவோம் எனக்கூறி ஆட்சிப்பீடம் ஏறிய நல்லாட்சி அரசாங்கத்தின் நிதி அமைச்சரையும் அவரது பிழையான முட்டாள்தனமான யோசனைகளுக்கு துணைபோகும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரதியமைச்சர்களையும் வன்மையாகக் கண்டிப்பதோடு பதவிகளுக்குத் தகுந்தவர்களை நியமிக்குமாறும் மதுவரிக் கட்டளைச் சட்டம் தொடர்பாக பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட யோசனைகளை உடனடியாக மீளப்பெறுமாறும் ஜனாதிபதியிடம் வலியுறுத்தி நிற்கின்றோம் என மதுசாரத்துக்கு எதிரானதமிழ்இளைஞர்அணி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்கப்படும்-பாகிஸ்தான் தூதுவர்



இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்கப்படும் என பாகிஸ்தான் தெரிவித்துள்ளது. இலங்கையில் இளைஞர்களின் திறமைகளை விருத்தி செய்வதற்கு இவ்வாறு ஆதரவு வழங்கப்படும் என இலங்கைக்கான பாகிஸ் தான் உயர்ஸ்தானிகர் Sarfraz Ahmed Khan Sipra தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை இளம்முஸ்லிம்கள் பேரவைக்கு பாகிஸ்தான்நேற்று கணனிகளை வழங்கியுள்ளது. இலங்கை இளைஞர்,யுவதிகளின் கணனி அறிவினை மேம்படுத்தும் நோக்கில் இவ்வாறு கணனிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# நாட்டை யுத்தத்திலிருந்து மீட்டெடுத்தவர்கள் வேட்டையாடப்படுகிறார்கள் - மகிந்த கவலை

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் கொள்கைகளும், தீர்மானங்களும் ஒன்றுக்கொன்று முற்றிலும் முரணாக இருப்பதால், நாட்டுக்கு எந்தவிதப் பிரயோசனமும் கிடைக்கப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கொழும்பு சிங்கள ஊடகமொன்றிற்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர்இதனை தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதா ரம் அடியோடு சிதைக்கப்பட்டு விட்டது. நாட்டைப் பிளவு படுத்துவதற்கு புதிய அரசமைப்பைக் கொண்டுவர முயற்சி நடக்கிறது.

அரச சொத்துகள் தனியாருக்கு தாரைவார்க்கப்பட்டு வருகின்றன. நாட்டில் இலட்சக் கணக்கான இளைஞர், யுவதிகள் வேலையில்லாமல் திண்டாடி கொண்டிருக்கும் போது இந்தியாவிலிருந்து வேலைக்கு ஆட்களைத் தருவிக்கப் பார்க்கிறார்கள்.

நாட்டை யுத்தத்திலிருந்து மீட்டெடுத்த வீரர்களும் வீராங்கனைகளும் வேட்டையாடப் பட்டு வருகிறார்கள். நாட்டில் நிறைய தலைவர்கள் உருவாகிவிட்டார்கள்.

அவர்களை அடையாளம் கண்டுகொள்ள பொது மக்கள் திணறுகிறார்கள். உண்மையான தலைவர் யார் என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)




## சாந்தி, சமாதானம் நிலைக்கச் செய்வாய்!

எண்ணியவை யாவையுமே திண்ணமுறச் செய்கின்ற
எங்கள் நாகபூஷணியே! நினைப் பணிந்தோம்
மண்ணுலகில் நின்னையன்றி வேறுதுணை யாருமில்லை!
மன்றாடி நினைத்தானே தினம் நினைந்தோம்!
அலைகடல் சூழ் நயினைத் தீவினில் கோவில் கொண்டு
அருள் மாரி பொழிந்தெம்மை ஆதரிப்பாய்!
நிலையிலா வாழ்வில் அன்பு நெறிகாட்டி எமையெல்லாம்
நேசக் கரம் நீட்டி நீ அணைப்பாய்!
பக்தி கொண்டு வருவோர்தம் பவ வினைகளை தீர்த்து
பக்குவமாய் வாழ வழி நீ காட்டுவாய்!
சக்தி பீடத்தில் அமர்ந்தெம் சஞ்சலங்கள் போக்கியுமே
சாந்தி, சமாதானம் நிலைக்கச் செய்வாய்!

*கீழ்கரவை கி.குலசேகரம்*
*(ஓய்வு நிலை பிரதேச முகாமையாளர்,இலங்கை வங்கி)*
*ஶ்ரீசேன மாவத்த, அப்புத்தளை.*

## கடல் மீது காப்பாற்றிக் கரை சேரம்மா

ஆதி சக்தி, ஆதிசக்தி முத்துமாரி- எமை
ஆதரிக்க வேண்டுமம்மா மஹாமாரி
அடியார்கள் கூட்டமம்மா முத்துமாரி
அரோகரா இசைக்கின்றார் மஹாமாரி
நாகபூஷணியே நாககன்னி-நீ
நயினை நகருறையும் நாகேஸ்வரி
நாகம் குடைபிடிக்கப் பத்தினியளே-உனை
நல்லபாம்பு தாலாட்டும் உத்தமியாளே
அலை மோதும் கடல் மீது நுரை சீறவே-உந்தன்
அடியார்கள் வருகின்றார் படகேறியே
படகேறி வருகின்ற அடியார்களை
நடுக் கடல் மீது காப்பாற்றிக் கரை சேரம்மா

*த.கந்தசாமி*
*தாவடி, கொக்குவில்.*

## அம்மா நயினை தாயே அருள்வாயே

நயினையிலே கோயில் கொண்ட நாகேஸ்வரியே
புவனங்கள் பதினான்கையும் ஆளுகின்ற புவனேஸ்வரியே
கடல் நடுவினிலே வீற்றிருந்து அருள் புரிகின்ற ஆதிபராசக்தியே
பக்தர்களின் பாவவினைகள் அகற்றும் பரமேஸ்வரியே
அம்மா உந்தனிடம் ஓடோடி வந்தோம் அம்மா
ஓங்கார நாயகியே
அன்னையே எங்கள் குறைகளைத் தீர்த்து
வைப்பாய் நாகபூஷணித் தாயே

*நீர்வையூர் ச.செல்வநாதன்*

## வரம் தருவாய்


வரம் தருவாய் நாகபூஷணியே
அம்மா நாகபூஷணி
தாயே உன்னை நாடி வரும்
பக்தர்கள் துயரம் தீர்ப்பாயே தாயே
நல்வாழ்வும் அளித்து மங்கள வாழ்வும் அருள்வாயே
அம்மா உனை நாடி வரும் பக்தர்கள் கோடி
அந்த கோடியில் நானும் ஒருத்தி
எங்கள் கவலைகளை தீர்த்து வைப்பாயே
அம்மா தாயே நாகபூஷணி

*நவாலியூர்*
*லலிதாம்பிகை மகாதேவன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# நேரமில்லை என்ற நடப்பு; எல்லாமே தோற்ற மயக்கங்களே



(23.06.2017 அன்றைய தொடர்ச்சி)

இங்கு கருத்துக்களின் சேர்க்கையின் மூலம் தோன்றுகின்ற படைப்பாக்கத்தின் தேவையே இருக்கிறது. நீங்கள் படைப்பதையா? அல்லது நுகர்வதையா தேர்ந்தெடுக்கப் போகிறீர்கள்.

**நீ மட்டுந்தான்!**

தன்னம்பிக்கை என்பது ஒரு வகையில் விசித்திரமானது. நீ, உன்னைப் பற்றிக் கொண்டுள்ள எண்ணங்களினதும் உணர்வுகளினதும் சேர்மானத்தை தன்னம்பிக்கை எனச் சொல்லலாம். நீ, உன்மீது வைத்துள்ள பெறுமதிதான் தன்னம்பிக்கை என்ற மகுடம் சூடிக் கொள்கிறது. இன்னும் சொன்னால் ஒருவன் ஒரு விடயம் சார்பாக அல்லது ஒரு சந்தர்ப்பம் சார்பாக அல்லது ஒரு திறமை சார்பாக மிக்க நம்பிக்கை கொண்டிருக்கலாம்.

ஆனால், அவனே இன்னும் இதர திறமை அல்லது சந்தர்ப்பம் அல்லது விடயம் சார்பாக நம்பிக்கை அற்றிருக்கலாம். ஆக, தன்னம்பிக்கை என்பது எல்லாமே சுபமாக நடந்தேறும் என்ற எண்ணத்தை மனத்தில் கொண்டிருப்பதுதான் என்று புரிந்து கொள்ளலாம். எந்தச் சூழ்நிலையையும் அற்புதமாகக் கையாள்வேன் என்று நீ உன் மனத்தில் எண்ணுகின்ற நிலையில், உனக்குள் உச்ச நம்பிக்கை பிறக்கிறது.

ஒரு விடயத்தை கையாள முடியாது என்று மனத்தில் எண்ணுகின்ற கணத்திலேயே, உனக்கான நம்பிக்கை என்பது மறைந்து போகத் தொடங்குகிறது. ஒரு விடயத்தை நீ முதன் முதலாகச் செய்த சந்தர்ப்பத்தை உன் மனத்தின் வெளியில் கொண்டு வந்து எண்ணிப்பார். அந்தப் பொழுதுகள், கிலி கொண்ட மனத்தைக் கொண்ட பொழுதுகளாய் அமைந்திருந்ததை உன்னால் இன்றும் மறக்க முடியாமலிருக்கும். ஆக, உன் சௌகரிய வலயம் என்பது கூட, உன் மனத்தில் நீ நம்பிக்கை என விதைத்த விடயங்கள் சார்பாகவே கட்டியெழுப்பப்படுகிறது. சௌகரிய வலயத்தை விட்டு, விலகும் போதே உன் தன்னம்பிக்கைக்கு வானம் கிடைக்கிறது.

சௌகரிய வலயத்திலிருந்து வெளியே வருவது எப்படி என்பதான அறிவுரைகளும் அழகிய நூல்களும் உன் பார்வைப் புலத்தில் பட்டுக் கொண்டேயிருக்கும். நீயும் அந்த நிலையில் உன்னை இணைத்துக் கொண்டு சௌகரிய வலயம் விட்டுச் செல்ல முனைந்து வெற்றி காண்பாய். ஆனால், நீ காண்கின்ற வெற்றி என்பது ஒரு விடயம் சார்பாக அல்லது ஒரு நிகழ்வு சார்பாக அல்லது ஒரு திறமை சார்பாக மட்டுமே இருக்கும். அது உன் மொத்த தன்னம்பிக்கையையும் கூட்டி விடப் போவதில்லை. நீ, உன்னை எதுவாகக் கண்டாயோ அப்படியே காண்பாய்.

உன்னைப் பற்றிய, உனது மதிப்பீடுகள்தான், உன் நம்பிக்கையை உயர்த்துவதில் உரமாகி நிற்கின்றன. நீ, உன்னை எதுவாக எண்ணுகிறாயோ, ஆக்குகிறாயோ அதுவாகவே ஆகிவிடுகிறாய். திறமையற்றவன், பைத்தியக்காரன், புத்திசாலி, முட்டாள், உன்னதமானவன் என எதுவாகவும் நீ உன்னை தெரிவு செய்யலாம். நீ என்பது, உன்னால், உனக்குத் தெரிவு செய்யப்படும் நிலைதான் - ஏற்கனவே அது உனக்கு யாராலோ தெரிவு செய்யப்பட்ட முடிவு அல்ல. நீ, உன்னை இப்போது சோம்பேறி எனச் சொல்லலாம். ஆனால், உன் தெரிவால் அதனை ஒரு இறந்தகால நிலையாக மாற்றிவிடலாம். நீ தொடர்ச்சியாக சோம்பேறியாக இருப்பதுவும் அதனை விட்டு அகன்று சுறுசுறுப்பாய் காரியங்கள் செய்வதுவும் உன் தெரிவில்தான் விலாசம் கொள்கிறது.

நீ எதுவென்பது பற்றிச் சொல்வது, உன் நம்பிக்கையும் உன் விம்பமும் பற்றி நீ செய்துள்ள தெரிவு தான். இந்த நிமிடத்தில் நீ, யாரென்பதையும் நீ கொண்டுள்ள தன்னம்பிக்கை என்பதையும் தீர்மானிப்பதும் தெரிவுசெய்வதும் நீ மட்டுந்தான் -வேறு யாருமல்ல.



**ஆர்வத்திற்கு ஆயுள் கொடு!**

கடந்து சென்ற 2016 நீண்ட நினைவுகளின் தோற்றுவாயாக எனக்குள் உருவாகி இருக்கிறது. பல புதிய விடயங்கள், புதிய மனிதர்கள், புதிய அனுபவங்கள், புதிய படைப்புகள் வாயிலாக கடந்து சென்ற ஆண்டை நான் சேமித்து வைத்துள்ளேன். காலத்தை சேமித்து வைத்தல் பற்றி படைத்தலின் வருவிளைவுகள் சொல்லிச் செல்வது மிகமிக முக்கியமானது.

கடந்த பொழுதுகளோடு வந்து சேர்ந்த அனுபவங்கள், மனிதர்கள் என பலதும் அந்தப் பொழுதுகளுக்கு அர்த்தம் சேர்த்தன. அதனால், புதியன தருகின்ற பூரிப்பையும் திகிலையும் ஒருமிக்கச் சேர்த்து காலமாக என்னால் சேமித்து வைக்க முடிந்தது. பயணங்கள் முடிவதில்லை என்றாலும், பாதைகள் முடிந்து போவது தவிர்க்க முடியாதது. ஆனாலும் இந்தப் பயணத்தைத் தொடர்வதா? இருக்கின்ற இடத்திலேயே படர்வதா? என்கின்ற கேள்விகளுக்கு விடை தேடுவதும் கூட ஒரு பயணத்தின் பண்பாகவும் இருக்கிறது.

பயணங்களும் படைத்தலும் தான் ஒருவனின் அடையாளத்தை புடம் போடும் தீச்சுவாலையாக ஆகிவிடுகிறது. மனத்தில் தோன்றும் அவாக்களின் அவதியாக வெளிப்படுவது. ஆர்வமாகும். இந்த ஆர்வத்தை வெளிக்காட்டி நெறிப்படுத்தும் போது மனத்தின் தீச்சுவாலை சுடர் கொள்ளத் தொடங்கும். அப்போது நாம் மற்றவர்களுக்கு நெருப்பாக துணை நின்று இருட்டில் வெளிச்சம் கொடுப்போம். அடுப்பிற்கு வெப்பம் கொடுப்போம். ஆர்வத்திற்கு ஆயுள் கொடுப்போம்.

**எல்லாமே தோற்ற மயக்கங்களா?**

வெளிச்சமானது சூரியனிலிருந்து பூமியை வந்தடைய 8 நிமிடங்களும் 20 செக்கன்களும் எடுக்குமென்பதை நாமறிவோம். ஒரு குறிப்பிட்ட வேகத்தில் ஒளி பயணிப்பதனாலேயே இந்தத் தாமதம் ஏற்படுகின்றது. அதேபோல பொருட்களில் பட்டு வருகின்ற ஒளிக்கதிர்கள் எமது கண்களை அடையும் போதே நாம் பொருட்களைக் காண்கிறோம் என்றும் அறிவோம். இதன்படி பொருட்களை நாம் பார்ப்பதற்கு ஒளியானது, பொருளிலிருந்து எமது கண்களுக்கு பயணிக்க வேண்டியிருக்கிறது.

ஒரு குறிப்பிட்ட வேகத்தில் ஒளி பயணிப்பதால் ஒரு பொருளில் படுகின்ற ஒளி, எமது கண்களை வந்தடைய குறுகிய நேரம் எடுக்கும். அப்படியானால், நாம் நிகழ்நிலையில் (Live) காண்பதாக எண்ணிப் பார்க்கின்ற விடயங்கள் உண்மையில் அதன் பழைய நிலையிலேயே காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக பௌர்ணமி இரவொன்றில் ஆகாயத்தில் தோன்றும் முழுநிலவை நீங்கள் காணலாம். ஆனால், நிலவில் படுகின்ற ஒளியானது, எமது கண்களை வந்தடைய 1.2 செக்கன்கள் எடுக்கின்றது.

இதன்படி, 1.2 செக்கன்களுக்கு முந்திய நிலவின் தோற்ற அமைவையே நாம் காண்கின்றோம். ஆனாலும், அது நிகழ்நிலையான அமைப்பாக உடனடியாகக் காண்பதாக, மூளை எம்மை நம்பிக் கொள்ளச் செய்கிறது. இதுவொரு தோற்ற மயக்கமே.

இதுபோன்றே, நாம் அன்றாடம் காண்கின்ற பொருட்களில் படுகின்ற ஒளிக்கதிர்கள் எமது கண்களை வந்தடைந்து, அந்தப் பொருட்கள் எமது பார்வைப் புலத்தில் தோன்றுவதில் ஒரு தாமதம் ஏற்படும். அந்தத் தாமதம் ஒருசில நனோசெக்கன்களாகும். இந்தத் தாமதத்தை புறந்தள்ளி, நாம் உடனுக்குடன் பொருட்களைக் கண்டு கொள்வதாக எம்மை மூளை நம்பிவிடச் செய்துவிடுகிறது.

பொதுவாக இந்த நிலையை தொலைக்காட்சியின் நேரலை நிகழ்வினைக் காண்பதற்கு ஒப்பிட்டுக் கூறலாம். அதாவது, தொலைக்காட்சிகளில் நீங்கள் நேரலையாகக் காண்கின்ற நிகழ்ச்சிகள் உண்மையில், உங்கள் தொலைக்காட்சியில் தோன்ற ஒரு சில செக்கன்கள் தாமதமாகும். ஆனாலும் அந்தத் தாமதம் இருப்பதாய் நாம் உணர்வதில்லை.

அதேபோலவே நாம் இயல்பு வாழ்க்கையில் காண்கின்ற காட்சித் தாமத நிலைகளைப் புறந்தள்ளிவிட மூளை துணையாகி நின்று, இந்தக் கணத்தில் வாழ்கின்ற தோற்ற மயக்கத்தை தோற்றுவிக்கிறது. சற்று ஆழ அவதானித்தால் எல்லாமே தோற்ற மயக்கங்களாகும் என்றே சொல்ல வேண்டிவரும்.

நிறைவாக...ஓராண்டு காலம் பறந்து சென்று விட்டது. அடுத்த ஆண்டின் ஐந்து மாதங்களும் பறந்து சென்று விட்டன. இப்படி விரைவாக நகரும் காலங்கள் உங்களுக்குள் நம்பிக்கையைப் போதித்து, மனத்தில் நிலைத்திருக்கும் வகையில் காலத்தை சேமிக்கத் பொருத்தமான வாய்ப்பை உண்டாக்கித் தரட்டும் என்று பொத்தம் பொதுவாய் சொல்லிவிட என்னால் முடியாது. காலத்தை சேமிப்பதற்கான வாய்ப்பை, படைத்தலின் மூலம் உருவாக்கிக் கொள்ளுங்கள்.

வாய்ப்புக்கள் வருவதில்லை- உருவாக்கப்படுகின்றன என்பதை நானும் இன்னொரு தடவை பதிவு செய்கின்றேன்.

மலர்ந்துள்ள ஆண்டில் உங்கள் மனத்தில் மகிழ்ச்சி கொண்டு தரும் வகையில் தெரிவுகளைச் செய்யுங்கள்.

நீங்கள் எதுவோ அதுவாகவே ஆகிவிடுவதற்கான வாய்ப்பையும் வழக்கத்தையும் உண்டு பண்ணுங்கள்.

ஒவ்வொரு பொழுதையும் புதியதாய்க்கொண்டு, பயணங்களை பரவசத்துடன் எதிர்கொள்ளுங்கள்.

முக்கியமாக, அனுபவங்களை அற்புதமான பொக்கிஷமாக எண்ணி காலத்தை சேமியுங்கள்.

காலிங்கராசா ஹறிச்சந்திரா
தொழில்நுட்ப அலுவலர்,
மீன்பிடியியல் விஞ்ஞானத்துறை,
விஞ்ஞானபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 188

கறியுப்பின் (commonsalt) ஈரங் காட்டுகின்ற தன்மைக்கு அதிகம் பொறுப்பான உப்பு எது?

புதிர் 188 இற்கான விடைகளை 17.07.2017 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கலாநிதி.(செல்வி) ஷிவதர்சினி இராசலிங்கம்
ஆசிரியர்,
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்-பிரிவு A,
84,கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்[illegible]
இப் பணப்பரிசிலை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் [illegible] சென்று பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிர் 187 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

ஜா.மாதங்கி
இல.303, நாவலர் வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.


**புதிர் 187க்கான கேள்வியும் விடையும்:**

தேங்காயெண்ணெயில் செறிந்துள்ள பெரும்பான்மைக் கொழுப்பமிலம் எது?

லோறிக்கமிலம்

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 188

சரியான விடை:-..........................................
முழுப்பெயர்:-..........................................
முகவரி:-..........................................
தொ.பே. இல:..........................................
கையொப்பம்:..........................................



# பாரதம்

## விவசாயிகள் போராட்டம் வெடித்தது

### வீதியில் பாலை கொட்டி ஆர்ப்பாட்டம்



(அகமதாபாத்)

மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம் மாநிலங்களை தொடர்ந்து பிரதமர் மோடியின் குஜராத் மாநிலத்திலும் வங்கிக் கடன்களை தள்ளுபடி செய்யு வலியுறுத்தி அம் மாநில விவசாயிகள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

போராட்டத்தின் ஒரு பகுதியாக ஷத்ரிய தாகோர் சேனா அமைப்பு தலைமையில் பால் உற்பத்தியாளர்கள் சர்கீஜ் - காந்திநகர் நெடுஞ் சாலையில் நூற்றுக்கணக்கான லீற்றர் பாலை கொட்டி தங்களது எதிர்ப்பை வெளிப் படுத்தினர்.

இது தொடர்பாக தகோர் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், "இரண்டு நாட்களுக்கு குஜராத் மாநிலம் முழுவதிற்கும் பால் விற்பனைக்கு தடை அறிவித்துள்ளோம். இதனையடுத்து காந்தி ஆசிரமம் முதல் காந்தி நகர் வரை பேரணி நடத்தவுள்ளோம். அதற்கு பிறகும் அரசு செவிசாய்க்கவில்லை என்றால் ஆயிரக்கணக்கான விவசாயிகள் இணைந்து மாபெரும் போராட்டத்தில் ஈடுபடுவோம். எங்கள் நிபந்தனைகளை ஏற்கவில்லை என்றால், குஜராத் விவசாயிகளுக்கு அதிகாரத்தில் உள்ளவர்களை மாற்றும் வலிமை உள்ளது என்பதை ஒட்டு மொத்த இந்தியாவும் அறிய வேண்டும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

முன்னதாக கடந்த மாதம மகாராஷ்டிராவில் நடைபெற்ற போராட்டத்தில் ஷிர்தி பகுதியில் அம்மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்த விவசாயிகள் பாலை கொட்டி போராட்டத்தில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது. (3-8)

## 18 கிலோ சந்தன கட்டைகள் பறிமுதல்

### 3 பேர் கைது

(நாமக்கல்)

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகேயுள்ள முள்ளுக் குறிச்சி வழியாக கொல்லி மலைக்கு சந்தன மரக்கட் டைகள் கடத்தப்படுவதாக அப் பகுதி மக்கள் புகார் அளித் தனர். இதனையடுத்து கடந்த சில தினங்களாக தனிப்படை பொலிஸார் முள்ளுக்குறிச்சி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் வாகன தணிக்கையில் ஈடுபட்டு வந்தனர். நேற்று முன்தினம் இரவு மது விலக்கு ஏடிஎஸ்பி செந்தில் மேற்பார்வையில் சிறப்பு உதவி ஆய்வாளர் சக்திவேல் தலைமையிலான தனிப்படை பொலிஸார் முள்ளுக்குறிச்சியில் வாகன தணிக்கையில் ஈடுபட்ட வேளை சந்தேகமளிக்கும் வகையில் வந்த மாருதி காரை நிறுத்தி சோதனை நடத்திய போது சுமார் 18 கிலோ எடை கொண்ட சந்தன மரக்கட்டைகள் இருந் தது தெரிய வந்தது.

பொலிஸார் நடத்திய விசாரணையில் அவர்கள் கொல்லி மலையில் சந்தன மரக்கட்டைகளை விற்பனை செய்ய முள்ளுக்குறிச்சி அருகேயுள்ள வனப்பகுதியில் இருந்து மரங்களை வெட்டி கடத்தி வந்ததும் தெரியவந்தது. அதனை தொடர்ந்து 3 பேரையும் கைது செய்த பொலிஸார் 18 கிலோ சந்தன மரக்கட்டைகளையும், கடத்தி வரப்பட்ட காரையும் பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யப் பட்ட சந்தன மரக்கட்டைகள் வனத்துறையிடம் ஒப்படைக்கப் பட்டது. (3-8)



1948 இல் முதல் உலகப்போரில் வீரமரணம் அடைந்து ஹைஃபாவில் அடக்கம் செய்யப்பட்ட 44 இந்திய வீரர்களின் நினைவிடத்தில் பிரதமர் மோடி வீர வணக்கம் செலுத்தினார்.

## மத்திய ஆபிரிக்காவில் லொறி விபத்து - 77 பேர் பலி

(ஆபிரிக்கா)

மத்திய ஆபிரிக்க குடியரசின் பம்பாரி நகரில் பயணிகள் மற்றும் சரக்குகளுடன் பயணித்த லொறியொன்று விபத்திற்குள்ளானதில் அதில பயணித்த 77 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் சம்பவித்த குறித்த விபத்தில் பலர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காய மடைந்தவர்களுள் சிலரது நிலை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு எண் ணிக்கை மேலும் அதிகரிக் கக் கூடும் என அஞ்சப் படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள் ளன.

அதேவேளை, விபத்தில் உயிரிழந்த மற்றும் பாதிக் கப்பட்டவர்களுள் பெரும் பாலானோர் வர்த்தகர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

குறித்த நகரில் போதிய போக்குவரத்து வசதிகள் அற்ற நிலையில், மக்கள் இவ்வாறாக லொறிகளில் அடைந்து பயணிப்பது அங்கு வழமையாக உள் ளது.

இவ் வாறானதொரு சந் தர்ப்பத்தி லேயே இவ்விபத் தும் சம்ப வித்துள்ளது.

விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில்., லொறியின் அதிவேக பயணமே விபத்திற்கு காரணம் என உள்ளூர் சட்டவல்லுநர் ஒருவர் குறிப்பிட்டுள் ளார். (3-8)

## ஜி–20 மாநாட்டிற்கு எதிர்ப்பு;

### ஜேர்மனியில் முன்னெச்சரிக்கையாக பொலிஸார் குவிப்பு



(ஹம்பர்க்)

ஜேர்மனியில் அரசு எதிர்ப் பாளர்கள் 500-க்கும் மேற் பட்டோர் ஜி-20 மாநாட்டிற்கு எதிர்ப்பு தெரிவித்து ஹம்பர்க் நகரில் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆஜர்மனியில் ஹம்பர்க் நகரில் இன்று ஜி-20 மாநாடு தொடங்குகிறது. இந்த மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், துருக்கி ஜனாதிபதி தையீப் எர்டோகன் உட்பட பலநாட்டு தலைவர்கள் கலந்துகொள் கிறார்கள். ஜேர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்கல் மாநாட்டை ஆரம்பித்து வைக்கிறார்.

நேற்று முன்தினம் இரவு அரசு எதிர்ப்பாளர்கள் 500-க்கும் மேற்பட்டோர் ஜி-20 மாநாட்டிற்கு எதிர்ப்பு தெரி வித்து ஹம்பர்க் நகரில் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர். பொலிஸார் அவர்களை கலைந்து செல்லும்படி வலி யுறுத்தினர்.

ஆனால் அவர்கள் அதற்கு செவிசாய்க்கவில்லை. இதையடுத்து பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டு களை வீசி அவர்களை விரட்டி அடித்தனர்.



இதற்கிடையே ஜி-20 மாநாட்டின்போது ஹம்பர்க் நகரில் போராட்டக்காரர்கள் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பேரணி மற்றும் போராட்டங்களில் ஈடுபட உள்ளதாக தகவல்கள் கசிந் துள்ளன.

இந்த போராட்டத்தில் வன்முறை வெடிக்க வாய்ப்பு இருப்பதாகவும் தெரிகிறது. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஹம்பர்க் நகரில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் குவிக்கப்பட்டு உள்ளனர். (3-8)

## பாக். புதிய ஏவுகணை ப



(இஸ்லாமாபாத்)

இந்தியா - பாகிஸ்தான் உறவில் தற்போது பதற்றமான சூழல் காணப் படும் நிலையில், குறைந்த தூரம் சென்று தாக்கக்கூடிய ஏவுகணை பரிசோதனையை வெற்றிகரமாக நடத்தியுள்ளதாக அந்நாட்டு பாதுகாப்பு துறை தெரிவித்துள்ளது.

தரையிலிருந்து குறைந்த தூரம் சென்று இலக்கை தாக்கும் 'நாஸ்ர்' என்ற ஏவுகணையை பாகிஸ்தான் ராணுவம் பரிசோதனை செய்துள் ளது.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட இப் பரிசோதனை வெற்றிகரமாக நிறைவேறியதாக அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

குறைந்
ஏவுகணை
குறிவைத்
கிறது. இச்
பேசிய அந்
தளபதி ஆல
இராணுவ
களுடன் அ
தான்.
போர்
எங்கள் நில
துள்ளார்.
இச் சோ
நடத்தியு
ராணுவ
ஜனாதிபதி,
துள்ளனர்.

## கட்டார் மீது கோ உள்ள நட்பு ந

(கெய்ரோ)

சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், பக்ரைன், எகிப்து உள்ளிட்ட நட்பு நாடுகளின் கோரிக்கையை நிராகரித்த கட்டார் மீது நான்கு நாடுகளும் கோபத்திலுள்ளன.

சவுதி அரேபியாவும், அதன் நட்பு நாடுகளும் கட்டாருக்கு 13 கோரிக்கைகளை முன்வைத்து அதற்காக குறிப் பிட்ட நாட்கள் கெடுவும் விதிக்கப்பட் டது. ஆனால் அந்த கோரிக்கைகளை ஏற்க மறுத்த கட்டார் அனைத்து நாடுகளையும் புறக்கணித்தது.

சவுதி அரேபியா, எகிப்து, அரபு நாடுகள் மற்றும் பக்ரைன் நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர்களின்

சந்திப்புக்கு
களை நிரா
லுக்கு கண்
நிலைமை
மல் தவறா
ருப்பதாக
பட்டுள்ளது.
முன்னத
நடைமு
இருக்கிறது.
இது தீ
அல்ல. பேச்
இருக்கிறது
யுறவுத்து
மது பின் அ
கூறியிருந்த

## போதை மாபியா கு இடையே துப்பாக்

### அப்பாவி பொதுமக்கள் 2

(மெக்சிகோ)

மெக்சிகோ நாட்டின் வடக்கு எல்லையோர மாநிலத்தில் இரு போதை மாபியா கும்பல்களுக்கு இடையே நிகழ்ந்த துப்பாக்கிச்சூட்டில் சிக்கி 26 பொது மக்கள் பலியானதாக அரசு தெரிவித் துள்ளது.

சர்வதேச அளவில் போதை மருந்து விற்பனை செய்யும் கும்பல்களுக்கு சொர்க்கமாக திகழும் மெக்சிகோ நாட்டின் வடக்கு எல்லையோரம் உள்ள சிஹுவாவா மாநிலத்தின் மலைப் பாங்கான நகரம் லாஸ் வராஸ்.

இந்த நகரத்தில் நேற்று இரு கும்பல்களிடையே துப்பாச்கிச்சூடு நடைபெற்றுள்ளது.

இரு தரப்பினருக்கும் நடந்த இந்த துப்பாக்கிச் சண்டையில் சிக்கி 26 அப்பாவி பொதுமக்கள் பலியாகி யுள்ளனர்.

மேலும், பலர் உயிருக்கு ஆபத் தான நிலையில் வைத்தியசாலையில்

சிகிச்சைக்க
ளனர்.
இத்தாக்
குறித்த தக
சண்டை ந
களும் வெ
குறிப்பா
யாக்களால்
குறைப்பது
தைக்காக
செயலர் ஜா
நகருக்கு வ
பெனா நிட்
நிலையில்
பெற்றுள்ள
கடந்த
நாட்டின்
பொதுமக்க
பொலிஸா
சூட்டில் 17 பே
குறிப்பிடத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளிநாடு



## ...ஏவுகணை பரிசோதனை



...உறவில் ...காணப் ...த தூரம் ...வுகணை ...கிரமாக ...பாதுகாப்பு ...த தூரம் 'நாஸ்ர்' ...ஸ்தான் ...செய்துள் ...த்தப்பட்ட ...கிரமாக ...பாதுகாப்பு ...து.

குறைந்த தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகள் குறிப்பாக இந்தியாவை குறிவைத்தே அங்கு தயாரிக்கப்படுகிறது. இச் சோதனைக்கு பின்னர் பேசிய அந்நாட்டு ராணுவ தலைமை தளபதி ஆலம் பஜ்வா, "எங்கள் திறமை இராணுவ பலம் மிக்க அண்டை நாடுகளுடன் அமைதியை கடைப்பிடிப்பது தான்.

போர் வேண்டாம் என்பதுதான் எங்கள் நிலைப்பாடு" எனத் தெரிவித்துள்ளார்.

இச் சோதனையை வெற்றிகரமாக நடத்தியு... விஞ்ஞானிகள் மற்றும் ராணுவ ...திகாரிகளுக்கு அந்நாட்டு ஜனாதிபதி,பிரதமர் வாழ்த்து தெரிவித்துள்ளனர். (3-8)

## ...மீது கோபத்தில் ...நட்பு நாடுகள்

...ிய அரபு ...உள்ளிட்ட ...யை நிரா ...ாடுகளும் ...தன் நட்பு ...காரிக்கை ...ாக குறிப் ...திக்கப்பட் ...கைகளை ...த்து நாடு ...து, அரபு ...நாட்டின் ...சர்களின்

சந்திப்புக்கு பின்னர், கோரிக்கைகளை நிராகரித்த கட்டாரின் செயலுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. நிலைமையின் தீவிரத்தை உணராமல் தவறான முடிவை கட்டார் எடுத்திருப்பதாக டோகா சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக நட்புநாடுகளின்கோரிக்கை நடைமு...க்கு ஒத்துவராத ஒன்றாக இருக்கிறது.

இது தீவிரவாதம் தொடர்பானது அல்ல. பேச்சு சுதந்திரத்துக்கு எதிராக இருக்கிறது என்று கட்டாரின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஷேக் மொகமது பின் அப்துல் ரகுமான் அல்தானி கூறியிருந்தார். (3-8)

## ...மாபியா கும்பல்கள் ...துப்பாக்கிச் சூடு

### ...பொதுமக்கள் 26 பேர் பலி!

...த எல்லை ...த மாபியா ...நிகழ்ந்த ...26 பொது ...தெரிவித் ...த மருந்து ...்களுக்கு ...மக்சிகோ ...ம் உள்ள ...மலைப் ...ாஸ். ...ற்று இரு ...க்கிச்சூடு ...ந்த இந்த ...சிக்கி 26 ...பலியாகி ...கு ஆபத் ...ாலையில்

சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதலை நடத்தியவர்கள் குறித்த தகவல்களும், எதற்காக இச் சண்டை நடைபெற்றது என்ற தகவல்களும் வெளியாகவில்லை.

குறிப்பாக, போதை மருந்து மாபியாக்களால் ஏற்படும் குற்றங்களை குறைப்பது தொடர்பான பேச்சுவார்த்தைக்காக அமெரிக்க உள்துறை செயலர் ஜான் கெல்லி மெக்சிகோ சிட்டி நகருக்கு வந்து, அந்நாட்டு ஜனாதிபதி பெனா நிட்டோவைச் சந்தித்துள்ள நிலையில் இந்த தாக்குதல் நடைபெற்றுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை அந்நாட்டின் சினாலா மாநிலத்தில் பொதுமக்களின் போராட்டத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 17 பேர் பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (3-8)

## ஜப்பானில் கனமழை

### 56 பேர் பலி; 4 இலட்சம் மக்கள் வெளியேற்றம்!

(டோக்கியோ)

ஜப்பானில் கனமழை காரணமாக 10-க்கும் மேற்பட்டோர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர், 4 லட்சம் மக்களை மீட்பு குழுவினர் மீட்டு பாதுகாப்பான இடத்துக்கு அப்புறப்படுத்தியுள்ளனர்.

ஜப்பானில் பசுபிக் பெருங்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக புகுவாக்கா மற்றும் ஓதியா பகுதிகளில் தொடர்ந்து இரண்டாவது நாளாக கனமழை பெய்து வருகிறது. இதையடுத்து ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் பல வீடுகள் அடித்து செல்லப்பட்டுள்ளன.

இதில்10பேர்மாயமாகியுள்ளனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்ட அந்நாட்டு அரசு 4 லட்சம் மக்களை வெளியேற்றி பாதுகாப்பாக அரசு அலுவலகங்கள் மற்றும் அரசு பாடாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

இதுவரை கனமழைக்கு பலியானோர் எண்ணிக்கை 56 ஆக உயர்ந்துள்ளது. இந்த மழைக்கு இதுவரை 400 கோடி ரூபாய் மதிப்புடைய பொருட்கள் சேதம் அடைந்துள்ளன.

மட்பு பணியில் பொலிஸார, தயணைப்பு வீரர்கள், இராணுவத்தினர் உட்பட 7500 பேர் ஈடுபட்டுள்ளனர். மேலும் 40 உலங்குவானூர்தி மூலம்மக்களை மீட்பதாக அந்நாட்டு அரசு தகவல வெளியிட்டுள்ளது. (3-8)



## மாயமான உலங்குவானூர்தி கண்டுபிடிப்பு



(இட்டாநகர்)

அருணாச்சலப் பிரதேசத்தில் மாயமான இந்திய விமானப்படை உலங்குவானூாதியின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த உலங்குவானூர்தியில் பயணம் செய்த 3 விமானப் படை வீரர்கள் மற்றும் ஒரு பொலிஸார் என்ன ஆனார்கள் என்ற தகவல் கிடைக்காமல் இருந்தது.

4 பேரும் உயிரிழந்திருககலாம் என்று அஞ்சப்பட்டு வந்த நிலையில், இரண்டு பேரின் உடல்கள் காட்டுப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

எம்.ஐ-17 என்ற உலங்குவானூர்தி நிவாரணப் பணிகளை முடித்துக் கொண்டு அசாமின் சோனியூர் மாவட்டத்தில் உள்ள சலோனியரி ஐ.ஏ.எப் விமான த... திரும்பும் போது சுமாா 3.50 மணியளவில் அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் நேற்று முன்தினம் திடீரென மாய மானது.

உலங்குவானூர்திவிழுந்ததாக கருதப்பட்ட அசாம் மற்றும் அருணாச்சலப் பிரதேசப் பகுதிகளில் இராணுவம் மற்றும் துணை இராணுவ படைகள் தீவிர தேடுதல் பணியில் ஈடுபட்டு வந்தனர். அப்போது அருணாச்சலப்பிரதேசத்தில் யுபியா மாவட்டத்தில் அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் உலங்குவானூர்தியின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

உலங்குவானூர்தி பாகங்கள் கண்டெடுக்கப்பட்ட பகுதியில் உள்ள அருவிக்கு அருகில்ஒருவரது உடலும், நையார்ச் ஆற்றுப் பகுதிக்குள் மற்றொருவரது உடலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மற்ற இருவரது உடல்களை தேடும பணி ... கிறது. (3-8)

## வடகொரிய விவகாரம்; அவசரமாகக் கூடியது ஐ.நா.

(வோஷிங்டன்)

வடகொரியாவின் தொடர் சோதனைகள் அமெரிக்காவை கோபத்தில் ஆழ்த்தியது. இதையடுத்து, ஐ.நா. அவசரக் கூட்டத்தை கூட்டி உடனே விசாரிக்க வேண்டும் என்று அமெரிக்கா கோரிக்கை விடுத்திருந்தது.

அமெரிக்காவின் கோரிக்கையை ஏற்று, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் அவசரமாக கூடியது. இக் கூட்டத்தில் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், பிரிடன் உள்ளிட்ட நிரந்தர உறுப்பு நாடுகள் பங்கேற்றன.

இதில் வட கொரியாவின் ஏவுகணைச் சோதனையானது இராணுவ விரிவாக்கத்துக்கான செயல் என விமர்சித்துள்ள ஐ.நாவுக்கான அமெரிக்க தூதர் நிக்கி ஹாலே, வடகொரியா மீது இராணுவ நடவடிக்கை எடுப்பது குறித்த திட்டம் இன்னும் நடைமுறையில் உள்ளதாகவும் வடகொரியாவுடன் வர்த்தகம் செய்வதை ஊக்குவிப்பது ஐ.நாவின் பாதுகாப்பு தீர்மானத்தை மீறுவதாகவும் அதில்சில நாடுகள்அமெரிக்காவுடனும் வர்த்தகம் செய்வதற்கும் விரும்புகின்றன. ஆனால், அது நடக்காது. எனவும் தெரிவித்துள்ளார். வட கொரியா தனக்கான 90 சதவீத வணிகத்தை சீனாவுடன் மேற்கொள்கிறது. சீனா அதனை நிறுத்தவேண்டும்" என்று நிக்கி ஹாலே தெரிவித்துள்ளார்.

ஆனால், அமெரிக்காவின் இந்த எச்சரிக்கைக்கு சீனா இன்னும் பதில் ஏதும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**வடகொரியாவுக்கு எதிரான புதியதடை, இராணுவ நடவடிக்கைக்கு ரஷ்யா எதிர்ப்பு**

வடகொரியாவுக்கு மேலும் பொருளாதார தடையை விதிக்க வேண்டும் மற்றும் வடகொரியா மீது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அமெரிக்க பிரதிநிதி கேட்டுக் கொண்டார்.

இந்நிலையில், அமெரிக்காவின் கோரிக்கைக்கு ரஷ்யா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து ரஷ்யாவின் துணைத்தூதர் விளாடிமிர் சாஃப்ரான் கோவ் தெரிவிக்கையில்,

வடகொரியா மீதான புதிய பொருளாதார தடையை எதிர்ப்பதாக கூறினார்.

மேலும்வடகொரியாமீதான ராணுவ நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது என்று தெரிவித்துள்ளார்.

நாம் வெறுமனே ஒரு முட்டுக்கட்டையை நோக்கி விரைகிறோம்.

வடகொரியாவின் ஏவுகணை சோதனைக்கு இராணுவ நடவடிக்கைகளும் தீரவாக அமையாது. எனவே ரஷயா அதனை ஏற்காது என்று தெரிவித்தார். (3-8)

## தமிழகத்தில் முதுநிலை மருத்துவ மாணவர் சேர்க்கைக்கு அனுமதி

### உயர் நீதிமன்ற தடையை நீக்கியது உச்ச நீதிமன்றம்

(டில்லி)

தமிழகத்தில் முதுநிலை மருத்துவ மாணவர் சேர்க்கைக்கு சென்னை உயர் நீதிமன்றம் விதித்த தடை உத்தரவை இரத்து செய்த உச்ச நீதிமன்றம், இந்திய மருத்துவ கவுன்சில் விதிகளைப் பின்பற்றி மாணவர் சேர்க்கையை நடத்தலாம் என உத்தரவிட்டது.

முதுநிலை மருத்துவ மாணவ சேர்க்கை தொடர்பாக தமிழக அரசு கடந்த மே 6ஆம் திகதி புதிய அரசாணை வெளியிட்டு, அதன் அடிப்படையில் மே 7 ஆம் திகதி மருத்துவ பட்டமேற்படிப்பு மாணவர் சேர்க்கைக்கான தகுதிப பட்டியலையும் வெளியிட்டது.

கிராமப்புறங்களில் சேவையாற்றிய மாணவர்களுக்கு சலுகை மதிப்பெண் வழங்கப்படும் என்றும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டது. அதன்படி கலந்தாய்வும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

இந்த அரசாணை மற்றும் கலந்தாய்வை இரத்து செய்யக்கோரி விழுப்புரத்தைச் சேர்ந்த டாக்டர் பிரணிதாஉள்ளிட்டபலர்சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

இந்த மனுக்களை விசாரித்த உயர் நீதிமன்றம், மே மாதம் நடத்தப்பட்ட முதுநிலை மருத்துவ மேற்படிப்பிற்கான அரசாணை மற்றும் தகுதிப் பட்டியலை இரத்து செய்தது.

அத்துடன், புதிய தகுதிப் பட்டியலை வெளியிடவும் உத்தரவிட்டது. இதனை எதிர்த்து தமிழக அரசு சார்பில் உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இவ்வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நேற்று தீர்ப்பளித்தனர்.

அப்போது, கிராமப் புறங்களில் சேவையாற்றிய மருத்துவர்களுக்கு சலுகை மதிப்பெண் வழங்கும் தமிழக அரசின் அரசாணை செல்லும் என்றும், தமிழக அரசு முதுநிலை மருத்துவ மாணவர் சேர்க்கையை நடத்திக் கொள்ளலாம் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

மேலும், கல்வி தொடர்பான விவகாரங்களில் இது போன்ற தடை உத்தரவுகள் பிறப்பிப்பதை உயர் நீதிமன்றங்கள் தவிர்க்க வேண்டும் என்றும் நீதிபதிகள் அறிவுறுத்தினர். (3-8)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒன்பது பேர் பலி

(டில்லி)

இந்தியாவின் வடக்கு பிஜ்நோர் நகரில் பேருந்து ஒன்றுடன் கார் மோதி விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தை சேர்ந்த ஒன்பது பேர் உயிரிழந்துள்ளதுடன்மேலும் நால்வர் காயமடைந்துள்ளனர்.

விடுமுறையை முன்னிட்டு டெஹ்ரான் நகருக்கு செல்லும வழியில் பிஜ்னோர் சுகாபூர் நகரில் நேற்று வியாழக்கிழமை காலை 6 மணிக்கு இவ்விபத்து சம்பவித்துள்ளது.

சம்பவத்தில்காய மடைநத நால்வரும் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

பேருந்தின் வேகம் காரணமாக இவ்விபத்து சம்பவித்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.(3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவம் வெளியேற்றப்படவேண்டும் என்ற விக்னேஸ்வரனின் கோரிக்கை குறித்து தேவையின்றிக் கவலைப்படக் கூடாது

## புதிய இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவ வெளியேற்றம் குறித்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் கோரிக்கை தொடர்பாக தேவையின்றிக் கவலைப்படக் கூடாது என்று புதிய இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மஹேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கில் இருந்து இராணுவத்தினர் வெளியேற வேண்டும் என்று வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறாரே என்று செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்குப் பதிலளித்த இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மஹேஷ் சேனநாயக்க "வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எனது நல்ல நண்பர்.

இதுபோன்ற அறிக்கைகள் தொடர்பாக தேவையின்றிக் கவலைப்படக் கூடாது.

தேவைகளின் அடிப்படையில்தான் படையினரை நிறுத்தும் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. அரசியல் நோக்கில் ஆயுதப்படைகள் நிறுத்தப்படுவதில்லை.

போரின் போது இராணுவத்தினர் நிலங்களைக் கைப்பற்றினர். ஆனால் போர் நடவடிக்கை முடிந்து விட்டது. எனவே, குறிப்பிட்ட அவதானிப்புக் காலத்துக்குப் பின்னர் படையினர் நிலங்களை மீளவும் உரிமையாளர்களிடம் ஒப்படைத்து வருகின்றனர்.

அத்தியாவசியமான முகாம்கள் தொடர்ந்து பேணப்படும். ஏனைய பகுதிகள் பொதுமக்களிடம் ஒப்படைக்கப்படும். இந்த முடிவுகளால் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏதும் இல்லை.

சரியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இராணுவத்தினர் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்படும்.

போருக்குப் பிந்திய நல்லிணக்கச் செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்கு இராணுவம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதற்கு நாம் எப்போதும் தயாராகவே இருக்கிறோம்" என்று தெரிவித்தார். (இ-7)

# அரசியலமைப்பு மாற்றத்துக்கு 6.2 மில்லியன் மக்கள் ஆணை வழங்கியுள்ளனர் - ஜே.வி.பி.



(கொழும்பு)

புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதற்கு 6.2 மில்லியன் மக்கள் தற்போதைய அரசாங்கத்துக்கு ஆணை வழங்கியுள்ளனர் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு மாற்றம் தேவையற்றது என்று பௌத்த பீடாதிபதிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளமை குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர்,

"பௌத்த பீடாதிபதிகள் இது தொடர்பாக வெளியிட்டுள்ள கருத்து, பௌத்த பிக்குகளின் கருத்தேயாகும்.

புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதற்கு 2015 ஆம் ஆண்டு தேர்தலில் 6.2 மில்லியன் மக்கள் இந்த அரசாங்கத்துக்கு ஆணை வழங்கியுள்ளனர்.

முன்னைய அரசாங்கங்களும் பதவிக்கு வர முன்னர், அரசியலமைப்பு மாற்றம் தொடர்பாக வாக்குறுதிகளை வழங்கியிருந்தன. ஆனால் அதனை நிறைவேற்றவில்லை.

இந்த நிலையில் பௌத்த பீடாதிபதிகளுக்கு நிலைமையை விளங்கப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

அடிப்படைவாதிகள் பொது மக்களைத் தவறாக வழிநடத்தாமல் தடுப்பதற்கு, புதிய அரசியலமைப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியதும் அரசின் கடப்பாடு" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# கொழும்பு துறைமுக நகரத்துக்கான நிலமீட்புப் பணிகள் 45 வீதம் பூர்த்தி

கொழும்பு துறைமுக நகரத் திட்டத்துக்காக கடலில் இருந்து நிலத்தை மீட்கின்ற 45 வீத நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக சி.எச்.ஈ.சி. போர்ட் சிற்றி கொழும்பு நிறுவனத்தின் தலைமை விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அதிகாரி லியாங் தோ மிங் தெரிவித்துள்ளார்.

பீஜிங்கில் உள்ள சீன துறைமுக பொறியியல் நிறுவனத்தில் நேற்று முன் தினம் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

'மூன்று தூர் வாரும் கப்பல்களைக் கொண்டு நிலப் பரப்பை கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



நிலத்தை மீட்கும் நடவடிக்கைகள் 2019ஆம் ஆண்டு நிறைவடையும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஆரம்ப உட்கட்டமைப்பு வேலைகள் மற்றும் பாதைகள் அமைப்பு வேலைகள் 2020 இல் நிறைவடையும்.

2021இல் கடற்கரை, மரினா மற்றும் மத்திய பூங்கா என்பன தொடர்பான பணிகள் நிறைவு செய்யப்படும். அனைத்துலக நிதி நிலையத்தை அமைக்கும் பணிகள் 2023 இல் நிறைவடையும். துறைமுக நகர கட்டுமானப்பணிகள் அனைத்தையும் 2016 ஆம் ஆண்டு முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

தொழில்மயமாக்கலில் கொழும்பை மாற்றுவதில் இந்தத் திட்டத்தின் போது கவனம் செலுத்தப்படும்.

ஆரம்பத்தில் 233 ஹெக்டேயரில் அமைக்கத் திட்டமிடப்பட்ட துறைமுக நகரத் திட்டம் தற்போது 269 ஹெக்டேயராக விரிவாக்கப்பட்டுள்ளது. இங்கு 83 ஆயிரம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

துறைமுக நகரத்தில் இருந்து பிரதான நெடுஞ்சாலைக்கு சுரங்கப்பாதை வழியாகவும் மேம்பாலம் வழியாகவும் இரண்டு இணைப்புகள் ஏற்படுத்தப்படும்.

30 நிமிடங்களில் விமான நிலையத்தை அடைவதற்கும் பாதை அமைப்புகள் உருவாக்கப்படும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### கொடுத்தும் புண்ணியமில்லாமல்...

நாம் எவ்வளவோ சந்தர்ப்பங்களில் ஏதேதோ கொடுக்கிறோம். பொருளாக, பணமாக ஆனால் அதன் மூலம் நூறு சதவீதப் பலன் கிடைக்கிறதா? என்றால் பெரும்பாலும் இல்லை.

பலன் என்று நான் குறிப்பிடுவது நன்றியுணர்ச்சி. அல்லது மகிழ்ச்சியை அல்லது பின் விளைவுகளைத்தான்.

சிலபேர் சில தானங்களைக் கொடுக்கும் போது சம்பந்தப்பட்டவர்களைத் தங்கள் இருக்கைக்கோ இருப்பிடத்திற்கோ வீட்டிற்கோ வரவழைத்துக் கொடுக்கிறார்கள். இது முழுப் பலனைத்தருவதில்லை. நாமே போய்க் கொடுப்பதுதான் நல்லது. அல்லது யார் மூலமாக வேனும் கொடுத்தனுப்பலாம்.

சிலர் ஊரெல்லாம் பறைசாற்றிவிட்டுக் கொடுப்பார்கள். சம்பந்தப்பட்டவர்களுக்கோ அவமானமாக இருக்கும். அமைதியாக நடக்கவேண்டிய ஒரு விடயத்தை இப்படி டமாரம் அடித்துவிட்டுக் கொடுக்கிறாரே என்று வருத்தமாக இருக்கும். இப்படிச் செய்யப்படும் உதவிக்கு 80 சதவிகிதப் பலன்தான் உண்டு.

சிலர் கொடுப்பார்கள். ஆனால் அதை சாமானியத்தில் கொடுக்கமாட்டார்கள். பத்துத் தடவை நடக்க விடுவார்கள். சாக்குப் போக்குகளையும் காரணங்களையும் பொய்களையும் வண்டி வண்டியாக அவிழ்த்துவிடுவார்கள். அடப் போய்யா நீயும் உன் உதவியும் என்று சம்மந்தப்பட்டவர்கள் குமுறும் வேளையில்தான் கொடுப்பார்கள். இப்படி செய்யப்படும் உதவிக்கு 60சதவிகிதப் பலன் கூட இராது.

சிலபேர் கண்டபடி திட்டி விட்டுக் கொடுப்பார்கள். தலையெழுத்து உனக்குப் போய் கொடுக்கின்றேன் என்று சபிப்பார்கள். இப்படி கொடுக்கப்படும் எதற்கும் 40 சதவிகித பலன்கூட இராது.

''கேட்டதும் உடனே எடுத்துக் கொடுத்தாருய்யா. கொஞ்சம் கூட யோசிக்க வில்லை! அவருதான்யா மனுசன்!'' என் கிறார்கள் அல்லவா? இவர்களுக்குத் தான் 100சதவிகிதப் பலன் உண்டு.

அதெப்படிக் கேட்டதுமே தூக்கிக் கொடுத்து விடுவது? அதைப்படி யோசிக்காமல் எடுத்துக் கொடுப்பது என்று கேட்கிறீர்களா?

இதற்கு சில உபாயங்கள் இருக்கின்றன. ஒருவர் வந்தவுடன் அவர் பேசும் தொனி, அசட்டுச் சிரிப்பு, அவரது குழைவு, அவரது பின்னணி ஆகியவற்றை வைத்து அவர் ஏதோ உதவி கேட்டுத்தான் வந்திருக்கிறார் என்கிற முடிவுக்கு சீக்கிரமே வந்துவிடலாம்.

உடனே மனசுக்குள் இருக்கும் கம்பியூட்டரில் கணக்குப் போட்டுப் பார்த்து இவருக்கு உதவுவதா? உதவ வேண்டாமா? என்கிற முடிவுக்கு வந்துவிடவேண்டும்.

உதவுவது என முடிவு செய்துவிட்டால் என்னால் முடிந்த உதவி உண்டு என்று மட்டும் சொல்லி அவர் கேட்கும் உதவியின் தன்மையை வைத்து முடிவுக்கு வரலாம்.

சட்டென்று கேட்டுவிட்டால் உரையாடலை (அவர் கேட்ட உதவி தொடர்பாக) வளர்த்து இடைப்பட்ட நேரத்தில் சிந்திக்க அவகாசம் எடுத்துக்கொண்டு சீக்கிரமே முடிவுக்கு வரலாம். யோசிச்சுச் சொல்கிறேன்; நாளைக்கு வாங்க என்று விடயத்தை ஜவ்வாய் இழுக்க வேண்டியது இல்லை.

லேனா தமிழ்வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2007 வினாத்தாள் பகுதி-2

♦ பின்வரும் பந்தியை வாசிக்க.

பூத்துணி போலத் தோன்றிய நட்சத்திரங்களைவிட பூரண சந்திரனே வானில் தெரிந்தது. தொலைவில் உள்ள சந்திரனின் கதிர்கள் விழுந்து சமுத்திரம் பலபலத்தது.கரைக்கு அண்மையில் உள்ள கற்பாறையைத் தவிர்த்துக்கொண்டு கப்பல் செலுத்தப்பட்டமையால் அது சற்று வளைவான பாதையில் சென்றது.

இந்தப் பந்தியைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 6 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

O1. மேற்குறித்த விபரத்தில் நாளின் எந்தக் காலம் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது?

.......................................................................................

O2. இங்கு நடைபெறும் உவமானத்தை எழுதுக. ..........................................

O3. " அண்மையில்" என்பதன் எதிர்க் கருத்தை எழுதுக. .................................

O4. "சமுத்திரம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக. ...............................

O5. கப்பல் எதனைத் தவிர்த்துக்கொண்டு சென்றது. ......................................

O6. " அது சென்றது" இங்கு அது என்பதை பன்மையாக மாற்றி எழுதுக. ...............

♦ 7ஆம் 8 ஆம் வினாக்களில் ஒவ்வொரு பழமொழியினதும் கருத்தை எழுதுக.

O.7. ஆழம் அறியாமல் காலை விடாதே ..................................................

O8. ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு .....................................................

O9. அடைப்பிலுள்ள எழுத்துக்களிலிருந்து பொருத்தமான எழுத்தைத் தெரிவு செய்து பின்வரும் சொற்களைப் பூரணப்படுத்துக.

| ன ண ல ழ |

1) நூல.....கம் 2) மா.....வன் 3) வ.....க்கு 4) விமா.....ம்

10. பின்வரும் வாக்கியத்தை பெண்பாலாக மாற்றி எழுதுக.

| நண்பன் பாட்டுப் பாடினான் |

...........................................................................

11. பொருத்தமான நிறுத்தற் குறியை இடுக.

| உங்களுக்கு வெற்றி உண்டாகுக |

...........................................................................

12. பின்வரும் கருத்திற்குப் பொருத்தமான தனிச் சொல்லை எழுதுக.

| ஒருவருக்கும் தீங்கு அல்லது இம்சை செய்யாமை |

...........................................................................

13. பின்வரும் சொற்களைப் பொருத்தமாக்கி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

| வெளியிடுதல் பத்திரிகை பிரதான வகிக்கிறது இடம் செய்திகளை |

.......................................................................................

14. வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை எழுதுக.

(i) This is my ......................



(ii) கிளி என்பதன் ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக. ..................

15. பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தை எழுதுக.

(i) I am hungry ......................................

16. பின்வரும் வாக்கியுத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

உமது பெயர் என்ன? ...............................................................

17. இதன் கருத்தை தமிழில் எழுதுக. "மெஹி என்ன" ......................................

18. "பால் குடிக்க" என்பது சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழில் எழுதுக.

...............................................................

♦ 19 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

19. பின்வரும் பூக்களிடையே நறுமணம் வீசும் பூ

1) காட்டு மல்லிகை 2) நந்தியாவட்டை 3) மல்லிகை 4) வாடா மல்லிகை

20. புளிய மரத்தின் இலைகளின் வடிவத்தை ஒத்த வடிவமுள்ள இலைகள் இருக்கும் தாவரம்

1) அகத்தி 2) வல்லாரை 3) பொன்னாங்கன்னி 4) தொட்டாச்சுருங்கி

21. தண்டில் காய்க்கும் தாவரம்

1) விளிம்பி 2) லொவி 3) எலுமிச்சை மங்குஸ்தான்

22. பூக்களுக்குத் தீங்கு பயக்கும் விலங்கு

1) ஈசல் 2) தேனீ 3) குளவி 4) வண்டு

23. பின்வருவனவற்றில் புரதம் மிக்கது

1) கரட் 2) பருப்பு 3) கீரை 4) பசளி

24. மருத்துவரால் நோயாளிக்கு விதிக்கப்படும் மருந்தைக் குடிக்க முன்பாக கருத்திற் கொள்ளவேண்டிய முக்கிய விடயம்

1) மருந்தில் அடங்கியவை 2) மருந்தை உற்பத்தி செய்த நாடு
3) ஒரு வேளைக்கு எடுக்கவேண்டிய அளவு 4) மருந்தின் விலை


25. இலங்கை அமைந்திருப்பது இந்தியாவுக்கு

1) வடக்கே 2) தெற்கே 3) மேற்கே 4) கிழக்கே

26. ஆடையில் படிந்த தார்க்கறையை நீக்குவதற்கு மிகவும் உகந்த பொருள்

1) மண்ணெண்ணெய் 2) தேங்காயெண்ணெய்
3) எலுமிச்சம் புளி 4) வினாகிரி

27. மஞ்சள் நிறப்பின்னணியில் காணப்படும் இவ்வீதிச் சமிக்ஞை எதனைக் குறிப்பிடுகின்றது.




1) முன்னால்
2) படலையுடன் கூடிய புகையிரதக் கடவை முன்னால்
3) பாதுகாப்பில்லாத புகையிரதக் கடவை முன்னால்
4) வீதி எதிரே மூடப்பட்டுள்ளது

28. நாய் கடித்தால் முதலில் என்ன செய்ய வேண்டும்?


1) கடித்த இடத்தைத் துணியினால் கட்டவேண்டும்.
2) கடித்த இடத்தை சவர்க்காரத்தினாலும் தூய நீரினாலும் கழுவிவிடவேண்டும்.
3) கடித்த இடத்தில் மருந்தைப் பூசவேண்டும்.

29. துளைக் கமராவின் ஊடாக தொலைவில் உள்ள கட்டடம் தோன்றும் விதம்



1) 2) 3) 4)

30. நேற்றிரவு வானில் பூரண சந்திரன் காணப்பட்டிருந்தால் ஒரு வாரத்திற்குப் பின்னால் வானில் காணப்படும் சந்திரனின் வடிவத்தைக் காட்டும் உரு



1) 2) 3) 4)

31. இலங்கைப் பிரஜையின் வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழைப் பெறுவதற்கு முதலில் செல்ல வேண்டியது

1) பொலிஸ் நிலையத்தில் 2) கிராம அலுவலரிடம்
3) சமாதான நீதவானிடம் 4) பிரதேச செயலாளரிடம்

32. இலங்கையில் ஒரு குறித்த பிரதேசத்தில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. அப் பிரதேசத்தில் இருந்து மக்களை விரைவாக வெளியேறுமாறு அறிவுறுத்துவதற்கு மிகவும் உகந்த ஊடகம்

1) ஒலிபெருக்கி 2) தொலைபேசி 3) தொலைக்காட்சி 4) வானொலி

33. அயடீன் சேர்க்கப்பட்ட உப்புப் பொதியில் பின்வரும் குறியீடு உள்ளது. இதன் கருத்து யாது?



1) ஈரலிப்புள்ள இடத்தில் வைக்கவேண்டாம்.
2) குழாய் நீரைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்க.
3) கழுவாமல் பயன்படுத்துக.
4) வெந்நீரினால் மாத்திரம் கழுவுக.

34. தையல் முறைகளிடையே "விஸ்பம்". தையலைக் காட்டும் உரு யாது?



1) 2) 3) 4)

35. கண்டமாலை நோய்க்குப் பிரதான காரணம் யாது?

1) அயடீன் குறைபாடு 2) இரும்புச்சத்துக் குறைபாடு
3) விட்டமின் குறைபாடு 4) கல்சியம் குறைபாடு

36. சூரிய ஒளி நன்றாக விழும் இடத்தில் ஒரு மரத்தின் கிளை ஒரு பரிசோதனைக்காக பொலித்தீன் பையினால் கட்டிவைக்கப்பட்டது. ஏறத்தாள ஒரு மணித்தியாலத்திற்குப் பின் அதனை அவதானித்த போது

1) அதன் இலைகள் வாடி இருக்கக் காணப்பட்டன.
2) இலைகள் ஓரளவு மஞ்சள் நிறமாக்க காணப்பட்டன.
3) பையனுள்ளே சிறிதளவு நீர்த்துளிகள் படிந்திருக்கக் காணப்பட்டன.

37. விழாக்காலங்களில் மேள வாத்தியத்துடன் பயன்படுத்தப்படும் பொருள்



1) 2) 3) 4)

38. பொலித்தீன் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

1) பொலித்தீனை எரிக்கும் போது வெளியேறும் நச்சு வாயு நோய்களை உண்டாக்குகிறது.
2) பொலித்தீன் விரைவாக உக்குவதற்கு மண் உதவுகிறது.
3) பொலித்தீன் துண்டுகள் வடிகால்களை அடைகின்றமையால் நீரோட்டத்திற்குத் தடை ஏற்படுகின்றது.
4) கைவிடப்பட்ட உணவுள்ள பொலித்தீனை உண்பதனால் விலங்குகள் இறக்கின்றன.

39. மகாவலி கங்கை கடலுடன் சங்கமிக்கும் இடத்திற்கு அண்மையில் அமைந்துள்ள நகரம்


1) களனி 2) காலி 3) களுத்துறை 4) திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2007 வினாத்தாள் பகுதி-2

40. சமாதானத்தின் சின்னமாகக் கருதப்படுவது
1) வெள்ளை அன்னம் 2) வெண்புறா
3) வெள்ளைக் கொக்கு 3) நாகணவாய்

♦ பல்வேறு பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் சில கருவிகள் கீழே காணப்படுகின்றன.
பின்வரும் பணிகள் ஒவ்வொன்றையும் செய்வதற்கு மிகவும் உகந்த கருவியின் இலக்கத்தை புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.



1) 2) 3) 4) 5)

41. கைமரத்தினூடகச் செல்லும் துளைகளைத் துளைப்பதற்கு ..............................
42. மரக்குற்றியில் உருவத்தைச் செதுக்குவதற்கு ..............................

♦ இலங்கையின் இரு கலைப்படைப்புகளின் படங்கள் கீழே காணப்படுகின்றன.



43. ..................................



44. ..................................

45. இலங்கையில் பிரசித்தி பெற்ற விளையாட்டுக்களின் படங்கள் கீழே காணப்படுகின்ன. அவற்றின் பெயர்களை எழுதுக.




i) ..............................




ii) ..............................

46. இரு உலர் மின்கலங்களும் ஒரு மின்குமிழும் உருவில் காணப்படுகின்றன. மூன்று வயர் (கம்பி) துண்டுகளை மாத்திரம் பயன்படுத்தி மின்குமிழை ஒளிரச்செய்வதற்கு உலர் மின்கலங்களையும் மின்குமிழையும் தொடுக்க வேண்டிய விதத்தை வரைக.




47. ஒரு குழுவிலுள்ள மாணவர்களிடமிருந்து அவர்கள் மிகவும் விரும்பும் பழங்கள் பற்றிக் கேட்டுத்தகவல்கள் குறிக்கப்பட்டன.





i) மாம்பழத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது? ..........................
ii) கொய்யாப்பழத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க எத்தனை
iii) மாணவர்கள் பப்பாசிப்பழத்தை கூடுதலாக விரும்புகின்றனர்? ..........................
iv) 35 மாணவர்கள் அன்னாசிப்பழத்தை விரும்பினர் அதனை உரிய நிரலில் குறித்து நிழற்றுக.
v) இந்த ஐந்துவகைப் பழங்களையும் விரும்பும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
..............................................................

48. ஒரு கட்டடத்தின் திட்டப்படம் பின்வரும் உருவில் காணப்படுகின்றது.




இங்கு காட்டப்பட்டுள்ள அளவிடைக்கு ஏற்ப அறை B யின் நீளம் யாது? ..................m

49. உருவில் காணப்படும் சதுரத்தில் சமச்சீராக கோடுகளை வரைக.



50. சில நகரங்களுக்கிடையே உள்ள தூரங்கள் பின்வரும் உருவிலே கிலோ மீற்றரில் தரப்பட்டுள்ளன.

| | காலி | கொழும்பு | புத்தளம் |
|---|---|---|---|
| கொழும்பு | | | 142 |
| காலி | | 116 | 258 |
| மாத்தறை | 45 | 161 | |


50. மாத்தறையிலிருந்து காலி, கொழும்பினூடாகப் புத்தளத்திற்கு உள்ள தூரம் யாது?
..............................................

51. ரூபாய் 25.00 விலையுள்ள ஒரு வரைதற் புத்தகத்தையும் ரூபாய் 15.50 விலையுள்ள வர்ணப்பெட்டியையும் வாங்கி 100 ரூபாயத் தாள் ஒன்றினைக் கொடுக்கும்போது கிடைக்கும் மீதி யாது? ..............................................

52. ரவியின் தாயின் நிறை ரவியின் நிறையின் இருமடங்காகும். தாயின் நிறை 55 kg 500g எனின் ரவியின் நிறை யாது? ......................................


53. ஒவ்வொன்றும் 75 ml கொள்ளளவு உள்ள ஆறு போத்தல்களில் உள்ள பானம் வேறொரு பாத்திரத்தில் உள்ள பானத்தின் மொத்தக் கனவளவு லீற்றரிலும் மில்லி லீற்றரிலும் யாது? ..........................................

54. கடிகாரம் A இன் முகத்தில் காணப்படும் நேரத்தை கடிகாரம் B யின் முகத்தில் காட்டுவதற்கு அதில் மணித்தியால முள்ளையும் நிமிட முள்ளையும் வரைக.




55. ஒரு அறையின் சுவர்களில் பூசுவதற்கு 3 லீற்றர் தீந்தை தேவை. தீந்தையை $\frac{1}{2}$ லீற்றர் தகரப்பேணிகளில் கொள்வனவு செய்யலாம். ஒரு தகரப்பேணி தீந்தையின் விலை ரூ. 350.00 ஆகும். தீந்தைக்கு எவ்வளவு பணம் செலவிடப்பட்டது.


56.



உருவின் நிழற்றப்பட்ட பகுதியை தசம எண்ணாக எழுதுக. ......................................

57. ஒருவருக்கு ஆறு பென்சில்கள் வீதம் 650 பென்சில்களை எத்தனை பேருக்குக் கொடுக்கலாம்? அவ்வாறு கொடுத்தபின்னர் எத்தனை பென்சில்கள் எஞ்சியிருக்கும்?
..........................

58. தரப்பட்டுள்ள அளவீடுகளுக்கேற்ப இவ்வுருவின் சுற்றளவைக் காண்க.




59. மாணவன் ஒருவன் எழுத ஆரம்பித்த ஒரு கட்டுரையின் முதற் பகுதி கீழே தரப்பட்டுள்ளது. அவன் நிறுத்திய இடத்திலிருந்து ஆறு ஆக்கபூர்வமான வாக்கியங்களை எழுதி மீதிப்பகுதியைப் பூரணப்படுத்துக.

சில மாதங்களாகப் புவியின் மேற்பரப்பில் ஒரு மழைத்துளியும் விழவில்லை. கடும் வெப்பத்தின் விளைவாக நிலத்தில் வெடிப்புகள் கோடுகளாகக் காணப்பட்டன. ஆறுகள், குளங்குட்டைகள், தடாகங்கள் ஆகியன வரண்டுபோய் இருந்தன. கண்ணுக்குத் தெரியும் அளவிற்குப் பச்சை நிறம் காணப்படவில்லை. அதிர்ஷ்ட வசமாக திடீரென இடிமின்னலுடன் வானம் மழை பொழியத் தொடங்கியது.

(ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களேனும் இடம்பெறவேண்டும் அவ்வாக்கியங்களில் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாக இருக்க வேண்டும்)

i) ..............................................................
ii) ..............................................................
iii) ..............................................................
iv) ..............................................................
v) ..............................................................
vi) ..............................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு ரகசியமாக தொலைபேசிகளை ஒட்டுக்கேட்கிறது



## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

அரசாங்கம் இரகசியமாக தொலைபேசிகளை ஒட்டுக் கேட்டு வருகின்றது என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதயகம்மன்பில குற்றஞ்சாட்டினார்.

தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்பதற்காக அரசாங்கம் அமெரிக்காவிலிருந்து ஓர் கருவியை தருவித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். கையடக்கத்தொலைபேசிகளை ஒட்டுக் கேட்கக்கூடிய வகையிலான கருவிகளை தற்போதைய அரசாங்கம் தருவித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தொலைத்தொடர்பு நிறுவனங்களின் ஒத்துழைப்பு இன்றி அரசாங்கத்தினால் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்க முடியாது எனத் தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் முன்னாள் ஜனாதிபதி மகி ந்த ராஜபக்ஷ தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்டதாகக் குற்றம் சுமத்தப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# குற்றச்சாட்டை ஒப்புக்கொண்ட பிரதியமைச்சர்

## 20ம் திகதி தண்டனை

சொத்து விபரங்களை வெளியிடாமல் இருந்ததாக தம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை முன்னாள் பிரதியமைச்சர் சரண குணவர்தன ஒப்புக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வழக்கு கொழும்பு பிரதான நீதவான் லால் ரணசிங்க முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போதே முன்னாள் பிரதியமைச்சர் தம்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இதையடுத்து இம்மாதம் 20ஆம் திகதி இவருக்கு தண்டனை விதிக்கப்படும் என நீதவான் லால் ரணசிங்க தெரிவித்துள்ளார். (இ-7)

# மகிந்த குடும்பத்துக்கு மைத்திரி வழிவிடார்

(கொழும்பு)

மகிந்த குடும்பம் மீண்டும் ஆட்சிக்கு வர முயன்றால், ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அதற்கான வழியை விடமாட்டார்" என, சுகாதார அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

அரசாங்கத்தகவல்திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில், மகிந்த குடும்பம் ஆட்சிக்கு வந்தால் தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக அமைச்சரவைக் கூட்டத்தின் போது ஜனாதிபதி கூறியமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"ஒன்றிணைந்த எதிரணியின் பாதயாத்திரை கொழும்புக்கு வந்தபோது, மகிந்த இது குறித்து தெளிவாகக் கூறியிருந்தார். 'மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினால், 20 ஆண்டுகளுக்குத் திருப்பிக் கொடுக்கமாட்டேன்' எனத் தெரிவித்திருந்தார்.

அவர் ஆட்சிக்கு வந்தால் ஆயுள் முழுவதும் மகிந்த குடும்பத்தினருக்குப் பலியாக நேரிடும் என, ஜனாதிபதி அறிந்திருந்தார். எனவே, மகிந்த குடும்பம் மீண்டும் ஆட்சிக்கு வர முற்பட்டால், ஜனாதிபதி அதற்கான வழியை விடமாட்டார்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அமைச்சரவை பத்திரம்; கோரிக்கை விடுக்கலாம்

## தகவல் திணைக்களப் பணிப்பாளர் தெரிவிப்பு

"அமைச்சரவைப் பத்திரம் என்பது, இரகசியமான ஆவணம். அதனால் தான் நாங்கள், தகவலறியும் உரிமைச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளோம். அதன் மூலமாக, எந்தவொரு பத்திரத்துக்கும் நீங்கள் கோரிக்கை விடுக்கலாம்" என, அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளர் கலாநிதி ரங்க கலன்சூரிய தெரிவித்தார்.

அரசாங்கத்தகவல்திணைக்களத்தில், நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில், அமைச்சரவைப் பத்திரத்தை இன்னும் சமர்ப்பிக்கவில்லையே என ஊடகவியலாளர்களால் கேள்வியெழுப்பப்பட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், "அமைச்சரவைச் சந்திப்பில் எடுக்கப்பட்ட முடிவுகளை வழங்கும் பொறுப்பு மட்டும் தான் எனக்கு வழங்கப் பட்டுள்ளது.

"முதலாவது, அமைச்சரவைப் பத்திரத்தை நாங்கள் அங்கீகரிப்போம். அதன் பின்னர், அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில், முன்னைய அமைச்சரவைக் கூட்டத்தின் தொகுப்பறிக்கையை நாங்கள் ஏற்றுக் கொள்வோம். அதுவரை, எந்தவிதத் தகவலையும் நாங்கள் வழங்க முடியாது.

"பிரச்சினை என்னவென்றால், அமைச்சரவைப் பத்திரத்தை எவ்வாறு வழங்குவது என்பது தான். அமைச்சரவைப் பத்திரம் என்பது, இரகசியமான ஆவணம். அதனால் தான் நாங்கள், தகவலறியும் உரிமைச் சட்டத்தைக் கொண்டுவந்துள்ளோம். அதன் மூலமாக, எந்தவொரு பத்திரத்துக்கும் நீங்கள் கோரிக்கை விடுக்கலாம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மக்கள் நோயினால் மரணிக்க நேரிடும்

## பிரதமர் ரணில் எச்சரிக்கை

அனுமதிக்கப்பட்ட இடங்களில் குப்பை போடுவதை தடை செய்வதனால் மக்கள் நோயினால் மரணிக்க நேரிடும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில்நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நகரக் கழிவுகளை அகற்றுவதற்கு பொருத்தமான இடமில்லை. இதனால் பிரச்சினைகள் எழுந்துள்ளன. இதற்காக நிலையான ஓர் இடத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்போம்.

குறித்த பகுதிகளுக்கு பொருத்தமான இடங்களில் குப்பைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். கழிவகற்றல் மற்றும் கழிவு முகாமைத்துவத்திற்காக இயந்திர சாதனங்கள் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் கடன்மலையைப்போன்றே குப்பை மலையொன்றையும் மீதம் வைத்து சென்றுள்ளனர். ராஜபக்ஷக்களைப்போன்று பிரச்சினைக்கு பயந்து ஓடப் போவதில்லை.

நீதிமன்ற உத்தரவுகளினால் கொழும்பின் கழிவுகள் அதிகரிக்கக் கூடும். இவை அத்தியாவசிய தேவைகளாகும். இவற்றுக்கு எவ்வாறு உத்தரவு பிறப்பிப்பது?

காரணிகளை கண்டறிந்து அனைத்து தரப்பினையும் அழைத்து விளக்கம் கோரி நீதிமன்றம் உத்தரவுகளை பிறப்பிப்பது பொருத்தமாக அமையும்.


கழிவற்றல் மிகவும் முக்கியமான ஓர் பிரச்சினையாகும். கழிவுகளை அகற்றா விட்டால் மக்கள் நோயினால் மரணிக்கக் கூடும் என பிரதமர் தெரிவித்துள்ளார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1125

ரூபன்




பிரதன்



கலை




கேதீஸ்




வைஸ்ணவி




கஜானி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மெற்றோ பரப்புப் (Metro Area)

# போக்குவரத்தும் புகையிரதப் பாதை விரிவாக்கமும்



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

இலங்கை அரசாங்கத்தின் தேசிய பௌதிகத் திட்டமிடல் கொள்கை மற்றும் திட்டமிடல் அடிப்படையில் முன் மொழியப்பட்ட செயற்றிட்டங்களில் யாழ்ப்பாணக் குடாநாட்டையும் பூநகரி-பரந்தன்- முல்லைத்தீவு வீதிகளுக்கு வடக்கேயுள்ள பகுதிகளை வடக்கு மெற்றோ அபிவிருத்தி பிரதேசம் **(Metro Region)** என்றும் இன்றைய யாழ்ப்பாண மாவட்டத்தின் தீவுப்பகுதிகள் மற்றும் வடமராட்சி கிழக்கின் தெற்குப்பகுதிகள் தவிர்ந்த பரப்பையாழ்ப்பாணமெற்றோ **(Jaffna Metro Area)** அபிவிருத்தி பரப்பாக இனங்கண்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பெரும் பகுதிகள் இன்று ஒரு நகராக்கப்பட்ட பிரதேசமாகப் பார்க்கப்படுகின்றது, காணப்படுகின்றது. இதனால் இந்த மெற்றோவுக்கு ஒருங்கிணைந்த நிலப் பயன்பாடு, போக்குவரத்து கூட்டமைப்பு மற்றும் துறை சார், இடஞ்சார் அபிவிருத்தித் திட்டத் தந்திரோபாய ங்களை அடையாளம் காணவேண்டி இருக்கின்றன.


இன்று பெரு நகரப் பகுதிகளில் போக்குவரத்து கட்டமைப்பு மக்களின் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருப்பது அபிவிருத்தியை முன்னெடுக்க பெரும் தடையாக இருக்கின்றது.மேலும் பொருத்தமில்லாத பிரயாண முறைகளால்போக்குவரத்துபெரும்சிக்கலுக்குள்ளாகி இருக்கின்றது.

இன்று தனியார் வாகன உடைமை அதிகரித் ததால் பல நகரங்களின் தெருக்களில் வாகன நெரி சல் ஏற்பட்டு போக்குவரத்து பாய்ச்சல் பெரும் குழப்பத்துக்குள்ளாகி இருக்கின்றது. தொழிலுக்குச் செல்வோர், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் போக்குவரத்துப் பிரச்சினையால் பெரும் கஷ்டத் துக்குள்ளாகிறார்கள். போக்குவரத்து இலகுவாகவும் நெகிழ்ச்சியாக கிடைக்கக்கூடியதாகவும் தாங்கக்கூடிய கட்டணமாகவும் பயணம் வசதியானதாகவும் ரம்மியமானதாகவும் இருக்க வேண்டுமென்று மக்கள் விரும்புவர்.

நகரப் போக்குவரத்து பல சிக்கல் தன்மைகளைக்கொண்டவையாகும். காலையில் நகர் நோக்கிய பயணத்தில் அதிக மக்களும் மாலையில் நகரில் இருந்து வெளிநோக்கிய பயணத்தில் அதிக மக்களும் காணப்படுவர்.

உலகளாவிய நிலையில் தனியார் வாகன உரிமை அதிகரித்துக் கொண்டு இருக்கின்றது. யாழ்ப்பாண மெற்றோ பரப்பிலும் கடந்த சில ஆண்டுகளாக தனியார் வாகன உடைமையும் பாவனையும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. வாகன எண்ணிக்கையும் பயணிகள் எண் ணிக்கையும்அதிகரித்து கொண்டிருக்கின்றபொழுது தனியார் வாகனங்களும் பேருந்துகளும் மக்களுக்கு சிறந்த போக்குவரத்துச் சேவைகளைக் கொடுக்க முடியாதுள்ளன.

தெருக்களை அகலிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் பெருமளவு நிதி தேவைப்படுகின்றது. மேலும் புதிய தெருக்கள் மற்றும் இருக்கும் தெருக்களை அகலிப்பதற்கு பெருமளவு நிலமும் தேவைப்படுகின்றது. ஒரு பக்கம் நிலப்பற்றாக் குறையும் மறுபக்கத்தில் நட்டஈடு உட்பட செலவு உயர்வாக இருப்பதால் தெருக் கட்டமைப்பு மேம்பாடு இலகுவாக மேற் கொள்ள முடியாதிருக்கின்றது.




மேலும் தெருக்கள் அமைக்க நிலங் களை எடுக்கும் போது சமூகப் பிரச்சினைகஉருவாகின்றன. இதனால் தெருக் கட்டமைப்பு வழியாக மக்களுக்கு சிறந்த போக்குவரத்தை கொடுக்க முடியாதுள்ளது.

உலகில் பல பெரிய, நடுத்தர நகரங்களில் உள்ளகப் போக்குவரத்திலும் நகரங்களுக்கு இடையிலான போக்குவரத்திலும் **(Inter City)** புகையிரதப் போக்குவரத்து முக்கியத்துவம் பெற்றிருப்பதைக் காணலாம்.

உலகின் பெரிய நகர்களில் மெற்றோ ரயில் **(Metro- Rail way)** கட்டமைப்புக்களே கூடுதலாகக் காணப்படுகின்றன. இந்தக் கட்டமைப்பில் ஓடு பாதைகள் தரையிலும் தரைக் கீழாகவும் உயர்த்தப்பட்ட பாதையாகவும் இருப்பதைக் காண முடியும். மெற்றோ ரயில் சேவை மூலம் மிகப்பெரும் எண்ணிக்கையான பயணிகளுக்கு இலகுவானதும் துரிதமானதும் போக்குவரத்து வசதியைக் கொடுக்க முடியும்.

யாழ்ப்பாண மெற்றோ பரப்பு இன்று 600,000 இற்கு மேற்பட்ட மக்களைக் கொண்டுள்ளது. இந் நகர் பிரதேசம் 2030 இல் 1000000 மக்களைக் கொண்டு இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மெற்றோ பரப்புக்குள் யாழ்ப்பாண மெற்றோ நகரும் சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, நெல்லியடி, சுன்னாகம், மானிப்பாய், சங்கானை, காங்கேசன்துறை,பண்டத்தரிப்புபோன்ற நகரசபை, பட்டண சபை அந்தஸ்துக்களை பெற்றிருந்த நகர்களும் கொடிகாமம், அச்சுவேலி, கைதடி, நாவற்குழி போன்ற சிறுநகர்களும் மற்றும் பெரும் எண்ணிக்கையான கிராமக் குடியிருப்புகளும் காணப்படுகின்றன.

யாழ்ப்பாண மெற்றோ பரப்பில் வாழும் மக்கள் விவசாயத்தில் ஈடுபடுவது குறைந்து கைத்தொழில், சேவைத் தொழில்களில் ஈடுபடும் போக்குகள் அதிகரித்து கொண்டு இருக்கின்றன.

மேலும் இம் மெற்றோ பரப்பில் விவசாய நிலப்பரப்பு குறிப்பாக தோட்டக் காணிகள் குடியிருப்புக்களுக்கும் விவசாய மற்ற பயன்பாடுகளுக்கு மாற்றப்பட்டுக் கொண்டு இருக்கும் போக்குகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.

மக்களின் பிரயாணத் தேவை மிகவும் துரிதமாக அதிகரித்து வருகின்றது. மக்களின் போக்குவரத்து தேவையைப் பூர்த்தி செய்ய தனியார் வாகனங்களை அதிகரிப்பது, ஏற்கனவேயுள்ள தெருக்களை அகலமாக்குவது, புதிய வீதிகளை அமைப்பது பொருத்தமற்றதாகும். ஏற்கனவே நிலப் பற்றாக்குறைவால் நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் யாழ்ப்பாண மக்களுக்கு மேலும் நெருக்கடியைக் கொடுப்பதாக அமையும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தெருக்கள் அபிவிருத்தி அதிகார சபையின் கீழும் தெருக்கள் அபிவிருத்தி திணைக்களத்தின் கீழும் A வகுப்புத் தெரு 280 கி.மீற்றரும் B வகுப்புத் தெரு 246 கி.மீற்றரும் C வகுப்பு தெரு 491 கி.மீற்றரும் D வகுப்பு தெரு 89 கி.மீற்றரும் இருக்கின்றன. மொத்தமாக 1105 கி.மீற்றர் தெரு இந்த இரண்டு நிறுவனங்களில் கீழ் இருக்கின்றன.

மேலும் உள்ளூராட்சி மன்றங்களால் பராமரிக்கப்படும் தெருக்களின் நீளம் 1559 கிலோ மீற்றராகும். இவ் எல்லா தெருக்களை அகலமாக்குவதாலேயோ அல்லது மேம்படுத்துவதாலோ யாழ்ப்பாண மெற்றோ பரப்பின் போக்குவரத்து பிரச்சினையை எதிர்காலத்தில் தீர்க்க முடியாது.

இன்று கொழும்பு, கண்டி நகரில் காணப்படும் போக்குவரத்துப் பிரச்சினைக்கு முக்கிய காரணம் புகையிரத போக்குவரத்துக்கு முக்கிய இடம் கொடுக்காமையே ஆகும்.

பேருந்துகள் மற்றும் தனியார் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்த போதும் போக்குவரத்து தேவையை பூர்த்தி செய்ய முடியாது போயிற்று.

இதனால் யாழ்ப்பாண மெற்றோ பரப்பின் போக்குவரத்து தேவையை புகையிரத சேவையை விஸ்தரிப்பதன் மூலமே தீர்வு காண முடியும்.

யாழ்ப்பாண மெற்றோ பரப்புக்கள் பொதுத்துறை புகையிரதப் பாதை ஒழுங்கிற்கேற்ப கைத்தொழில் மையங்களையும் சேவை நிலையங்களையும் விருத்தி செய்ய முடியும்.

ஆகவே துறைசார், இடம் சார் முயற்சிகளை ஒருங்கிணைத்து நகராகும் பகுதிகளை விருத்தி செய்ய முடியும். இதன் மூலம் அபிவிருத்தியில் பின்தங்கிய விவசாயத்திற்கு சாதகமற்ற பகுதிகளுக்கு புதிய தொழில் முயற்சிகளை எடுத்துச் செல்வதுடன் குடாநாட்டின் செம்மண் விவசாய நிலத்தை பாதுகாக்கலாம். மேலும் புகையிரதப் பாதை விரிவாக்கம் சூழலை பாதிக்காத முறையில் மேற்கொள்ள முடியும்.

வடபகுதி புகையிரதப் பாதை யுத்தத்தினால் தாண்டிக்குளத்திலிருந்து காங்கேசன்துறை வரை முழுமையாக அழிவுக்குட்பட்டு இருந்தது.

2009இல் யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர் புகையிரதப் பாதையை மீளவும் புனரமைக்கும் பணிகள் இந்திய அரசின் உதவியுடன் இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டு முடிவில் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையே புகையிரத சேவை மீளவும் ஆரம்பிக்கப்பட்டது.

இன்று காங்கேசன்துறைக்கும் கொழும்புக்கும் இடையே புகையிரத சேவைகள் இடம் பெறுகின்றன.

யாழ்ப்பாண மெற்றோ பரப்பில் போக்குவரத்தை மேம்படுத்த தற்போதுள்ள புகையிரதபாதையுடன் புதிய பாதைகள் அமைத்து ஒரு சுற்று வட்டப்பாதையாக (Circle Line) மாற்ற வேண்டும்.

இதற்கு கொடிகாமத்தில் இருந்து பருத்தித்துறைக்கும் ஒரு பாதையும் காங்கேசன் துறையில் இருந்து பருத்தித் துறைக்கு இன்னொரு பாதையும் அமைக்கப்படின் யாழ்ப்பாண மெற்றோ பரப்புக்கு நல்ல மெற்றோ ரயில் சேவைகள் கிடைக்கும்.

இப் பாதை அமைப்பின் பின்பு இப்பாதையை கருத்திற் கொண்டு அபிவிருத்தி திறமுறையை குறிப்பாக இடஞ்சார் அபிவிருத்தி திறமுறையொன்றைப் பின்பற்றலாம்.

கொடிகாமம், பருத்தித் துறை புகையிரதப்பாதை வரணி, தாவளை-ஐயத் தாலை வழியாக சென்று துன்னாலை ஊடாக புலோலியை அடைய வேண்டும். இப்பாதையின் தூரம் அண்ணளவாக 16 கி.மீற்றராகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாநாயக்க தேரர்கள் தமது முடிவை உடன் மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்து

**(கொழும்பு)**

**நாட்டுக்குப் புதிய அரசியலமைப்புத் தேவையில்லை என்று மகாநாயக்க தேரர்கள் கூறுவது நாட்டில் நல்லிணக்கம் தேவையில்லை என்று சொல்வதற்குச் சமமானது. மகாநாயக்க தேரர்கள் தமது முடிவை உடனடியாக மீள் பரிசீலனை செய்ய வேண்டும் . இதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேண்டுகோளாக இருக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

புதிய அரசியலமைப்புத் தேவையில்லை என்று மகாநாயக்க தேரர்கள் கண்டியில் ஒன்றுகூடி முடிவெடுத்துள்ளனர். இதனை அரசிடம் நேரில் தெரியப்படுத்தப் போவதாகவும் கூறியிருந்தனர். இது தொடர்பில் சுமந்திரன் மேலும் தெரிவித்ததாவது.

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான முயற்சி இப்போது ஆரம்பிக்கப்படவில்லை. ஒன்றரை வருடங்களுக்கு முன்னரே அது ஆரம்பிக்கப்பட்டது. நாட்டிலுள்ள அனைவருக்கும் இது தெரியும்.

இவ்வாறான நிலையில், மகாநாயக்க தேரர்கள் திடீரென புதிய அரசியலமைப்புக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

அவர்கள் தங்களுடைய எதிர்ப்பு நிலைப்பாட்டை கண்டியில் ஒன்றுகூடி எடுத்துள்ளனர். இவர்கள் ஏன் திடீரென்று இவ்வாறு செயற்படுகின்றார்கள் என்ற கேள்வி எழுகின்றது. புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழி நடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை, சிலநாட்களில் இறுதி செய்யப்படக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் புதிய அரசியலமைப்புத் தேவையில்லை என்று மகாநாயக்கதேரர்கள் கூறுவது நாட்டில் நல்லிணக்கம் தேவையில்லை என்று கூறு வதற்கு ஒப்பானது.

எனவே, மகாநாயக்க தேரர்கள் தங்களது நிலைப்பாடுகளை மீள்பரிசீலனை செய்ய வேண்டும். இதுஎமது வேண்டுகோளாகவும் இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உமாஓயா விவகாரம்; தீர்க்கமான தீர்மானத்தில் ஜனாதிபதி, பிரதமர்

நாட்டில் தற்போது உக்கிரமெடுத்து வரும் உமா ஓயா வேலைத்திட்டம் தொடர்பில், தீர்க்கமானதொரு தீர்மானத்தை எடுப்பது தொடர்பில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்பிரகாரம், குறித்த வேலைத்திட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் கண்டறிவதற்காக, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை நியமிக்க, அவ்விருவரும் தீர்மானித்துள்ளனர்.

உமாஓயா வேலைத்திட்டம் காரணமாகச் சேதமடைந்த பிரதேசங்களின் சமூக, சுற்றாடல் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டவில்லையாயின், எதிர்வரும் நாட்களில், அது தொடர்பான கடுமையான தீர்மானமொன்று எடுக்கப்படும் என, குறித்த உமாஓயா வேலைத்திட்டத்துக்கு எதிரான அமைப்பு அறிவித்துள்ளது.

இந்நிலையில், குறித்த வேலைத்திட்டம் தொடர்பில் கண்டறிவதற்காக, கடந்த சில தினங்களுக்கு முன்னர், அமைச்சரவைத் துணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

அக்குழுவினர், மேற்படி வேலைத்திட்டத்தைப் பார்வையிடுவதற்காக, அப்பிரதேசத்துக்குச் சென்றிருந்தபோது, பொதுமக்களால் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்கக் கோவை விரைவில் வெளியீடு

## சபாநாயகர் கரு ஜயசூரிய நம்பிக்கை



நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்கக் கோவை விரைவில் தயாரிக்கப்படவுள்ளதாக சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

சர்வமதத் தலைவர்களுடன் நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளும் இதற்கு ஆதரவு அளித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இந்த ஒழுக்க கோவையை விரைவில் வெளியிடக்கூடியதாக இருக்கும் என்றும் சபாநாயகர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (இ-7)

# உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முயற்சி


## அமைச்சர் கயந்த தகவல்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்க எதிர்பார்த்துள்ள அதேவேளை, 25 சதவீதம் பெண் உறுப்பினர்களை உள்வாங்குவது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக, அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தகவல்திணைக்களத்தில், நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து வினவப்பட்டபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து அமைச்சரவை இணைப்பேச்சாளர்களில் ஒருவரும் அமைச்சருமான கயந்த கருணாதிலக கருத்துத் தெரிவிக்கையில்,



"உள்ளூராட்சி மன்றம் தொடர்பான திருத்தச் சட்டமூலம், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதேபோல், அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான புதிய எல்லை முறைமை, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளது என்ற அடிப்படையிலேயே திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

கட்சி உறுப்பினர்களுடனான அடுத்த கூட்டத்தின் போதே இத்திருத்தத்தை எப்போது முன்வைக்க வேண்டும் என தீர்மானிக்கப்படும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மரண அறிவித்தல்

## லோகேஸ்வரன் தயாவதி (மாலா)



கந்தரோடையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட லோகேஸ்வரன் தயாவதி (மாலா) நேற்று 06.07.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் செல்லத்துரை லோகேஸ்வரனின் (சந்திரன் - முகாமையாளர், சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை சிவநாயகம் தம்பதிகளின் அன்பு மருமகளும் ருஷானந், ருஷிபா ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவானந்தராஜா (கனடா), காலஞ்சென்றவர்களான ஜெயராசா, கலாவதி மற்றும் புவனேந்திரராசா (சுவிஸ்), கணேஷராஜா(ஜேர்மன்), ரேணுகா(சுவிஸ்), மாலினி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும் மகேஸ்வரி, பவளராணி (UK), மகாதேவன், காலஞ்சென்றவர்களான விக்னராஜா, சிவன்செயல் மற்றும் லோகேஸ்வரி, தவமலர், வைத்தீஸ்வரன், மகேந்திரராஜா (UK) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 07.07.2017 இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கந்தரோடை,
சுன்னாகம்.

(9708)

தகவல்,
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டங்களை நிறைவேற்றுவது கட்சித் தலைவர்களின் பொறுப்பு

## அமைச்சர் பைஸர் நழுவல்




உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவது சம்பந்தமான சட்டங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொறுப்பு கட்சித் தலைவர்களுக்கு காணப்படுவதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

அது தொடர்பான முன்வரைவு தற்போது பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

சபைத் தலைவரினால் கட்சித் தலைவர்களின் உடன்பாட்டுடன் அந்த சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

குறித்த சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற் றப்பட்டதன் பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதியை அறிவிக்க முடியும் என்று அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார். (இ-7)




# அ'புர சிறையில் கைதி மீது தாக்கியதன் பின்னணியில் அரசியல் காரணங்கள் உண்டா?

## டக்ளஸ் எம்.பி.கேள்வி



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரொருவருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுத்ததாகக் கூறப்பட்டு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர் தாக்கப்பட்டமையின் பின்னணியில் அரசியல் காரணங்கள் உண்டா?" என, ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில்நேற்று முன்தினம் இடம்பெற்ற தேருநர்களைப் பதிவு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்ட மூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், " தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைக் கொலை செய்ய முயன்றதாகத் தெரிவிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களில் ஐந்தாவது சந்தேகநபர், அநுராதபுரம் சிறைச்சாலையில் வைத்து சிறைச்சாலை காவலர்களால் அண்மையில் தாக்கப்பட்டுள்ளார் எனத் தெரிய வருகிறது.

இச்சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் கடந்த 29ஆம் திகதி நீதிமன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்திருந்ததுடன், நீதி அமைச்சருக்கும் மகஜர் ஒன்றினையும் அனுப்பியுள்ளனர்.

இத்தகைய சம்பவங்கள் வவுனியா சிறைச்சாலையிலும் தொடர்கிறது. மேலும், அநுராதபுரம் சிறைச் சாலையில் சந்தேகநபர் தாக்குதலுக்கு உள்ளான சம்பவம் சில சந்தேகங்களை ஏற்படுத்துகிறது. குறிப்பாக மேற்படி தாக்குதல் செயற்பாடுகள் தொடர்ந்து மேற் கொள்ளப்பட்டு வருவதாக தெரிய வருகின்ற நிலையில், இதன் பின்னணியில் ஏதேனும் அரசியல்காரணங்கள்உண்டா?" என்றும் வினவினார்.

"குறித்த நாடாளுமன்ற உறுப்பினரைக் கொலை செய்வதற்கு முயன்றனர் என்று கூறப்பட்டு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் மீதான கொலை முயற்சி என்ற கதையில் எவ்வித மான உண்மைகளுமில்லை என, அதே நாடாளுமன்ற உறுப்பினர் பிரதி நிதித்துவப்படுத்துகின்ற கட்சியின் இன்னுமொரு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இந்தச் சபையில் பகிரங்கமாகவே தெரிவித்திருந்தார்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டதோடு வேறு எவ்விதமான வாழ்வாதார உதவிகளும் இன்றிய நிலையில் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் பலரும் மிகவும் பாதிக்கப்பட்டதொரு நிலையிலேயே இன்னமும் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், அவர்கள் மீதான பல்வேறு அதிகாரத் தரப்பினரது கெடுபிடிகள் மற்றும் அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளதையும் காணக் கூடியதாகவுள்ளது. எனவே, மேற்படி சம்பவத்தின் பின்னணியில் உள்ள உண்மைகள் கண்டறியப்பட்டு, வெளிப்படுத்தப்பட வேண்டும்.

ஏனைய துறைகளிலிருந்து எமது நீதித்துறை விடுபட்டிருக்கின்றதா என்ற கேள்விக்கு இடமிருக்கக்கூடாது. விடுபட்டிருக்க வேண்டும். ஏனைய துறைகளிலிருந்து நீதித்துறை விடுபட்டிருந்தால் மாத்திரம் அதுவே நீதித் துறைச் சுதந்திரத்திற்கான உரிய, பூரண வழிமுறை எனக் கூறிவிட முடியாது. நீதித்துறையைச் சார்ந்தோரும் சட்டத்தின் முன்னிலையில் சமமானவர்கள் என்ற நிலைப்பாடு நிலை நிறுத்தப்பட வேண்டும் என்றும் டக்ளஸ் எம்.பி கோரிக்கை விடுத்தார். (இ-7)

# அமெ.தூதரகம்; ஐ.எஸ்.தாக்குதல் குறித்து

# விசேட தகவலைப் பெற்று நடவடிக்கை எடுக்கப் பணிப்பு

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு-03, கொள்ளுப்பிட்டியில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் மீது தாக்குதல்நடத்துவதற்கு ஐ.எஸ் ஐ.எஸ் அமைப்பு திட்டமிட்டுள்ளதா? என்பது தொடர்பில் எங்களுக்குத் தெரியாது. எனினும், இந்தச் செய்தி தொடர்பில், சம்பந்தப்பட்ட ஊடகத்திடம் விசேட தகவல் இருந்தால், அதனைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு பணிக்கப்பட்டுள்ளது" என்று, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில்நேற்று முன் தினம் இடம்பெற்ற, பிரதமரிடம் கேளுங்கள் நேரத்தின் போது, ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட எம்.பி.யான முஜிபுர் ரஹ்மான் இடையீட்டுக்கேள்வியொன்றை எழுப்பினார்.

அக்கேள்விக்குப் பதிலளிக்கும் போதே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மேற்கண்டவாறு பதிலளித்தார். இடையீட்டு கேள்வியை எழுப்பிய அவர், "கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மீது தாக்குதல் நடத்த ஐ.எஸ். ஐ.எஸ். ஆயுதக்குழு திட்டமிட்டுள்ளது என்று தகவல் வெளியாகியிருந்த நிலையில், அந்தத் தகவலை அமெரிக்கத் தூதரகம் நிராகரித்துள்ளது. இது புனையப்பட்ட செய் தியா? இது தொடர்பில் விசாரணை நடத்தப்படுமா?" என்று கேள்வி எழுப்பினார்.

அக்கேள்விக்கு பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, "உண்மையில் இந்த விவகாரம் தொடர்பில் செய்தி வெளியாகியிருந்தது, அமெரிக்கத் தூதரகமும் அதை நிராகரித்திருந்தது. எனினும், அவர்களிடம் (சம்பந்தப்பட்ட ஊடகத்திடம்) விசேட தகவல் இருக்கிறதா என்று எமக்குத் தெரியாது. ஆகவே, அவர்களிடம் விசேட தகவல் இருந்தால் அதை பெற்று உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்குப் பணித்துள்ளேன்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 100 | 160 | 160 | 140 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 250 | 230 | 250 | 300 | 300 | 250 |
| தக்காளி | 160 | 110 | 200 | 160 | 100 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 80 | 80 | 80 | 80 |
| கோவா | 150 | 100 | 160 | 120 | 120 | 180 |
| கரட் | 200 | 300 | 300 | 200 | 300 | 300 |
| பூசணி | 100 | 100 | 120 | 100 | 80 | 100 |
| புடோல் | 100 | 50 | 100 | 120 | 100 | 100 |
| வாழைக்காய் | 80 | 60 | 80 | 80 | 60 | 80 |
| சின்னவெங்காயம் | 350 | 300 | 300 | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 180 | 140 | 180 | 160 | 120 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 100 | 120 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 140 | 50 | 160 | 160 | 120 | 120 |
| பயற்றங்காய் | 120 | 80 | 90 | 120 | 100 | 120 |
| லீக்ஸ் | 100 | 80 | 120 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 80 | 120 | 120 | 120 | 80 |
| கறிமிளகாய் | 250 | 150 | 280 | 240 | 200 | 150 |
| முருங்கைக்காய் | 250 | 150 | 240 | 200 | 200 | 180 |
| போஞ்சி | 180 | 120 | 200 | 200 | 160 | 180 |
| கத்தரிதம்புள்ள | 140 | 100 | 160 | 140 | 100 | 120 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 30 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 50 | 70 | 80 | 120 | 60 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 65 | 40-60 | 70 | 60 |
| இராசவள்ளி | 250 | -- | -- | -- | 200 | 150 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 250 | 280 | 200 | 200 |
| முள்ளங்கி | 60 | 30 | 80 | 120 | 70 | 60 |
| [illegible] | 40 | 10 | 40 | 40 | 25 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 20 | 10 |
| ஈரப்பலா | 10 | -- | -- | -- | 100 | 100 |

# உழைக்கும் மக்கள் கரங்கள் ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம் இலக்கிய இணைக்குழுவின் ஏற்பாட்டில் உழைக்கும் மக்கள் கலைவிழா 2017 ஆம் ஆண்டிற்கான சிறுகதை, பாடல் இயற்றல், கவிதை இயற்றல், குழு நாடகம், ஓவியத்தில் அறிவிப்பு ஓவியம், கேலிச் சித்திரம், சுவரொட்டி, புகைப் படம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

சுயமாக தயாரிக்கப்பட்ட ஆக்கங்களை விண்ணப்பப் படிவத்தோடு எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு தலைவர், இலக்கிய இணைக்குழு, தேசிய தொழிற் சங்க மத்திய நிலையம், செத்ஸ்ரீ மாவத்தை, [illegible] வைக்க முடியும். (இ-5-10-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பொருளும் காட்டாது இருள் உருவம் காட்டும்.
எது பொருளும் காட்டாது இது.
- திருவருட்பயன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கு மாகாண சபையில் இனிமேல் ஊழிக்கால அதர்மங்களே நடக்கும்!

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து மூக்குடைபட்டு போனவர்கள் வடக்கு மாகாண சபையை இயங்கவிடாமல் செய்வதில் மிகத் தீவிரமாக உள்ளனர்.

இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் நம்பிக்கையோடு வாக்களித்து வடக்கு மாகாண அரசை அமைத்துவிட,

மக்களின் நம்பிக்கைகளை வேரறுக்கும் வகையில் உறுப்பினர்கள் சிலர் மிக மோசமாக நடந்து கொள்கின்றனர்.

இத்தகையவர்களால் தமிழ் மக்களுக்கு எதுவும் ஆகப் போவதில்லை என்பதும் உறுதியாயிற்று.

வடக்கு மாகாண சபையில் முதலமைச்சர் எதைச் சொன்னாலும் அதனை அவைத் தலைவர் செவிமடுக்க மாட்டார் என்பது தெள்ளத்தெளிவு.

நான் சொல்வதுதான் சட்டம் என்றால், முதலமைச்சர் என்ன செய்வது என்ற கேள்வி எழும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அவர்களால் தனது கட்சி உறுப்பினர்களை கட்டுப்படுத்த முடியவில்லை.

இதேவேளை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரும் இப்போது திருதராட்டிரனின் நிலையில்தான் இருக்கிறார்.

ஆக, இலங்கைத் தமிழரசுக் கட்சி என்பது மூன்றாவது தரப்பின் அதிகாரத்துக்குள் அகப்பட்டுள்ளது என்பது புரிதலுக்குரியது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா சொல்வதைக் கூட கட்சியின் உறுப்பினர்கள் சிலர் ஏற்பதில்லை - மதிப்பதில்லை எனும்போது,

வடக்கு மாகாண சபையைக் குழப்பி முதலமைச்சரின் பெறுமதியைக் குறைக்க நினைத்த உறுப்பினர்களைக் கட்டுப்படுத்துவதென்பது மாவை சேனாதிராசாவாலோ அல்லது இரா. சம்பந்தராலோ முடியாத காரியம் என்பது நிறுதிட்டமான உண்மை.

ஆக, எதிர்வரும் காலங்கள் மாவை சேனாதிராசாவையும் இரா.சம்பந்தரையும் ஓரங்கட்டுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு என்று கூறுவதற்கு ஏகப்பட்ட ஆதாரங்கள் உள்ளன.

இது ஒருபுறமிருக்க, மாவை சேனாதிராசாவும் இரா.சம்பந்தரும் தமக்கு ஏற்படும் நெருக்கடிகளைச் சமாளிக்க முதலமைச்சரை விட்டுக்கொடுக்குமாறு கேட்பதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாதவர்களாக இருப்பர்.

இவற்றின் அடிப்படையில் வடக்கு மாகாண சபையின் எதிர்கால நடவடிக்கைகள் சுமுகமாக இருக்கப் போவதில்லை.

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை உளநிலையில் தாக்குவதை மையமாகக் கொண்டு உறுப்பினர்கள் சிலர் செயற்படுவர்.

வடக்கு மாகாண சபையின் இறுதிக் காலம் வரையான செயற்பாடுகள் ஊழிக்கால அதர்மங்கள் போல நடந்தாகும்.

இவற்றை நீதிமான்களாக தமிழ் மக்கள் பார்த்திருப்பர். அடுத்த தேர்தலில் சிலருக்கு பலத்த அடி போட்டு அவர்களை வெளியில் அனுப்பி வைப்பர். இதுதான் இனி நடக்கப் போகும் நிகழ்வாகும்.

# மாணவனை வீட்டுக்குத் தேடிச்சென்று ஆசிரியர் தாக்கியதாக பொலிஸில் புகார்

12 வயதுச் சிறுவன் ஒருவனை ஆசிரியர் ஒருவர் அவனது வீட்டுக்குத் தேடிச் சென்று தாக்கியதாக காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் பெற்றோர் முறையிட்டுள்ளனர்.

காத்தான்குடி அல்ஹிறா வித்தியாலயத்தில் 7ஆம் தரத்தில் கற்கும் அப்துல் சித்தீக் முஹம்மத் சஜித் (வயது-12) எனும் மாணவனே ஆசிரியரினால் தாக்கப்பட்டுள்ளதாக தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ள இச்சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது, அல்ஹிறா வித்தியாலயத்தில் கற்கும் மேற்படி மாணவனும் அதேபாடசாலையில் ஒரேவகுப்பில் கற்கும் மற்றொரு மாணவனுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

எனினும், இந்தச் சம்பவம் அந்த வகுப்பாசிரியரினால் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்ட பின்னர் பாடசாலை முடிந்து மாணவர்கள் தத்தமது வீடு சென்றுள்ளனர்.

குறித்த முஹம்மத் சஜித் எனும் சிறுவன் வீட்டுக்கு வந்து உணவருந்திக் கொண்டிருக்கும்போது தன்னுடன் கைகலப்பில் ஈடுபட்ட சக வகுப்பு மாணவன் வீட்டுக் கதவைத் தட்டி பெயர் கூறி இந்த மாணவனை அழைத்துள்ளான்.

அவ்வேளையில், முஹம்மத் சஜித் கதவைத் திறந்த போது சக மாணவனின் தந்தையான காங்கேயனோடை வித்தியாலயமொன்றில் கற்பிக்கும் ஆசிரியர் முஹம்மத் சஜித் என்ற குறித்த மாணவனை சரமாரியாகத் தாக்கியுள்ளார்.

இதன்போது மாணவன் வலியில் கத்தியுள்ளான். வீட்டிலிருந்த மாணவனின் தாயும் சகோதரியும் அயலவர்களும் ஓடிச் சென்று பார்த்தபோது மேற்படி சக மாணவனின் ஆசிரியர் தகாத வார்த்தைகளைக் கூறி மாணவனைத் தாக்கிய வண்ணமே இருந்துள்ளார்.

ஆசிரியரிடமிருந்து தாக்கப்பட்ட மாணவனை விடுவித்து காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பித்ததாக மாணவனின்தந்தை தெரிவித்தார்.

அத்துடன் உடனடியாக பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ததாகவும் தெரிவித்தார்.

குறித்த ஆசிரியர் தலைமறைவாகியிருப்பதாகவும் இச்சம்பவம் குறித்து பொலிஸார விரிவான விசாரணைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (இ-7)

# கல்விக் கண்காட்சியும் சரஸ்வதி சிலை திறப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மல்லாகம் மகா வித்தியாலய கல்விக் கண்காட்சியும் சரஸ்வதி சிலை திறப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம் பெறும்.

பாடசாலை அதிபர்திருமதி. யோ. தில்லைநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ( கல்வி அபிவிருத்தி) ந. காண்டீபன், சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கியின் ஓய்வு நிலை பிராந்திய வங்கி முகாமையாளர் சி. விக்னராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## மது பற்றிய உண்மைகள்

மது அருந்துபவர்களின் விகாரமான முகத்தைக் கொண்டே அவர்களை அடையாளம் காண முடியும்.

மதுவை விளம்பரப்படுத்தும் நடிகர்கள் எவரும் தம் சொந்த வாழ்வில் மது அருந்துவதில்லை.

மது அருந்திய சில கணங்களிலேயே அவர்கள் அசிங்கப்படுவதை நிஜத்தில் காணலாம்.

அருந்திய பின் சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவதையும் தெளிந்த பின் வருந்துவதையும் காணமுடியும்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகர சபை

## சாஸ்திரங்கள்

✦ விரதங்கள் அனுஷ்டிப்போர் அன்றைய தினம் குளிர்ந்த நீரில் தான் குளித்தல் வேண்டும். வெந்நீரில் குளித்தல் கூடாது. மாதப்பிறப்பு தினம், நீத்தார் கடன் செய்யும் தினங்கள் மற்றும் முக்கிய பண்டிகை நாட்களிலும் குளிர்ந்த நீரில்தான் குளித்தல் வேண்டும். நீரைக்கொதிக்க வைப்பதால் அதில் உள்ள புண்ணிய தேவதைகள் பறந்தோடிச் சென்று விடுகின்றனர்.

-விஷ்ணு புராணம்.



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### எளிமையா அல்லது சிக்கலா?

வாழ்க்கை முழுமையாக எளிமையானது என்றாலும் மிக மிகச் சிக்கலானது. வாழ்க்கையின் இரு முகங்களையும் ஒரே நேரத்தில் நீ கவனிக்க வேண்டும். வாழ்க்கை மிகவும் குழப்பமாக் காணப்படும்போது எளிமையாக்கிக் கொள். எளிமை அமைதியைக் கொடுக்கும். அமைதியாக இருக்கும்போது எது சிக்கலோ, அதைக் கவனி. அது உன்னைத் திறமையுள்ளவனாக்கும்.

நீ எளிமையுடன் மட்டும் இருந்தால் அது உன்னைச் சோம்பேறி மற்றும் மந்தபுத்தியுள்ளவனாக்கும். அங்கு வளர்ச்சி இருக்காது. சிக்கலுடன் மாத்திரமே இருப்பது உன்னைக் கோபமடைய, ஏமாற்றமடையச் செய்கிறது. அப்போது சுவையே இல்லை. அறிவுடையவர்கள் இவை இரண்டையும் திறமையாகச் சரிகட்டி இரண்டிலும் மகிழ்கிறார்கள்.

வாழ்க்கையின் எளிமை, சிக்கல் இரண்டையும் நீ ஒப்புக்கொள்ளும்போது நீ திறமையுடன் அமைதியாக இருப்பாய்!

வெண்மையென்பது சுத்தமான எளிமை. வண்ணங்கள் வாழ்க்கையில் குழப்பம். உன் மனம் சுத்தமாக இருந்தால் உன் வாழ்க்கை அவ்வளவும் சுவையாக இருக்கும்.

விக்ரம்: குருஜீ நீங்கள் எல்லாவற்றிலும் வெண்மை, அனாலும் வண்ணக்கோவை.

பிரமீளா: ஆழமான, ஆனால் அவ்வளவு எளிமையான நீ அறிவைப்போல



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

# அதிர்ஷ்டம் உண்டாக தீமைகள் விலக

இம்மரம் வரண்ட மணற் பாங்கான கடற்கரையோரங்களில் வளரக்கூடியது. தமிழ்நாட்டிலும் கடற்கரையோரப் பகுதிகளில் காணலாம். இதன் தோற்றம் காரணமாக, நகரப் பகுதிகளில் அழகுக்காக வீதியோரங்களில் நட்டு வளர்க்கப்படுகின்றது.

### கடம்ப மரம்- தீமைகள் விலகும்

கடம்ப மரம் முருகனுக்கும், திருமாலுக்கும் உரியது என சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றது. கொத்தாக உருண்டு பூக்கும் இதன் மலரின் நிறம் வெள்ளை.

நன்னன் எனும் அரசனின் காவல்மரம் கடம்பு மரமாகும். நீரோட்டமுள்ள கரைகளில் செழித்து வளரும் இதன் இலைகளை மாலையாகக் கட்டி முருகனுக்கு அணிவிப்பார்கள்.

இம்மரத்தின் இலைகளை கம்பளிப் பூச்சி, பட்டாம்பூச்சி மற்றும் வரியன் பூச்சிகளும் உணவாக உட்கொள்கின்றது. (முற்றும்)




### இறைவழியில் செலவு செய்க

❖ சேமிப்பில் நிர்ணயிக்கப்பட்ட ஒரு பகுதியை தான தர்மமாக கட்டாயம் வழங்க வேண்டும். "ஜகாத்" என்று அழைக்கப்படும் இக்கடமை தொழுகைக்கு அடுத்த கடமையாகும்.

❖ இறைவன் தனது அருளில் இருந்து தங்களுக்கு வழங்கியவற்றில் எவர்கள் கஞ்சத்தனம் புரிகின்றார்களோ அவர்கள் அதனைத் தமக்கு நல்லது என எண்ணிவிட வேண்டாம். மாறாக, அது அவர்களுக்கு மிகவும் கெட்டதாகும்.

❖ (நபியே) எவர்கள் தங்கத்தையும், வெள்ளியையும் சேகரித்து வைத்துக் கொண்டு அவற்றை இறைவழியில் செலவு செய்யாமல் இருக்கின்றார்களோ அவர்களுக்கு துன்புறுத்தும் தண்டனை இருக்கிறது எனும் "நற்செய்தி"யினை நீர் அறிவிப்பீராக!

❖ இறைவன் அவர்கள் மீது ஜகாத்தை கடமையாக்குகிறான். அது அவர்களில் வசதியுள்ளவர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்டு ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

- வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலை,திருநெல்வேலி சி.சி காலிறுதிப் போட்டிக்கு தெரிவாகியது





சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III தொடரில் B பிரிவில் யாழ். பல்கலைக்கழகம் முதலாவது அணியாகவும்(WINNERS). திருநெல்வேலி சி.சி அணி 2 ஆவது அணியாகவும் (RUNNERS) தெரிவு செய்யப்பட்டுள்ளன.( யாழ். பல்கலைக் கழக அணி, றெயின்போ அணியை 107 ஓட்டங்களால் வெற்றியும் பற்றீசியன்ஸ் அணியைஒருஓட்த்தாலும்திரு நெல்வேலி YMHA அணியை 8 இலக்குகளாலும் சிறிகாமாட்சி அணியை 7 இலக்குகளாலும் திருநெல்வேலி சி.சி அணியை 5 இலக்குகளாலும் வெற்றி பெற்று முதலாம் இடத்தை (WINNERS) பெற்றுள்ளன.

திருநெல்வேலி சி.சி அணி றெயின்போ அணியை 7 இலக்குகளாலும் சிறிகாமாட்சி அணியை 4 இலக்குகளாலும் திருநெல்வேலி YMHA அணியை214 ஓட்டங்களாலும் பற்றீசியன்ஸ் அணியை 34 ஓட்டங்களாலும்வெற்றிபெற்று யாழ். பல்கலைக்கழக அணியுடன் 5 இலக்குகளாலும் தோல்வியடைந்தன.

இந்தப் பிரிவில் முதலாவது அணியாகிய யாழ். பல்கலைக்கழக அணி கே.சி.சி அணியுடன் 2 ஆவது கால் இறுதிப்போட்டியிலும்திருநெல்வேலிசிசி அணிஓல்ட்கோல்ஸ் அணியுடன் முதலாவது கால் இறுதிப்போட்டியிலும் கலந்து கொள்வர்.

முதலாவது காலிறுதி 09.07.2017 ஞாயிற்றுக் கிழமை யாழ். மத்தியகல் லூரி மைதானத்திலும் 2 ஆவது காலிறுதி 09. 07.2017 ஞாயிற் றுக்கிழமை ஹாட்லி கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளது. (க)

# யாழ். சென்றல் வெற்றி

சிறிலெங்கா கிரிக்கெட் பிரிவு III தொடரின் 45 ஆவது போட்டியில் லிங்ஸ் அணி 42.1ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 174 ஓட்டங்களை பெற்றனர்.

ஜெரி -32, ஜெபர்ஸன் - 32, ஒநாசியஸ்-48, யூட்-10 ஓட்டங்களையும் பெற்றனர். றஜீவ்- 04, லது-02, மதூஸன் -03 இலக்குகளை கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் அணி 29.4 ஓவர்களில் 3 இலக்குகளை இழந்து 179 ஓட்டங்களை பெற்றனது. பாலேந்திரா-17, மில்லர்-25, லது-26, மதூஸன் ஆட் மிழக்காது- 69 றதீஸ் ஆட்டமிழக்காது- 33 ஓட்டங்களை பெற்றனர். வின்சன்ட், சுரேன்,மைக்கல் தலா- ஒரு இலக்கினை கைப் பற்றினார். இப் போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து 8 வருடங்களாக நடத்தி வரும் யாழ். நகரின் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு யாழ். சென்றல் அணி 8.49 புள்ளிகளையும் விவ்ஸ் அணி 2.04 புள்ளிகளை யும் பெற்றுக்கொண்டனர். (க)

# துறையூர் ஐயனார் அபார வெற்றி



உரும்பிராய்சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் கால்ப் பந்தாட்டத் தொடரில் கடந்த 2 ஆம் திகதி கீரிமலை சிவானந்தா விளையாட்டுக் கழகத்தைஎதிர்த்துவேலணைதுறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகம்4-0என்ற கோல்கணக்கில்அபாரவெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தெரிவானது. துறையூர் [illegible]னார். அணிசார்பாக செ. அகீபன் 2 கோல்களையும்சுபிதன் ஞானகரன் தலா ஒவ்வொரு கோலினையும் போட்டார். (இ)

# சென்.மைக்கல் வி.க.நடத்தும் மின்னொளியிலான உதைபந்தாட்டம் பாடும்மீன் வெற்றி



உரும்பிராய் சென். மைக்கல் வி.க.நடத்தும் அணிக்கு ஒன்பது பேர் கொண்ட உதைபந்தாட்ட தொடரின் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று மின்னொளியில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் குருநகர் பாடும்மீன் வி. கழகத்தை எதிர்த்து ஸ்ரீ அம்பாள் வி.கழகம் மோதியது. பரபரப்பான இப் போட்டியில் குருநகர் பாடும்மீன் வி.கழகம் ஸ்ரீ அம்பாள் கழகத்தை 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. (க)

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III கிறாஸ்கொப்பர்ஸ் அணி வெற்றி



சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III சுற்றுத் தொடரில் 43 ஆவது போட்டியில் கிறாஸ்கொப்பர்ஸ் அணி, ஓல்ட்கோல்ஸ் அணியை 87 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 44 ஓவர்களில் 242 ஓட்டங்களை பெற்றுள்ளது. டிலோஸன் -81, மதூஸன் - 12 , கபிலன் -63 , சரண் ராஜ்-28, சாரங்கன் -12 ஓட்டங்களைப் பெற்றனர். நிரோஸன், திலீபன் தலா ஒரு இலக்கினையும் ஜின்துஸன், சிறிகுகன் தலா 4 இலக்கினையும் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஓல்ட் கோல்ஸ் அணி 28 ஓவர்களில் 155 ஓட்டங்களை பெற்றனர். மதுஸன்-22 , நிமலேண்டிரா-17,நிரோஸன்-20, சிறிகுகன் -17, மதனரூபன் - 12 ஓட்டங்களைப் பெற்றனர். மதுஸன்-3, அஜித்-1,கப[illegible] -1 , சாருஜன் -1 , சாரங்கன் - 2, சரண் ராஜ்-1 இலக்கினைக் கைப்பற்றினர்.

இப் போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 2010 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து 8 வருடங்களாக நடத்தி வரும் யாழ். நகரின் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு (Rating) கிறாஸ்கொப்பர்ஸ் அணி 9.29 புள்ளிகளையும் ஓல்ட்கோல்ஸ் அணி 2.55 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (க)

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III ஜொலிஸ்ரார் அணி வெற்றி



சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III தொடரின் 44 ஆவது போட்டியில் ஜொலிஸ்ரார் அணி ஸ்ரான்லி அணியை 125 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 44.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 276 ஓட்டங்களை பெற்றது. மதூஸன்-35,மணி-15,சஜீந்தன்-18,பிரசன்னா-16, அருண்-83,வாமணன்-48 ஓட்டங்களை பெற்றனர்.

விதுஸன்-4,மதன்-3,சஜி-1 இலக்கினை கைப்பற்றினர்.பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 32.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 151 ஓட்டங்களை பெற்றது. கண்ணராஜ்-15, மதன்-24,சத்தியபிரசன்னா -50 ஓட்டங்களை பெற்றனர். பகீரதன்-2,பிரசன்னா-2,வாமணன்-4,மதுஸன்-1 இலக்கினை கைப்பற்றினர்.

இப் போட்டியின் மூலம் யாழ்.சென்றல்வி.க2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 8 வருடங்களாக நடத்தி வரும் யாழ்.நகரின் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு ஜொலிஸ்ரார் அணி 10.01 புள்ளிகளையும் ஸ்ரான்லி அணி 2.51 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (க)





2017 ஆம் ஆண்டிற்கான பாடசாலைகள் ரீதியிலான கராத்தே சுற்றுப் போட்டி 19, 20 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இப் போட்டியில் கைதடி நவீல்ட் (செவிப்புலன், விழிப்புலன் அற்ற மாணவர்களின்) பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் 4 தங்கம் உட்பட 8 பதக்கங்களையும் முதலாம் இடத்தினையும் வெற்றிக் கிண்ணத்தையும் [illegible] மாகாண விளையாட்டுப் பணிப்பாளர் சத்தியபாலன், பிரதம நடுவராக சென்சே M. [illegible] திருமதி மற்றும் கராத்தே ஆசிரியர் சென்சே. S.விஜயராஜையும் படங்களில் காணலாம். இம் மாணவர்கள் இவ் வருடத்திற்கான தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வட மாகாண...

இந்திய பாரதிய ஜனதா கட்சியின் தமிழ் நாட்டு மாநிலத்தலைவர் தமிழிசைக்கும் வட மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் ஒன்று வடமாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்றைய தினம் மாலை இடம்பெற்றது.

தனிப்பட்ட விஜயமாக இலங்கை வந்துள்ள இந்தியாவின் ஆளும் கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியின் மாநிலத்தலைவர் தமிழிசை சௌந்தர்ராஜன் வடபகுதிக்கு இரு நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

முதலமைச்சருடன் மரியாதையின் நிமித்தமாக இடம்பெற்ற இந்த கலந்துரையாடலின் போது பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டது

தற்போதைய அரசியல் நிலவரங்கள் மற்றும் இந்திய அரசின் உதவித்திட்டங்கள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன் எல்லை தாண்டும் இந்திய இழுவைப்படகுகள் குறித்தும் மத்திய அரசுடன் கலந்துரையாடப்பட்டதாக குறித்த சந்திப்பின் பின்னர் தமிழிசை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

அத்துடன், இந்திய பிரதமர் நரேந்திரமோடி குஜராத்தில் முதலமைச்சராக இருந்த போது அந்த மாநிலத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள் தொடர்பாக தமிழிசை சௌந்தர்ராஜனால் எழுதப்பட்ட நூல் ஒன்றினை முதலமைச்சரிடம் கையளித்திருந்ததாகவும், பிரதமர் மோடி ஏற்படுத்திய மாற்றங்கள் தனக்கும் பயனுள்ளதாக இருக்கும் என தன்னிடம் வட மாகாண முதலமைச்சர் தெரிவித்தார் என தமிழிசை கூறினார்.

இந்த சந்திப்பில் வடமாகாண பெண்கள் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (செ-9)

# ரூ.3 இலட்சம்...

ரம் என பிரதம செயலாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக வட மாகாண முதலமைச்சர் நீதியசரர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபையின் 98ஆவது அமர்வு நேற்று நடைபெற்றது. இதன்போதே முதலமைச்சர் இதனை தெரிவித்தார். வடமாகாண அமைச்சர்களின் ஊழல் குற்றச்சாட்டினை விசாரணை செய்யவதற்காக உருவாக்கப்பட்ட விசாரணைக் குழுவிற்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டனவா?' என எதிர்க்கட்சி தலைவர் சின்னத்துரை தவராசா முதலமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு முதலமைச்சர் பதிலளிக்கையில்,

விசாரணைக் குழ உறுப்பினர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. ஆனால் 3 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாய் செலவாகியுள்ளதாக பிரதம செயலாளர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து பிரதம செயலாளர் உரிய பதிலளிப்பார் என்றார்.

அதற்கிடையில் குறுக்கிட்ட மாகாண சபை உறுப்பினர் சயந்தன்,

எதிர்க்கட்சித் தலைவரின் அனுமதியுடன் நான் கேள்வி கேட்க முடியுமா? என எதிர்க்கட்சி தலைவர் தவராசாவிடம் அனுமதி பெற்று, பிரதம செயலாளர் அங்கு பதிலளிக்க முடியாது எனவும் எனவே முதலமைச்சரே பதிலளிக்க வேண்டும் என தெரிவித்தார்.

இதற்கு மீண்டும் முதலமைச்சர் பதிலளிக்கையில்,

கேள்விகள் உரிய முறையில் கேட்கப்பட வேண்டும். உரிய முறையில் கேள்விகளைக் கேட்டால் பதிலளிப்பேன், பிரதம செயலாளர் உரிய நேரத்தில் பதிலளிப்பார் என முதலமைச்சர் பதிலளித்தார். இதேவேளை நேற்றைய சபை அமர்வில் எதிர்க்கட்சியை சேர்ந்த சிலரும் ஆளுங்கட்சியை சேர்ந்த தமிழரசு கட்சியின் உறுப்பினர்களும் கூட்டு சேர்ந்து முதலமைச்சரை ஏதோ ஒரு வகையில் தாக்க வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

# வடக்கு சபை...

பெறவுள்ளது. இந்த அறிவித்தலை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வட மாகாண சபையின் 98ஆம் அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றது. இதன் போதே அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாண சபையின் மூன்றரை வருடகால செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கான ஒரு தினத்தை ஒதுக்கி தருமாறு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா ஆகியோர் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

குறித்த வேண்டுகோளுக்கு அமைவாக இந்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டு எதிர்வரும் 21ஆம் திகதி வட மாகாண சபையின் மூன்றரை வருட செயற்பாடு தொடர்பாக ஆராயலாம்.

அது ஒரு தினமாகவோ அல்லது 3 நாட்களாகவோ இருக்கும். எனவே 21ஆம் திகதி இந்த அமர்வு நடைபெறும் என அவர் தெரிவித்தார்.

எனினும் இந்த அமர்வு தேவையற்ற தொன்று. ஆகவே இதனை நிறுத்தி பயனுள்ள ஏதேனும் விடயங்களை ஆராயுமாறு எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் சபையில் கூறியிருந்தார் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (செ-4)

# தெரிவுக்குழுவை...

அமைச்சர் ஆகியோர் மீது விசாரணை குழு மூலம் விசாரணை நடத்தப்படும் என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முன்பு கூறியிருந்தார்.

இந்நிலையில் மாகாண சபை உறுப்பினர் ஆ.பரஞ்சோதி நேற்று நடைபெற்ற 98 ஆம் அமர்வில் விசாரணை குழு வேண்டாம், தெரிவுக்குழுவே அமைக்கப்பட வேண்டும் என கோரும் பிரேரணையை சபையில் சமர்ப்பிக்க இருந்தார்.

இந்த நிலையிலேயே குறித்த பிரே ரணை ஒத்திவைக்கப்படுவதாக அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவைத்தலைவர் சீ.வீ. கே.சிவஞானம் கூறுகையில்,

மேற்படி பிரேரணையில் திருத்தங்கள் செய்யப்படவுள்ள நிலையில் இந்த பிரேரணையை இன்று (நேற்று) சபையில் எடுத்துக் கொள்ள முடியாது.

ஆனால் குறித்த பிரேரணை எதிர்வரும் 27ஆம் திகதி சபைக்கு எடுக்கப்படும் என தெரிவித்தார். இதன்போது குறித்த விவாதம் தேவையற்றது. அதனை நான் இங்கு பதிவு செய்ய விரும்புகின்றேன் என முதலமைச்சர் கூறினார். அதற்கு அது உங்களுடைய நிலைப்பாடு எனினும் பிரேரணை அடுத்த அமர்வில் எடுத்துக்கொள்ளப்படும் என அவைத் தலைவர் கூறினார்.

இதேவேளை குறித்த அமைச்சர்களை விசாரிக்கவென ஏற்கெனவே முதலமைச்சரால் விசரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ-4)

# சபையில் சயந்தன்...

பாடி விட்டு போவோம் என சபையில் கூறியதை அடுத்து சபையில் சிரிப்பொலி எழும்பியிருந்தது. வடமாகாண சபையின் 98 ஆவது அமர்வு நேற்று கைதடியில் உள்ள பேரவைக் கட்டிடத்தில் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மாகாண சபை உறுப்பினரகளை உள்ளடக்கிய தெரிவுக்குழு ஒன்றினை அமைத்து மாகாண சபையின் முதலமைச்சர் உள்ளிட்ட ஐந்து அமைச்சுக்கள் தொடர்பிலும் விசாரணைகள்ள முன்னெடுக்க வேண்டும் என கோரி பிரேரணை ஒன்று முன்மொழியப்பட்டது.

எனினும், குறித்த பிரேரணையில் சில திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்து அவைத்தலைவர் சபையை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். இந்நிலையில், சபை உறுப்பினர்கள் இடையில் சலசலப்பு ஏற்பட்டது. இன்றைய (நேற்று) சபை அரை மணி நேரத்துடன் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதே என தெரிவித்து உறுப்பினர்கள் கேள்வியெழுப்பியிருந்தனர்.

இதன்போது, ஆளும் கட்சி உறுப்பினர் கேசவன் சயந்தன் வேடிக்கையான சபை இது என தெரிவித்ததுடன், வந்தனாங்க, வந்தவுடன் போகாமல், வந்ததற்கு இரண்டு பாட்டாவது பாடி விட்டு செல்வோம் என சபையில் கேலியாக தெரிவித்தார். இதற்கு சபையில் சிலர் சிரிப்பொலியும் எழுப்பியிருந்தார் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (செ-4)

# பொருத்துவீடு;...

தெரிவித்தார்.

பொருத்து வீட்டுத்திட்டம் தொடர்பில் நேற்றைய தினம் நாடாளுமன்றத்தில் கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் கூறினார். மேலும் அங்கு தொடர்ந்து அவர் தெரிவிக்கையில்,

பொருத்து வீட்டுத் திட்டங்கள் குறித்து விவாதிப்பவர்கள் சற்று சிந்தித்து விட்டு பேச வேண்டும். தெற்கிலும் வீட்டுத்திட்டங்கள் தொடர்பிலான பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவ்வாறான நிலையிலும் கூட வடக்கு கிழக்கிற்கு வீட்டுத்திட்டங்கள் எமது அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அரசின் திட்டங்களை குறை கூற வேண்டாம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கிடைக்க வேண்டியது அவசியம்.

வீடுகள் தொடர்பில் மக்கள் மூலம் எமக்கு 65 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. அதன் மூலம் மக்களுக்கு வீடுகள் அவசியம், அவர்கள் அதனை விரும்புகின்றார்கள் என்பது தெளிவாகின்றது.

தற்போது பொய்யாக பொருத்து வீடுகள் வேண்டாம் என்று கூறிக்கொண்டு இருக்கின்றீர்கள். பொருத்து வீட்டுத்திட்டம் தொடர்பில விமர்சிப்பவர்கள் மக்களுக்கு வேண்டாம் அவை அவசியம் இல்லை என்று கூறுங்கள்.

அப்படி செய்தால் 65 ஆயிரம் விண்ணப்பங்களையும் நிராகரித்து விடுகின்றோம். சுவாமிநாதனிடம் இந்த திட்டத்தை கைவிடும்படி பரிந்துரைக்கின்றோம்.

ஆரம்பத்தில் 8 இலட்சம் ஒரு வீட்டுக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டீர்கள் பின்னர், 10 லட்சமும் அதன் பின்னர் 15 இலட்சமும் கேட்கின்றீர்கள்.

இவ்வாறு கூறிக்கொண்டு வரும் உங்கள் எவருக்கும் வீடு ஒன்றை அமைப்பதற்கு எவ்வளவு செலவாகும் என்பது தெரியாது ஆனால் அது எனக்கு நன்றாக தெரியும்.

எனவே இந்தப்பிரச்சினையில் அரசியல் லாபத்தினைப் பார்க்காமல் மக்களுக்காகச் சேவையாற்ற முன்வாருங்கள் எனவும் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார். (செ-11)

# ஜனாதிபதிக்கு...

ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

ராஜகிரிய ஜயஷேகராராமயவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,

அரசியலமைப்புத் திருத்தத்தின் போது சர்வஜன வாக்கெடுப்புக்கு வழிவகுக்கும் திருத்தங்களை செய்யப் போவதில்லை என கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன மக்களுக்கு உறுதிமொழியை வழங்கியிருந்தார்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் தேவைக்கு அமைய அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்தை மேற்கொள்ள இடமளிக்க போவதில்லை.

அரசியலமைப்புத் திருத்தங்கள் மேற்கொள்ளும் போது அது அனர்த்தங்களில் முடிவடைந்த பல நாடுகள் இருக்கின்றன. ஆகவே ஜனாதிபதி, இதனை கருத்திலெடுத்து இலங்கையில் அவ்வாறான நிலைமை ஏற்படுவதை தடுக்க வேண்டும் எனவும் அத்துரலியே ரத்ன தேரர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# ஐ.நா அதிகாரி...

ர்சன் எதிர்வரும் 10ஆம் திகதி கொழும்பு வரவுள்ளார். இவர் 14ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருந்து சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளார்.

மனித உரிமை பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு குறித்த இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பற்றி நேரில் கண்டறிந்து கொள்ளும் நோக்கில் அவர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக, ஐக்கிய நாடுகள் அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், இக் காலப் பகுதியில் எமர்சன், வெளிவிவகார, சட்டம் ஒழுங்கு, தெற்கு அபிவிருத்தி, நீதி, பாதுகாப்பு, நிதி, ஊடகத்துறை, சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு உள்ளிட்ட அமைச்சர்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். (செ-11)

# ஹயஸ் மோதி...

ள்ளார்.

குறிசுட்டகுளம் - கனகராஜன் குளத்தைச் சேர்ந்த இவர் சந்தைக்கு மரக்கறிகளை சைக்கிளில் கொண்டு சென்ற போதே விபத்து இடம்பெற்றுள்ளது.

சடலம் புளியங்குளம் தள வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின் மரண விசாரணை அறிக்கைக்காக வவுனியா பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகள் புளியங்குளம் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (செ-250)

# மகா நாயக்கர்...

மகாநாயக்கர்கள் மட்டுமன்றி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் காணாமலாக்கப்படுவதில் இருந்து ஆட்களை பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாய சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்ததாகவும், அதனாலேயே குறித்த சட்டமூலம் பிற்போடப்பட்டது என்றும் தெரிவித்துள்ளது.

காணாமலாக்கப்படுவதில் இருந்து ஆட்களை பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாய சட்டமூலம் இலங்கை நாடாளுமன்றத்தில் நேற்றைய தினம் சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த சட்டமூலம் சமர்பிக்கப்படுவதிலிருந்து பிற்போடப்படுவதாக நேற்று சபையில் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்றைய தினம் கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும், துறைமுக அபிவிருத்தி அமைச்சருமான மகிந்த சமரசிங்க இது தொடர்பாக விளக்கமளித்தார்.

அவர் தனது உரையில் தெரிவிக்கையில்,

அரசாங்கமாக அனைவரும் பொறுப்புக் கூற வேண்டும். மேலும் காணாமலாக்கப் படுவதில் இருந்து ஆட்களை பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாயத்தில் 93 நாடுகள் கைச்சாத்திட்டுள்ளன.

காணாமலாக்கப்படுவதில் இருந்து ஆட்களை பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாயத்தில் இலங்கை கடந்த 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆம் திகதி கைச்சாத்திட்டது. மீண்டும் 2016ஆம் ஆண்டு மே 25ஆம் திகதி மீள் உறுதியும் செய்துள்ளது.

அதன் பிரகாரமே காணாமலாக்கப்படுவதில் இருந்து ஆட்களை பாதுகாப்பதற்கான சர்வதேச சமவாய சட்டமூலம் நாடாளுமன்றத்தில் கொண்டுவர கடமைப்பட்டுள்ளோம். எனினும் இப்போது இது காலவரையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஆரம்பத்தில் இருந்தே இதனை கொண்டுவர வேண்டாம் என்ற நிலைப்பாட்டில் தான் எம்மிடம் கலந்துரையாடினார். அதன் பின்னர் மகாநாயக்க தேரர்களின் கருத்துக்களும் மக்களின் நிலைப்படும் ஒரே விதமனதாக அமைந்துள்ள படியினால் இந்த சட்ட மூலம் கொண்டுவரப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பில் ஆழமாக் ஆராய வேண்டிய தேவை இருந்தது.

எவ்வாறாயினும் நாம் மகாநாயக தேரர்களின் நிலைப்பாட்டை மீறி எந்த வேலைத் திட்டங்களையும் முன்னெடுக்க தயாராக இல்லை. அதேபோல் எமது இராணுவத்தை தண்டிக்கும் வகையிலோ அல்லது காட்டிக் கொடுக்கும் வகையிலோ எந்தவித நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாது.

அத்துடன் சர்வதேச விசாரணைகளுக்கு ஒருபோதும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி இடமளிக்கப்போவதில்லை. ஜனாதிபதி தலையீட்டின் மூலமாக பிரதமருக்கு வலியுறுத்தப்பட்ட நிலையில் இவை தடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (செ-11)

# மகா சங்கத்தின...

னருக்கு தெரியப்படுத்தி அவர்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கண்டி ஜனாதிபதி மாளிகையில் நேற்று பிற்பகல் மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட மகா சங்கத்தினருடன் நடைபெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு தொடர்பாக எந்தவொரு இறுதி ஆவணமும் இதுவரை தயாரிக்கப்படவில்லை என வலியுறுத்திய ஜனாதிபதி, புதிய அரசியலமைப்பு பற்றிய கலந்துரையாடல் ஒன்று தற்போது நாட்டில் நடைபெறுகிறது என்றும், அரசினால் அத்தகைய சட்டமூலமொன்று தயாரிக்கப்படுமாயின் நாட்டின் எதிர்கால நன்மை மற்றும் ஸ்திரத்தன்மை தொடர்பாக ஆழமாக ஆய்வு செய்யப்பட்டதன் பின்னரே அது தயாரிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் சமயம் தொடர்பாக மகா சங்கத்தினர் தமது கருத்துக்களையும், புதிய அரசியலமைப்பு தேவையில்லை என்ற ஆலோசனைகளையும் இக் கலந்துரையாடலின் போது முன்வைத்ததுடன், அவை தொடர்பான முன்மொழிவொன்றையும் ஜனாதிபதியிடம் கையளித்தனர். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏகாதிபத்திய ஆட்...

கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் தோல்விய டைந்த ஒரு அரசாங்கம் என சுட்டிக்காட்டி, அபிவிருத்தி குறித்து போலியான பிம்பங்களை ஏற்படுத்தி வருகின்றவர்கள் அன்று அபிவிரு த்தி என்ற பெயரில் மேற்கொண்ட அனைத்து ஊழல், மோசடிகளையும் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த அரசாங்கம் தயாராகவுள்ளது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

2015 ஜனவரி 07 ஆம் திகதி ஜனாதி பதி தேர்தலுக்கு முந்திய தினமான எந்த வொரு அரசாங்க நிறுவனமும் கடமையில் இல்லாத தினத்தில் ஜின், நில்வளா கங்கைத் திட்டத்திற்கு கோடிக்கணக்கில் காசோலை களை வெளியிட்டமை குறித்த கூற்றுக்கு சவால்விட்டு, மோசடி இடம்பெற்றிருக்குமா னால் அதனை தெளிவுபடுத்துவதாகக் குறிப் பிட்டபோதும் அந்த மோசடி தொடர்பிலான விடயங்கள் தற்போது உறுதிப்படுத்தப்பட்டு ள்ளதுடன், அந்த நிதிக்கு என்ன நடந்தது என் பது பற்றி மக்கள் விரைவில் தெரிந்துகொள்ள முடியும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எந்தவிதமான சாத்தியவள ஆய்வுமின்றி அரசியல் தீர்மானங்களின்படி மோசடியாக ஆரம்பிக்கப்பட்ட உமா ஓயா திட்டம் நாட்டு க்கு ஏற்படுத்தியுள்ள அழிவுகள் சாதாரணமா னவையல்ல என்பதுடன் அது தொடர்பான சரியான தகவல்கள் தற்போது மேற்கொள்ள ப்படும் ஆய்வுகளில் இருந்து தெரியவந்திரு ப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும் இந்த நாட்டு மக்களை ஏமாற்று வதற்கு முயற்சித்துவரும் அதிகார வெறி பிடித்த அரசியல் சூழ்ச்சியைத் தோல்வியடை யச் செய்வதற்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, ஆட் சியைக் கவிழ்ப்பதற்காகவன்றி நாட்டையும் மக்களையும் வறுமையிலிருந்து விடுவிப்பத ற்கும் கடந்த அரசாங்கம் விட்டுச் சென்ற கோடிக்கணக்கான கடன் சுமையிலிருந்து நாட்டை விடுவிப்பதற்கும் நாட்டை அபிவிரு த்தி செய்வதற்கும் அனைவரும் ஒன்றுபட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

ஊடகங்கள் இன்று சுதந்திரமாக அரசா ங்கத்தை விமர்சிப்பதற்கும், விரும்பியவர் கள் சுதந்திரமாக ஆர்ப்பாட்டங்களை மேற் கொள்வதற்கும் சுதந்திரத்தை வழங்கக்கிடைத் ததையிட்டு தான் மகிழ்ச்சியடைவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (செ-11)

## மகாநாயக்கர்களு...

பொறுப்பு எனவும் வலியுறுத்தியுள்ளது.

புதிய அரசியல் யாப்பையும் உடனடியாக போனோர் அலுவலகத்தையும் உடனடியாக கைவிடுமாறு மைத்திரி - ரணில் தலைமை யிலான அரசாங்கத்திற்கு சிங்கள பௌத்த மக்களின் மதத் தலைமை பீடங்கள் அனைத் தும் கூட்டாக உத்தரவிட்டிருந்தன.

தற்போதைய மைத்திரி - ரணில் அரசா ங்கம் நல்லிணக்கம் என்ற பெயரில் போலி யான செயற்திட்டத்தை முன்னெடுத்துவருதா கவும் நாட்டின் அனைத்து பௌத்த மத பீடங் களும் இணைந்து குற்றஞ்சாட்டியிருந்தன.

இது தொடர்பில் மக்கள் விடுதலை முன் னணி நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் எழு ப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையி லேயே ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறு ப்பினர் பிமல் ரத்நாயக்க இவ்விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

பௌத்த பீடாதிபதிகள் புதிய அரசியலமை ப்பு தொடர்பாக வெளியிட்டுள்ள கருத்து, பௌ த்த பிக்குகளின் கருத்தேயாகும். புதிய யாப்பு தொடர்பில் கருத்து வெளியிட எவருக்கும் உரிமையுள்ளது. புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதற்கு 2015ஆம் ஆண்டு தேர் தலில் 62 இலட்சம் மக்கள் வாக்களித்துள்ள னர்.

2005இல், 2010இல் அப்போதைய அரசாங்கங்களும் பதவிக்கு வர முன்னர், அரசியலமைப்பு மாற்றம் தொடர்பாக வாக்கு றுதிகளை வழங்கியிருந்தன. ஆனால் அதனை நிறைவேற்றவில்லை. இந்த நிலை யில் பௌத்த பீடாதிபதிகளுக்கு நிலை மையை விளங்கப்படுத்த வேண்டியது அரசா ங்கத்தின் பொறுப்பாகும்.

யாப்பு உருவாக்கப்பணிகள் தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டியது அவசியம். அடிப் படைவாதிகள் பொதுமக்களைத் தவறாக வழிநடத்தாமல் தடுப்பதற்கு, புதிய அரசியல மைப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படு த்த வேண்டியதும் அரசின் கடப்பாடு என அவர் தனது பதிலில் வலியுறுத்தியுள்ளார். (செ-11)

## தேர்தலை தவிர்ப்...

நிறைவடைந்தவுடன் தேர்தல் தொடர்பில் தெளிவான தீர்மானம் ஒன்று வரவுள்ளது.

அப்போதும் அரசாங்கம் தேர்தலை நட த்தாது இழுத்தடிப்புச் செய்வதற்கு முற்படுமா யின் கூட்டு எதிர்க்கட்சி தீர்க்கமான போரா ட்டத்தில் குதிக்கவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவி த்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியின் தேசிய வளப் பாது காப்பு நிலையம் ஏற்பாடு செய்த ஊடகவியலா ளர் சந்திப்பு நேற்று கொழும்பிலுள்ள அப யராம விகாரையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே வாசுதேவ நாணயக்கார இதனைத் தெரிவி த்தார். (செ-11)

## மகிந்த, கோத்தா...

திருக்கின்றார்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று கூட்டு எதிரணியினர் ஊடகவியலாளர் சந்திப் பொன்றை நடத்தினர்.

இதில் கலந்துகொண்ட கூட்டு எதிரணி யின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் தினேஸ் குணவர்தன, வலிந்து காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக் கையை ஏற்றுக்கொள்வதற்கான சட்டமூலத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கான எந்த வொரு அவசியமும் இல்லை என்று தெரிவித் துள்ளார்.

இந்த சர்வதேச உடன்படிக்கையை இலங்கை ஏற்றுக்கொண்டால் நாட்டில் 30 வருடகாலமாக நிலவிய கொடூரமான யுத்த த்தை முடிவுக்கு கொண்டுவந்த, போரை வழி நடத்திய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ அவரது சகோதரரான பாதுகாப்புச் செய லாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் இரா ணுவம் உட்பட அரச முப்படையினரின் உயிர்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் உருவாக் கப்படும் என்றும் தினேஸ் எச்சரிக்கை விடு த்துள்ளார்.

சர்வதேச நீதிமன்றங்களின் குற்றவாளிக் கூண்டில் நிற்பதற்காக, நாட்டை படையினர் உயிரைத் தியாகம் செய்து காப்பாற்றவி ல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்படுவதிலி ருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையை ஏற்றுக்கொண் டால் நாட்டின் சுதந்திரத்திலும் இறையாண் மையிலும் சர்வதேசம் தலையிடும் நிலை மையும் ஏற்படும் என்றும் கூட்டு எதிரணி யின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் தினேஸ் குணவர்தன எச்சரிக்கை விடுத்துள் ளார். இதனால் அரசாங்கம் உடனடியாக குறித்த சட்டமூலத்தை கைவிட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

எவ்வாறாயினும் நேற்றைய தினம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருந்த வலிந்து காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான சர்வ தேச உடன்படிக்கையை ஏற்றுக்கொள்வத ற்கான சட்டமூலம் சமர்ப்பிக்கப்படவில்லை.

குறித்த சட்டமூலத்தில் சில திருத்தங் களை மேற்கொள்ள வேண்டிய தேவை எழு ந்துள்ளதால் நேற்றைய தினம் திட்டமிட்டபடி இந்த சட்டமூலத்தை சமர்ப்பிக்க முடியாது போய்விட்டதாக அரசாங்கம் நாடாளுமன்றில் அறிவித்துள்ளமை குறி ப்பிடத்தக்கது. (செ-11)

## 2 ஆயிரம் பேருக்கு...

நாட்டின் மிகப்பெரிய மாற்று சக்தி மின் உற்பத்தி நிலையத்துக்கான வேலைத் திட் டத்தை கிளிநொச்சியில் நேற்று வியாழக்கி ழமை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் மிகப்பெரிய மாற்று சக்தி மின் உற்பத்தி நிலையமாக குறித்த திட்டம் அமைய உள்ளது, இந்த திட்டத்தில் வடக்கில் உள்ள 2ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

மின்கட்டணத்தை முடிந்தால் அதிகரிக் காமல் பாருங்கள் என பலர் சவால் விட்டுள் ளனர். குறித்த திட்டங்கள் நிறைவு பெற்றதும் இயலுமானவரை கட்டணத்தினை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த திட்டத்தின் மூலம் அதிகளவான மின் உற்பத்தி கிடைக்கும், 24 மணிநேர மும், 365 நாட்களும் காற்று மற்றும் சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தியை பெற்றுக்கொ ள்ள கூடிய பிரதேசமாக இது காணப்படுகின் றது என அவர் தெரிவித்தார். (செ-11)

## 5 பொலிஸாரின்...

ந்த சம்பவம் தொடர்பில் கைதாகியுள்ள சந்தேகநபர்களான ஐந்து பொலிஸ் உத்தி யோகத்தர்களின் பிணை கோரிக்கையை யாழ். மேல் நீதிமன்றம் நேற்று நிராகரித்து ள்ளது.

சந்தேகநபர்களான பொலிஸ் உத்தியோ கத்தர்கள் ஐவர் சார்பாக தாக்கல் செய்யப்பட்ட பிணை கோரிக்கை யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று பரிசீலனைக்கு எடுத் துக்கொள்ளப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர்களின் மர ணம் தொடர்பில் நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெறும் விசாரணைகள் நிறைவுபெறாது மேல் நீதிமன்றம் தலையிடமாட்டாது என்றும், இதுவரை புலன் விசாரணைகள் நிறைவு பெறவில்லை என்பதால் துப்பாக்கிகள் தொடர் பான இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை கிடை க்கப்பெறவில்லை என்றும் சுட்டிக்காட்டிய நீதிபதி இளஞ்செழியன், சந்தேக நபர்களின் பிணை கோரிக்கைகளை நிராகரித்தார்.

மேலும், சந்தேகநபர்கள் சார்பாக அவர்க ளின் மனைவிமார் மற்றும் உறவினர்க ளால் தாக்கல் செய்யப்பட்ட பிணை கோரி க்கை மீதான விசாரணையை ஆகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி வரை யாழ். மேல் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

2016 ஆம் ஆண்டு, ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக மாண வர்கள் இருவர் மோட்டார் சைக்கிளில் பய ணித்தபோது, அவர்கள் மீது மேற்கொள்ளப் பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் மாண வர்கள் இருவரும் உயிரிழக்க நேரிட்டது.

இந்த சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள பொலிஸ் உத் தியோகத்தர்கள் ஐவரும் கடந்த 8 மாதங்க ளாக யாழ். நீதவான் நீதிமன்ற உத்தரவின் பேரில் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (செ-11)


**வீடு வாடகைக்கு**

பலாலி வீதி உரும்பிராயில் (ஒஸ்கா லேன் அருகில்) சகல வசதிகளுடன் கூடிய புதிய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0770690275

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

070 330 5500 (C-8965)

அண்ணா அன் கோ

976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com

லண்டனுக்கு (UK) 5kg க்கு மேல் மிகக் குறைந்த கட்டணம்

லண்டன் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | நல்லூர் | சாவகச்சேரி | மீசாலை | மல்லாவி | முல்லைத்தீவு | கிளிநொச்சி | திருகோணமலை | வவுனியா

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**

UK-550/=Kg

DELIVERY IN 3 - 5 DAYS (C-8920)

V2 TRAVELS-0768226240

யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

**கணக்கீடு**

A/L 2018 பங்குடமை

ஆரம்பம் இன்று 4 p.m.

A/L 2019 தேர்ச்சி- 04

ஆரம்பம் இன்று 5 p.m.

S.தவா

SHAMROCK

ஈச்சமோட்டை

(9703)

**கணக்கீடு**

A/L 2018 பங்குடமை

ஆரம்பம் நாளை 12 மணி

A/L 2019 தேர்ச்சி- 04

ஆரம்பம் நாளை 1 p.m.

S.தவா

NIRU

கோண்டாவில்

(9703)

**வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் பிரபலமான நியூ மைதிலி ஜுவலரியில் கீழ்வரும் பதவிகளுக்கு வேலைவாய்ப்பு உண்டு.

- கணக்காளர்
- சேல்ஸ்மேன்/சேல்ஸ் கேர்ள்
- உதவியாளர்

01. கணினி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
02. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை.
03. ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளவர்கள், தகைமையுள்ளவர்கள் கீழ்வரும் முகவரியில் உள்ள எமது ஜுவலர்ஸுக்கு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.30 தொடக்கம் 10.00 மணி வரை அல்லது மாலை 4.30 தொடக்கம் 6.30 மணி வரை நேரடியாக சான்றிதழ்களுடன் வரவும்.

தங்கி நின்று வேலை செய்வோர் விரும்பத்தக்கது.

நியூ மைதிலி ஜுவலர்ஸ்

இல.38,40 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (A-8979)

BIT Semester 2, 4, 6 & Project Classes

கொழும்பு பல்கலைக் கழகத்திடமிருந்து கணினி பட்டம் 2nd Upper உட்பட இதுவரை 65 இற்கும் மேற்பட்டோர் BIT பட்டம் பெற்றுள்ளனர். 11 வருட கற்பித்தல் அனுபவம்

Windows based, Web based & Mobile based Project classes

By: T.Tharmmendra (BIT, MCSE, MBCS)-0779785796

Semi 2: on Sat 1.30 pm, Semi 4: on 29-Jul at 9.30am, Semi 6: on 5-Aug at 7.30am

சகல விதமான IT மற்றும் Programming வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

#28/23, Manaltharai Lane, Kandarmadam, Jaffna. (9712)

ECONOMICS HALL

நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (புகையிரத கடவை அருகில்)

மாபெரும் பொருளியல் கருத்தரங்கு

ஆசிரியர் R.தர்ஷன் (9705)

யூலை 10 - யூலை 25 வரை (50 மணித்தியாலங்கள்)

500 M.C.Q (பல்தேர்வு வினாக்கள்) 20 வருடகால பரீட்சை வினாக்கள் உயர்ந்த விளக்கத்துடன் K-AIMS உடைய மாதாந்த சஞ்சிகைகளில் ஆக்கங்களை வழங்கி வருகின்ற ஆசிரியர் சுடந்த காலத்தில் மாவட்ட நிலை 1,2 அடங்கலாக உயர் பெறுபேற்றுக்குக் காரணமானவர்.

வெளி மாணவர்களும் பங்குபற்ற முடியும்


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org